79

DIGITIZED

119960

A. M. D. G.

முத்திப்பேறுபெற்ற

# ஜான் மரி வியான்னி

## கூரே தார்ஸ்

## சரித்திரம்.

(BLESSED CURÉ D'ARS.)

Ego Sum Pastor Bonus.

நானே நல்ல மேய்ப்பன். (அரு. X. 14.)

TRICHINOPOLY:
ST. JOSEPH'S COLLEGE PRESS.

1908.

OF THE REGISTRAR ... REGISTERED 26 OCT 1908

Nihil obstat L. BESSE, s.J., cens. dep.



Imprimatur :

+ JOANNES-MARIA, s.J.,

*Ep. Trichinopolit.*

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 28 OCT 1908 MADRAS

# முகவுரை.

சர்வ வல்லபமுள்ள சர்வேசுரன், பென்னம் பெரிய காரியங்களைச் செய்து முடிப்பதற்காகச் சின்னஞ்சிறிய எத்தனங்களைத் தெரிந்துகொள்ளுவது வழக்கம். அப்படியே பன்னிரு படிப்பற்ற ஏழைச் செம்படவர்களைத் தமது அப்போஸ்தலர்களாகத் தெரிந்தெடுத்து அவர்கள் வழியாய் சத்திய திருச்சபையை நிலைநாட்டினர். 'பலமானவைகளை நாணச்செய்ய பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமுண்டானவர்களை ஆசனத்திலே நின்று தள்ளித் தாழ்ந்தவர்களை உயர்த்தினர்.'

இதுபோலவே, 19-ம் நூற்றாண்டில் தோன்றின கற்றறி மோழைகளையும், அரைப்படிப்போடு அம்பலம் ஏறப்பார்த்த போலி சாஸ்திரிகளையும் நாணச்செய்யும்படி ஒரு ஏழைக் குருவானவரைத் தெரிந்தெடுத்தார். அவர் பெயர் ஜான் மரி வியான்னி. நாற்பத்தொரு வருஷகாலம் தொடர்பாய் ஆர்ஸ் என்னுஞ் சிற்றூரில் இவர் பங்குவிசாரணைக் குருவாயிருந்தபடியால் கூரேதார்ஸ் என்கிற நாமகரணமே எங்கும்

பிரபலியமாயிற்று. கூதோர்ஸ் என்னும் பதங்களுக்கு ஆர்ஸ் ஐயர் பங்குசுவாமி என்றருத்தம். நாலுபாஷையிலும் இந்நாமம் வழங்கி வருகிறபடியினால் நாமும் அப்பெயரைத் தமிழில் வேறுவிதமாய் மாற்றவில்லை.

முத். கூதோர்வின் சரித்திரத்தைப் பிராஞ்சிய பாஷையில் முதன்முதல் எழுதினவர், அவருடைய உற்ற நண்பரும் உதவிக்குருவுமான சங். மொனேன் என்பவரே (Abbé Monin).

இப்புஸ்தகத்தையே நாம் ஆதாரமாகக்கொண்டு இச்சரித்திரத்தைச் சங்க்ஷேபமா யெழுதினோம். இதில் அர்ச்சியசிஷ்டவருடைய உள்ளரங்க சீவியமும் வெளியரங்க நடபடிக்கைகளும், செய்த புதுமைகளும், பிரசங்கித்த அமிர்த பிரசங்கங்களும், பாவிகளை மனந்திருப்பின வாலாயகளும் அடங்கியிருக்கிறபடியால் இது துறவறத்தாருக்கும் இல்லறத்தாருக்கும் ஆத்மார்த்தமான பிரயோஜனமா யிருக்குமென்று நம்புகிறோம்.

St. Mary's Kurseong }
29-9-1908. }

T. ROCHE, S.J.



முத். ஜான் மரி வியான்னி,

ஆர்ஸ் ஊர் பங்கு சுவாமியார்.

A. M. D. G.

# முத்திப்பேறுபெற்ற கூரோதார்ஸ் சரித்திரம்.

## பிறப்பும் குழந்தைப் பருவமும்.

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிறான். நான் என் ஆடுகளை அறிவேன்; என் ஆடுகளும் என்னை அறியும்" என்று உருவகமாகத் தம்மைக்குறித்து சுவிசேஷத்தில் பேசின திவ்விய கர்த்தர், இடையர்கள்பேரில் விசேஷ அன்புகூர்ந்து வருகிறாரென்பது பிரசித்தமான காரியம். அவதரித்த ஆண்டவரை முதல்முதல்கண்டு ஆராதிக்கப் பாக்கியம்பெற்றவர்கள் இடையர்களே. அர்ச். வின்சேந்தி சின்னப்பர், அர்ச். ஜெர்மேன், இன்னம் அநேக அர்ச்சியசிஷ்டவர்களும், மகாத்துமாக்களும், தங்கள் ஜீவியகாலத்தில் ஆடுமாடு மேய்த்தவர்கள்.

19-ம் நூற்றாண்டில் ஜீவித்து, சுமார் 50 வருஷங்களுக்கு முன்னால் மரணமான முத். கூரோதார்ஸ் என்பவரும் ஆடுமாடுகளை மேய்ப்பதி

னும், உழுது பயிரிடுகிறதினும் உத்தியோகமாயி
ருந்த தாய் தந்தையர்களிடத்தில் பிறந்தவர்.
அவருடைய தகப்பனார் பேர் மத்தியூ வியான்
னி, அவருடைய தாயார் பேர் மரிபெலூஸ்.
இருவரும் தங்கள் முன்னோர்களிடத்திலிருந்து
பிதிரார்ஜித சொத்தாய் அடைந்தது திரண்ட
ஐசுவரியமல்ல, பெருத்த காணியாட்சி அல்ல.
அவர்களுடைய புண்ணியங்களே அவர்களு
டைய தாயபாகமாயிருந்தது.

வியான்னி என்பவருடைய வீடு ஏழை எளி
யவர்களுக்குத் தஞ்சமாயிருந்தமையால், நாள்
தோறும் இருட்டிப்படுகிற வேளையில் அவர்கள்
இங்குவந்து அவர்களுக்காக முஸ்திப்புச் செய்
யப்பட்டிருக்கும் போஜனத்தை அருந்தி, பலர்
அங்கேதானே இராக்காலங்களில் மாட்டுத்தொ
ழுவத்தில் நித்திரை செய்வார்கள்.

அப்படியே 1770-ம்௵ ஜூலை-மீ ஓர் ஏழை
ப்பரதேசி இந்த வீட்டுக்கு வந்து கதவைத்
தட்டி, இராவைப்போக்க இடங்கேட்டார்.
அவருக்கு வீட்டில் இடங்கொடுக்கும்போது
வியான்னியென்பவர் ஓர் அர்ச்சியசிஷ்டவரை ஏற்
றுக்கொள்ளுகிறதாகச் சற்றேனும் நினைக்கவி
ல்லை. ஏற்றுக்கொள்ளப்பட்டவர் அர்ச். ஆசீர்
வாத சூசையப்பர் லாபிரேயன்றி வேறல்ல.



“அர்ச்சியசிஷ்டவர்கள் போகிற இடமெல்
லாம் சர்வேசுரனும் கூடப்போகிறார்” என்பது
மூத். கூரோதார்ஸ் என்பவருடைய வாக்கியம்.
அர்ச். லாபிரே, வீட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட
வருஷத்திலேதானே ஜான் பாப்திஸ்த் வியான்
னி பிறந்தபடியால், மேற்கூறிய தர்மத்தின் பல
னாக ஓர் அர்ச்சியசிஷ்ட குழந்தை பிறந்ததென்
கலாம்.

வியான்னி என்பவருக்கு ஆறு குழந்தைகள்,
இரண்டாவது பிள்ளை பிறக்குமுன்னே, அவரு
டைய மனைவி சர்வேசுரனையும் பரிசுத்த தேவ
தாயாரையும் நோக்கி அடிக்கடி பிரார்த்தித்தது
என்னவெனில்: தேவசித்தமானால், பிறக்கப்
போகிற குழந்தை தேவ ஊழியத்துக்கே ஒப்
புக்கொடுக்கப்படும் என்பதே.

ஜான் மரி வியான்னி 1786-ம்௵ மே-மீ
8-உ பிறந்தார். பிள்ளை பிறந்தவுடனே, வீட்
டிலுள்ள ஓர் கண்ணோட்டக் கிழவி வெளியே ஓடிப்
போய், நக்ஷத்திரங்களைப் பார்த்துவிட்டு, வீட்
டுக்குள் திரும்பிவந்து, பெரிய சோதிட சாஸ்
திரியைப்போல் சொல்வாள்: இந்தப் பிள்ளை
ஒன்றில் பெரிய அர்ச்சியசிஷ்டவராகும், அல்ல
து பெரும் போக்கிரியாகும்.

இந்த வார்த்தைகளைச் செவியுற்ற மாத்திரு வியான்னி கிழவியைக் கோபித்து, வருங்காரியம் சுவாமி ஒருவர் மாத்திரம் அறிவார், நக்ஷத்திரங்களைக்கொண்டு பின்நடக்க இருக்கும் சம்பவங்களை அறியலாமென்று சொல்லுகிறது அசத்தியமாய் என்று சொல்லி அவளைக் கண்டித்தார்.

ஆயினும் தாயானவள் கிழவி சொன்ன வார்த்தைகளைக் கேட்டது முதல், பிள்ளை என்னமாய் வளரப்போகிறதோ, நல்லவனாய் வளருவானோ, அல்லது துஷ்டனைப் போலாவானோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். பிள்ளைக்கு 18 மாதமானதும், சேசு, மரி, சூசை என்கிற திருநாமங்களைப் பக்தியுடன் உச்சரிக்கவும், மூன்று வயது நடக்கும்போது, வீட்டின் ஓர் மூலையில் கைகுவித்து ஜெபம்பண்ணுகிறதையும், திரிகாலச் செபத்துக்கு மணியடித்தவுடனே, எந்த இடத்திலிருந்தபோதிலும், உடனே முழங்காலிலிருந்து ஜெபஞ்செய்கிறதையும், பார்த்த தாயானவள் உள்ளம் பூரித்து, தனக்குள்ளே சொல்வாள்: "என் மகன் ஜான் மரி அர்ச்சியஷ்டவனாவான்."

பிற்காலத்தில் இவர் குருவாயிருந்தபோது ஜனங்கள் இவரிடத்திலுள்ள ஜெபத்தியானத்தைக் குறித்துப் பேசும்போது, மாறுத்தர



சர்வேசுரனுக்கு
மாகச் சொன்னதாவது: ள்ள சகலத்தைக்
இரண்டாவது என்னிடத்தி அதிகாலையில்
ம் காரணம் என் தாய்தான் தார் சகோதரி
தாயார் என்னையும் என் சகோ ங்கள் எல்லோ
க்களையும் எழுப்பினவுடனே, ந ள முழுவதும்
ரும் முழங்காலிலிருந்து, எங்க செய்வாள்.
சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்க தயத்திலி
புண்ணியமானது தாயினுடைய இரு
குந்து பிள்ளைகளுடைய இருதயங்களு
போகிறது. பக்தியுள்ள தாய்க்குப் பக்தியுள்ள பிள்ளை; திருட்டுத் தாய்க்குத் திருட்டுப்பிள்ளை. துஷ்டத் தாய்க்குத் துஷ்டப்பிள்ளை. பிள்ளையானது தாயினுடைய உதரத்தின் கனியானபடியால், பிள்ளையினிடத்தில் தாயுடைய நற்குணங்கள் அல்லது தீக்குணங்கள் காணப்படுவது ஆச்சரியமில்லை.

ஜான் மரி அவருடைய தாயாரிடத்தில் பெற்றுக்கொண்ட முதல் வெகுமானம் தேவமாதாவின் சின்ன ஓர் சுரூபம். அறுபது வருஷத்துக்குப்பிறகு இதைப்பற்றி அவர் சொன்னது: "ஓ! அந்த சுரூபம் என்னுடைய பொக்கிஷம். [illegible] எப்போதும் என்னோடி இரா[illegible] நான் படுக்கையில் அந்தச் [illegible]இருப்பேன். [illegible]ரூபம் இல்லாவிடின், நான் தூங்கமாட்டேன்."

சிறு குழந்
அவர் பரிசுத்த தையாயிருக்கும்போது தாமே
பக்தியுள்ளவரா தேவமாதாவின்பேரில் விசேஷ
ஸள் யாதொன்று இருந்தார். "தேவ அன்ட
லேயே நான் சரியாய் அறிவதற்கு முன்னே
றுவனாயிருந் வளை சேவிக்கத் துவக்கினேன்
த்தியான ஓ தம்போது என்னிடத்தில் சேர்
சகோதரி ஜெபமாலை இருந்தது. என்
கொ படியாலது அதை அவளுக்குக்
க்கவேணுமென்று கேட்டாள். அதை
விட்டுப்பிரிய என் மனம் ஒப்பவில்லை. இது
தான் என்னுடைய முதல் தொந்தரவு. அம்
மாளிடம் நாங்கள் இருவரும்போக, அவர்கள்
ஜெபமாலையை என் சகோதரிக்குக் கொடுக்க
வேணுமென்று தீர்ப்புச் செய்தார்கள். நான்
கீழ்ப்படிந்தேன். ஆனால் அந்தச் சமயத்தில்
நான் சிந்திய கண்ணீர் கொஞ்சமல்ல" என்று
பிற்காலத்தில் அவர் தாமே சொல்லியிருக்கிறார்.

நாலு வயது நடக்கும்போது ஒருநாள் இவ
னை எங்கும் தேடியும் அகப்படவில்லை. தாயார்
பார்க்காத இடமெல்லாந் தேடி அலைந்துதிரிந்
து, கடைசியாய் மாட்டுத் தொழுவத்திலுள்
ளே போய்ப் பார்க்கும்போ [illegible] மூலையில்
முழங்காலிலிருந்து ஜெபஞ்செய்துகொண்டிரு
க்கிறதைக் கண்டாள். உள்ளத்தில் மகிழ்ச்சி



டைந்தபோதிலும், வெளியில் அதைக் காண்
பியாமல் பையனை கடுகின முகமாய்க் கண்டோ
ஷி, "என்ன மகனே, இப்படித்தானா செய்கி
றது? ஏன் போய் ஆடுமாடுகளுக்கு மத்தியில்
ஒழிந்துகொண்டாய்? எங்கேயெல்லாம் இப்
போ உன்னைத் தேடிப்பார்த்தேன்" என்ற
ஜான் மரி தாயாரைக் கட்டிக்கொண்டு "அம்
மா, பொறுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு
இதனால் கஸ்தி வருமென்று எனக்குத் தெரி
யாது. இனிமேல் நான் அங்கே ஒருபோதும்
போகமாட்டேன்" என்றார். வயது வந்தவும்
இடப்பிள்ளைகள் ஆடுமாடுகளை மேய்க்கிறது
போல இவரும் மூன்று ஆடுகளையும் ஒரு கழு
தையையும் மேய்க்கக் கூட்டிக்கொண்டுபோ
வார்.

அவர் இருந்த தார்தில்லி (Dardilly) என்
கிற கிராமத்துக்குச் சமீபத்தில் ஷாந்தெமெர்ல்
(Chante-merle) என்ற ஓர் செழிப்பான கண
வாய் ஒன்றிருக்கிறது. ஜான் மரி ஆடுகளை
மேய்க்கக் கொண்டுபோகிற இடம் இதுவே.
இவர் கையில் ஓர் கோலும், மார்போடு தேவ
மாதா சுரூபத்தை அணிந்துகொண்டும் வருவ
தைக் கண்ட மற்ற இடைப்பிள்ளைகள் இவருக்கு
எதிராய்ப் போவார்கள். நிழல் அடர்ந்த ஓர்

பெரிய மரத்தண்டை எல்லாரும் கூடினதும், ஜான் மரி தேவமாதா சுரூபத்தை உயர்ந்த ஓர் இடத்தில் வைத்துவிட்டு, எல்லாரும் முழங்காலிலிருந்து ஓர் பிரியதத்த மந்திரம் சொன்ன



வுடன் எழுந்திருந்து தேவமாதாவின் பத்தியைக்குறித்து பிரசங்கிக்கத் துவக்குவார். பிரசங்கம் கொஞ்சம் நீளமாயிருந்ததானால், மற்றப்பிள்ளைகள் சில சமயங்களில் மெதுவாக அவ்விடத்தைவிட்டு நழுகிவிடுவார்கள். அந்தச் சமயங்களில் எப்படி அவருடைய பாதுகாவலான ஸ்நாபக அருளப்பர் வனாந்தரத்தில் பிரசங்கித்தாரோ அப்படியே இவரும் பிரசங்கிப்பார்.



பங்கு சுவாமியாராயிருக்கும்போது அவர் அடிக்கடி சொல்லிவந்ததாவது: சிறு பருவத்தில் நான் மண் வெட்டியும் கடப்பாரையுங் கொண்டு வயலில் வேலைசெய்யும்போது, ஆ, நான் எவ்வளவோ சந்தோஷமுள்ளவனாயிருந்தேன்; நான் தன்னந்தனியே வேலைசெய்யும்போது உரத்த சத்தமாய் ஜெபம் செய்வேன். யாராகிலும் கூடயிருந்தால் மனதுக்குள்ளே வேண்டிக்கொள்வேன். பாலிய பிராயத்தில் நான் நிலத்தை வெட்டித் திருத்தி உழுதேன் என்று சொல்ல எனக்கு சங்கோசமில்லை. நான் படிப்பில்லாத ஓர் ஏழைக்குடியானவன்தான். பூமியை மண்வெட்டியைக்கொண்டு வெட்டி சாகுபடி செய்யும்போது, எனக்குள்ளே சொல்லிக்கொள்ளுவது என்னவெனில்: "ஜான் மரி, நீயும் உன் ஆத்துமத்திலுள்ள பாவக் களைகளைப் பிடுக்கெறிந்துவிட்டு, நல்ல மணிகளாகிய புண்ணியங்களைத் தெளித்து வளரச்செய்ய வேண்டும்."

சாகிறதற்கு ஒரு மாதத்திற்கு முன்னே புன்சிரிப்புடன் அவர் உரைத்தது: ஓ! பாக்கியமான நாட்கள்! அப்போ என்னுடைய மூன்று ஆடுகளையும், ஓர் கழுதையையும் மாத்திரம் நான் மேய்க்கவேண்டியிருந்தது! ஐயோ! என்

னுடைய கழுதையா, பழுத்த கிழவனாய் நல்லாக்குப்போய், முப்பது வருஷம் நிறைந்ததின் பின் மாத்திரம் இறந்தான்!! அந்த நாட்களில் ஜெபம் சொல்லுகிறதற்கு எனக்கு வேண்டிய நேரம் இருந்தது. இப்போதுபோல என் தலை பாரமாயிருக்கவில்லை. எவ்வாறு தெள்ளிய நல்ல ஜலம் விரைந்தோடுமோ, அதுபோல என்னுடைய பாலிய நாட்களும் ஒன்றன்பின் ஒன்றாய்க் கடந்தது.

பிரெஞ்சு பாஷையில் இவருடைய சரித்திரத்தை எழுதிய மொனென் (M. Monnin) என்பவர் சொல்லுகிறதென்னவெனில், ஜான் மரி குழந்தையாயிருக்கும்போது, சர்வேசுரனுடைய இராச்சியம் நமக்குள்ளே இருக்கிறதென்று தீர அறியப் பாக்கியம் பெற்றார். நற்கருத்தாகிற வித்தையால், நாம் செய்யும் மண்ணையொத்த அற்பக் காரியங்களும், பத்தரை மாற்றுத் தங்கமாய் மாறிவிடுகிறதல்லவா? ஒரு செம்புத் தண்ணீரை நற்கருத்துடன் கொடுத்தால் நித்திய சம்பாவனை உண்டென்று திவ்விய கர்த்தர் சொல்லவில்லையா? கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் சொல்லியிருக்கிறதுபோல, "இவர் அதிகம் செய்தார், ஏனெனில் அதிகம் நேசித்தார்.



இவர் அதிகம் செய்தார், ஏனெனில் செய்ததை நன்றாய்ச் செய்தார்."

## வாலிபப் பிராயத்தில் அவருக்கு நேரிட்ட இடைஞ்சல்கள்.

18-ம் நூற்றாண்டின் இறுதியில், பிரான்சு தேசத்தில் உண்டான குழப்பமும், சண்டை சச்சரவும், வேத கலாபனையும், இம்மாத்திரமென்று வாக்கினால் சொல்லுந்தன்மையல்ல. 1793-ம் ௵ ஜனவரி-௴ 21-உ குழப்பக்காரர்கள், 16-ம் லூயிஸ் இராஜாவை அநியாயமாய்ச் சிரச்சேதஞ் செய்தார்கள். அதன்பிறகு அந்தப் படுபாவிகள் இரத்தத்தைக் குடித்த வேங்கைகள்போல அவருடைய மனைவியாகிய மரி அந்துவானத் (Marie-Antoinette) இராக்கினியையும், இன்னம் அநேக இராஜகுல ஸ்திரீ புருஷர்களையும் கொன்றார்கள். இந்தப் பஞ்சமா பாதகர்கள் அத்தோடு நிற்காமல், கோவில்களைக் கொள்ளையடிக்கவும், குருக்களை நிந்திக்கவும், உபாதிக்கவும், கொல்லவும் துணிந்தார்கள். அந்தக்காலத்துக்கு இந்நாள்வரையில் "பயங்கர இராச்சியபாரம்" (Reign of Terror) என்றே வழங்கிவருகிறது.

திருச்சபையின் ஆதித் துவக்கத்தில் வேத கலாபனை நடக்கும்போது எவ்வாறு சத்திய மறைக் குருக்கள் கானகங்களிலும் ஒதுக்கிடங்களிலும் ஒழிந்துகொண்டு கிறீஸ்துவர்களுக்கு நன்மை செய்துவந்தார்களோ அவ்விதமே இந்தப் பயங்கரகாலத்தில், அநேக குருக்கள் மாறுவேஷம் பூண்டுகொண்டும் இரகசியமான இடங்களில் இருந்துகொண்டும் கிறீஸ்துவர்களுக்கு வேண்டியிருந்த ஆத்தும காரியங்களை நிறைவேற்றி வந்தார்கள்.



இந்தப் பயங்கரமான காலத்தில் ஜான் மரி முதல் தடவை சம்மனசுக்களின் அப்பத்தை அருந்தப் பாக்கியம் பெற்றார். அதெப்படி



யெனில் வேத விரோதிகள் கையில் அகப்படாதபடி ஓர் குருவானவர் வைக்கோல்போர் நிறைந்த ஓர் களஞ்சியத்தில் திவ்விய பலிப்பூசை நிறைவேற்ற, அப்பூசையில் ஜான் மரி மகா பக்தி உருக்கத்துடன் புதுநன்மை வாங்கினார்.

19-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் நெப்போலியன் ஜெயத்துக்குமேலே ஜெயங்கொண்டு கடைசியாய் பிரான்சுதேசத்து சக்கிரவர்த்தியானான். ஆகவே அந்தக் காலத்தில் திருச்சபையை ஆண்டு நடத்திவந்த 7-ம் பத்திநாதரென்னும் அர்ச். பாப்பானவருக்கும், சக்கரவர்த்திக்கும் ஓர் பெரிய உடன்படிக்கை (Concordat) நடந்தது. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக பிரான்சுதேசத்தில் திருச்சபை விஷயத்தில் ஒழுங்குபடுத்திவந்தது இந்த உடன்படிக்கைச் சட்டங்களே.*

நெப்போலியன் சக்கரவர்த்தி சில காரியங்களில் முற்றிலும் தவறிப்போனபோதிலும், அவ

* இப்போ இந்த உடன்படிக்கையை யாதொரு நீதி நியாயமின்றி, அர்ச். பாப்பானவருடைய அநுமதியில்லாமல் முறித்து, திருச்சபையின் சுதந்தரங்களையெல்லாம் தறுதலைகளான கிளேமான்சோ, கோம், பிரியான் என்கிறவர்கள் பறித்துவிட்டு திருச்சபையை அலைக்கழித்து வருகிறார்கள்.

ளுல் திருச்சபைக்கு பல சுதந்தரங்கள் கிடைத்தது என்பது வாஸ்தவம். கலகக்காரர்கள் ஒழியவே கோவில்கள் திறக்கப்பட்டன; கன்னியாஸ்திரிமார்கள், குருக்கள், திரும்பி தங்கள் மடங்களுக்கு வந்துசேர்ந்தார்கள்.

அப்படித் திரும்பி வந்தவர்களுக்குள் பாலி என்கிற குருவானவர் ஒருவர். (Abbè Balley) ஜான்மரி வியான்னி இருந்த கிராமத்துக்கு அருகாமையிலுள்ள எக்குலி என்கிற பட்டணத்துக்கு இவர் பங்குசுவாமியாக நியமிக்கப்பட்டது வியான்னி குடும்பத்தாருக்கு பெரும் அதிர்ஷ்டம். இந்த அர்ச்சியசிஷ்ட குருவானவர் காலைதோறும் மகா பக்தி விநயத்துடன் திவ்ய பலிபீடத்தில் பூசை செய்வதைக் கண்ணுற்ற வாலிபன் ஜான் மரி தனக்குள்ளே சொல்வான்: "நானும் குருவானவர் ஆவேன். குருவானவரானால் அநேக ஆத்துமாக்களை இரட்சித்து நல்ல ஆண்டவருக்குக் கொடுப்பேன்."

புதுநன்மை வாங்கினதும் ஜான்மரி தன் தாய் தந்தையரிடம் தனது அழைத்தலைக்குறித்துப் பேச, அவர்கள் "உனக்கு வயசு சொற்பம், பின்னிட்டு பார்த்துக்கொள்ளலாம்" என்று சொன்னார்கள். அவரோவெனில், மனந்தளராமல் தமதழைத்தலை சுவாமி கையில் ஒப்ப-



டைத்துவிட்டு, அவர் தம்மைத் தெரிந்துகொள்ளும்வரையில் அதற்காக இடையறாது ஜெபஞ்செய்து வந்தார். பிற்காலத்தில் அழைத்தலுள்ள வாலிபர்களுக்கு அவர் கொடுத்த ஆலோசனையும் இதுவே.

சங். பாலி சுவாமியார் ஜான் மரியுடைய படிப்பு விஷயத்தில் தாம் உதவி செய்வதாக வாக்களிக்கவே, அவருடைய பெற்றோர்கள் அதற்கிணங்கி அவரை எக்குலி என்கிற பட்டணத்துக்கு அனுப்பினார்கள். அங்கேபோய்ச் சேர்ந்ததும் அவருக்கு ஒரு பெரிய இடைஞ்சல் நேரிட்டது. குருப்பட்டத்துக்கு படிக்க மிக்க ஆசையிருந்தபோதிலும், அதற்குத் தகுந்த சாஸ்திரங்களைப் பயில இவரிடத்தில் மனதத்துவமில்லை. இவருக்கு அர்ச்சியசிஷ்டவர்களுடைய சாஸ்திரம் ஒன்றுதவிர, மற்றெந்த [illegible]ஸ்திரமும் தெரியாது. இலத்தீன் பா[illegible]யக் கற்றுக்கொள்ளுகிறதே கஷ்டமாயி[illegible]து. இது அவருக்கு ஓர் பெரிய சிலுவை. [illegible]ன்ன செய்கிறது? ஒருநாள் அவருக்கு ஓர் நல்ல யோசனை வந்தது. அதாவது: தமக்கு அவசியமான கல்வியைக் கொடுக்கும்படி அர்ச். இராசேந்திர அருளப்பர் (St. Francis Regis, S.J.) கல்லறையிருக்கிற லாலுவே என்கிற இடத்துக்கு

கால்நடையாய் நடந்துபோவதாக நேர்ந்துகொண்டார். சுவாமியாருடைய அநுமதியின்மேல் அவ்விடம் கால்நடையாய் நடந்துபோய், அர்ச். இராசேந்திர அருளப்பர் கல்லறையில் வெகுநேரம் ஜெபித்தார். அவருடைய வேண்டுகோள் வீணாய்ப்போகவில்லை.

குருப்பட்டத்துக்கு அவசரமான கல்வியை அர்ச். இராசேந்திரர் இவருக்களித்தார். அன்றுதுவக்கி மரணபரியந்தம் ஜான்மரி இவர்பேரில் விசேஷ பக்தி வைத்திருந்தாரென்பது ஆச்சரியமில்லை.

நாலைந்து வருஷமாக கொஞ்சம் கொஞ்சமாய்க் கற்றுக்கொண்டு வந்தவருக்கு, 1809-௵ ஓர் பெருத்த துன்பம் நேரிட்டது. அதென்னவெனில், இவர் பேயன் பட்டணத்திலுள்ள பட்டாளத்துக்குப் போய்ச் சேவிக்கவேணுமென்று (Conscription) கட்டளை வந்தது. இதைக் கேட்டதும் வீட்டார் எல்லாருக்கும் இடிவிழுந்தாற்போலிருந்தது. இவர் ஒருவர் மாத்திரம் தமது கஸ்தியை வெளியில் காட்டாமல் உள்ளே அடக்கிக்கொண்டு, மலர்ந்த முகத்துடனிருந்தார். ஆனால் புறப்படுந்தருணத்தில் அவர் தமது உள்ளுணர்ச்சிகளை வெளியிற் காட்டாதபடி செய்த வலுவந்தத்தினால்



வியாதிப்பட்டு, பேயன் பட்டணத்துக்குப் போகக்கூடாததைக் கண்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அவரை லயன்ஸ் பட்டணத்து வைத்தியசாலையிற் கொண்டுபோய்ப் போட்டார்கள். இரண்டு வாரத்திற்குப் பிறகு கொஞ்சம் சௌக்கியமானபடியால், பிரயாணஞ் செய்ய சக்தியிருக்கிறதாகக்கண்டு அவரை வழி நடந்துபோகக் கற்பித்தார்கள். ஆனால் ரோவான் பட்டணத்துக்கருகாமையில் வந்ததும், மறுபடி வியாதி வரவே, அங்கேயுள்ள பிணியாளிகள் சாலையில்போய் குணப்படும்வரையில் அங்கேயே இருந்தார். ஆறு வாரத்துக்குப் பிறகு முற்றிலும் குணமானார். குணமானதும், குறிக்கப்பட்ட தினத்தில் இவர் மற்ற சேவகர்களோடு நெப்போலியன் இஸ்பாஞியாவில் செய்த அநியாய சண்டைக்குப் போகவேண்டியிருந்தது. ஆனால் குறிக்கப்பட்ட நாளில் இவர் ஒரு கோவிலில் ஜெபஞ்செய்யப் போயிருந்தார். வெகுநேரம் ஜெபித்துவிட்டு வெளியே வந்து பார்க்க, பட்டாளம் புறப்பட்டுப்போய் விட்டது. என்ன செய்கிறது? சேவகர்களைச் சேர்க்கிற உத்தியோகஸ்தனிடத்தில் போய் நடந்த காரியத்தை உள்ளபடி சொன்னார். அவனோ கோபாவேஷங்கொ

ண்டு, வாயில் வந்தபடி திட்டி, அவரை விலங்கில் மாட்டி, சிறைச்சாலைக்கு அனுப்ப முஸ்தீப்பு செய்தான். ஆனால் கூடநின்றவர்கள் இந்த ஏழை வாலிபன் வேணுமென்று தப்பித்து ஓடவில்லையே, அல்லாவிட்டால் அவன் இங்கே வருவானோ? அவனைத் தண்டித்து இலாபமென்ன? என்க, அவரை விட்டுவிட்டான்.

ஆயினும் இவர் பிரான்சு தேசத்து சட்டப்பிரகாரம் பட்டாளத்தில் சேவிக்காதபடியினால், இவர் பிரான்சு தேசத்தில் எவ்விடம் போனபோதிலும் இராணுவ உத்தியோகஸ்தர் இவரைப்பிடித்து சிறையில் போடக்கூடும்.

இதை நினைக்க நினைக்க, அவர் மனம் புண்ணாய்ப்போச்சுது. கஸ்திக்குரிய இந்தச் சிந்தனைகளை மாற்றத்தக்கதாக கஸ்திப்படுகிறவர்களைத் தேற்றுகின்றவளாகிய தேவ ஆண்டவளின் உதவியை அடையும்படி, தமது பையிலிருந்த ஜெபமாலையை எடுத்து ஜெபிக்கத் துவக்கினார். அதே நேரத்தில்தானே முகமறியாத ஓர் அந்நியன் இவரைக்கண்டு உபசரித்து, என்ன இவ்வளவு துக்கம்? எங்கே போகிறாய்? என்ன சங்கதி? சொல்லென்று பட்ச வார்த்தையுடன் கேட்க, ஜான்மரி நடந்த காரியத்தையெல்லாம்



ஆதியோடந்தமாய்ச் சொல்லி முடித்தார். அதற்கு அந்நியன்: பயப்படாதே, என்னோடுகூட வா, என்று சொல்லி அவருடைய மூட்டையைத் தான் வாங்கி சுமந்துகொண்டு, இரண்டு பேரும் இராத்திரி 10 மணிக்கு ஓர் வீட்டு வாசலில் வந்து சேர்ந்தார்கள். சேர்ந்ததும், கூடவந்த அந்நியன் கதவைத் தட்டினான். வீட்டிலுள்ளவர்கள் கதவைத் திறக்க, அந்த வாலிபன் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டுப்போக, ஜான்மரியை வீட்டுக்குள் அழைத்து, அன்னபானாதிகள் கொடுத்து, அவரை உபசரித்தார்கள். இவரை இப்படிக் கூட்டிக்கொண்டு வந்தவர் யாரென்று தீர விசாரித்தும், அவர் இன்னாரென்று தெரியக்கூடவில்லை. முன்காலத்தில் சின்னத்தொபியாசை இட்டுக்கொண்டு போனதுபோல இவரையும் ஓர் வானலோக தூதன் இட்டுக்கொண்டு போனானோ, அல்லது இவ்வுலகத்திலுள்ள ஓர் வாலிபனைத் தானே சுவாமி வழிகாட்ட அனுப்பினார் என்போமோ, என்னமாயிருந்தபோதிலும் சர்வேசுரன் தமது உற்ற தாசர்களை அவசர சமயங்களில் கை நெகிழ்கிறதில்லை என்பதற்கு இது ஒரு அத்தாட்சி.

## 3-ம் அதிகாரம்.

### கஷ்டப்பட்டுப் படித்துக் குருப்பட்டம்பெறுகிறார்.

ஜான் வியர்ன்னியை சர்க்கார் உத்தியோகஸ்தர் கையில் அகப்படாமல் தன் வீட்டிலே தானே மறைத்துவைத்துத் தன் சொந்தப்பிள்ளையைப்போல ஆதரித்து வந்தவள் மேர்வையோ என்னும் நாமம் தரித்த ஓர் உத்தமி. இந்த உபகாரியின் பேருதவியினால் அன்னபானத்துக்குக் குறைச்சலின்றி அவள் நிவாசத்திலே சில மாதமளவாகக் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு வந்தார். இங்கு அவருடைய சம்ரக்ஷணைக்குக் குறைவில்லையென்றாலும், யாவராலும் நன்குமதிக்கப்பட்டு வந்தாரென்றாலும், அந்நிய வீடானது ஒருபோதும் தன் சொந்தத் தாய் வீட்டுக்கு எள்ளளவேனும் இணையாகமாட்டாதென்பது உண்மையானபடியால், அவருடைய எண்ணமெல்லாம் என்றும் எக்குலியென்கிற கிராமத்திலுள்ள அவர் தாய் தந்தையர் குடியிருந்த வீட்டின்மேலேயே யிருந்தது.

அவருடைய பெற்றோர் தங்கள் அருமை மகன் எங்கிருக்கிறான், என்ன செய்கிறான், என்னமாயிருக்கிறான் என்பது ஒன்றுந் தெரியாமலிருந்தமையால், அவர்கள் பட்ட கஸ்தி கொஞ்சமல்ல. தாயார் பிள்ளையின் ஏக்கத்தால்,



உடம்பு மெலிந்து, மனம் நொந்து, வியாதிப்பட்டு வருந்தினாள்.

இத்துன்பவேளையில் ஆறுதலடையும்படியாக சங். பார்லி சுவாமியாரண்டை போய், அவருடைய ஆலோசனையைக் கேட்க, அவர் சொல்வார்: "மகளே! பயப்படாதே. உன் நம்பிக்கையெல்லாம் சுவாமிபீடத்தில் வை. உனது குமாரன் குருவானவராவாரென்பது நிச்சயம்."

காரியம் இப்படியிருக்கக்கொள்ள, ஜான்மரியைத் தாபரித்துவந்த மேர்வையோ, சௌக்கியத்துக்காக எக்குலி கிராமத்துக்கடுத்தாப்போலிருந்த ஓர் சிற்றூருக்கு வர நேரிட்டது. அந்தப் புண்ணியவதி தனது சவரட்சணையிலுள்ள வாலிபனுடைய பெற்றோர் வீடு சமீபத்திலிருப்பதை அறிந்திருந்தபடியால் அங்கு ஏகி, அவர்கள் பிள்ளை சௌக்கியவந்தனாய், தன்வசத்திலிருக்கிறானென்று சொல்லும்போது, அவர்கள் அநுபவித்த சந்தோஷம் எம்மாத்திரமிருக்குமென்று யூகித்துக்கொள்ளலாம். "பையன் சௌக்கியமாயிருக்கிறான், யாவராலும் நேசிக்கப்பட்டு நல்லவன் என்கிற பேரெடுத்திருக்கிறான் என்று கேட்டதும் தாய்க்கு மனம் பூரித்துப்போச்சுது."

தகப்பனேவென்றால், "பையன் இப்போது பூரண சௌக்கியமாயிருக்கிறபடியால் தனது பட்டாளத்தில் போய்ச்சேரட்டும். அவன் ஒளிந்திருக்கிற இடத்தை நான் காட்டிக்கொடுக்காவிட்டால், என் நிலபுலங்களையெல்லாம் சர்க்கார் அதிகாரிகள் ஜப்தி செய்வதாகப் பயமுறுத்துகிறார்கள்" என்று அங்கலாய்ப்புடன் சொல்ல, மேர்வையோ புன்சிரிப்புடன் மாறுத்தாரமாக; "உம்முடைய மகனை நாங்கள் விட்டுப் பிரியப்போகிறதில்லை. உம்முடைய காணி பூமியைக் காட்டிலும் அவன் அதிக விலைமதி பெறுவான். நீர் அவனிருக்கிற மறைவிடத்தை அறியவரும் பட்சத்தில் நாங்கள் அவனை மற்றோர் மறைவிடத்துக்கு மாற்றிவிட மாட்டோமா?" என்றுரைத்தாள். ஆனால் 1810-ம் ௵ ஜான்மரியுடைய தம்பி அண்ணனுக்கு பதிலாய் பட்டாளத்தில் சேவிக்க உடன்படவே, இராணுவ உத்தியோகஸ்தர் இதற்கிணங்கி இளையவனை ஏற்றுக்கொண்டார்கள்.

தங்குதடையெல்லாம் நீங்கிப்போக, இனிமேல் மறைவிடத்திலிருந்தவர் வெளியே புறப்பட ஆட்சேபனையில்லை, வியான்னி குடும்பத்தாருக்கும் இனி சர்க்கார் தொந்தரையுமில்லை. ஆகவே இச்சுப செய்தியை அறிந்ததும்,



ஜான்மரி தம்மை இதுநாளும் காப்பாற்றிப் பரிபாலித்து வந்தவர்களுக்கு நன்றி செலுத்திய பின், தம்முடைய தந்தை வீட்டுக்கு வந்துசேர்ந்தார். வீட்டைவிட்டுப் பதினாலுமாதம். அவ்வளவு காலம் அந்நிய ஊரில் அந்நியர் வீட்டில் வசித்தபோதிலும், தம்முடைய தேவ அழைத்தலை ஒருபோதும் மறந்தவரல்ல.

இரண்டு வருஷம் கடந்த பிறகு இவருடைய உற்ற நேசரான சங். பாலிசுவாமி, இவர் கல்வியில் சீக்கிரம் தேர்ச்சி பெறத்தக்கதாக ஓர் மடத்தில் மற்றவர்களோடு சேர்ந்து பயில்வது உத்தமமென்று கண்டு, அவரை வெரியேர் பட்டணத்துச் சின்ன மடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார். அவருக்கு இவ்விடமானது, புண்ணியங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்போலிருக்கிற தாழ்ச்சியென்கிற புண்ணியத்தை அடைவதற்கு உறைவிடமாயிருந்தது. அதெவ்வாறெனில், இவர் புத்திக் கூர்மையும் தீட்சண்ணியமுமற்றவராயிருந்தபடியால், அங்குள்ள வாலிபர் இவரை இகழவும் நிந்திக்கவும் தலைப்பட்டார்கள்.

ஆனால் "சுடினும் செம்பொன் றன்னொளி கெடாது, அரைக்கினுஞ் சந்தனந் தன்மணமாறாது" என்றாற்போல், எவ்வளவுதான் அவர்

துவக்கத்தில் சிறுமைப்பட்டபோதிலும், நாளடைவில் அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தின் சுகந்தம் மடமெங்கும் பரிமளிக்க, இதுவரையிலும் அவரை அவமதித்துவந்தவர்கள், கனிசமாயெண்ணி சங்கை செலுத்தத் துவக்கினார்கள். ஆயினும் சர்வேசுரன் அவரைத் தாழ்ச்சியில் நிலைநிறுத்தும்படியாக, மடத்திலுள்ள ஒரு வாலிபன் மாத்திரம் அட்டமத்துச் சனிபோல் அவரை யெங்கும் பின்தொடர்ந்து, அவரைத் திட்டவும் நிந்திக்கவும் பழிக்கவும் விட்டுவிட்டார். மற்றவர்களெல்லாரும் ஜான்மரியுடைய நல்லொழுக்கத்தைக் கண்டு புகழ்வதை இவன் சகிக்கக்கூடவில்லை. ஒரு நாள் இத்துஷ்ட வாலிபன் இகழ்ச்சியும், வசையும், பழிச்சொல்லும் போதாதென்றாற்போல, கை நீட்டி அவரை அடித்தான். அச்சமயத்தில் ஜான்மரி என்ன செய்தார்? அடித்தவன் முன் முழந்தாளிட்டு, "சகோதரனே! அறியாமற் செய்தேன், பொறுத்துக்கொள்" என்று மகா சாந்தத்துடன் சொன்னார். இவ்வாறு குற்றமற்றவர் குற்றத்தை தமதுபேரில் சுமத்திக்கொண்டு தாழ்மையுடன் மன்னிப்புக் கேட்பதைக் கண்ணோக்கின வன்னெஞ்சனுடைய மனசு இளகினது. இளகவே, தனது அக்கிர



மத்தின் கனத்தை உய்த்துணர்ந்து தானும் முழந்தாளிட்டு, மன்னிப்புக்கேட்க, இருவரும் அன்று துவக்கி சிநேகிதர்களானார்கள்.

தர்க்க சாஸ்திரம் முடியவே, சங். பாலிசுவாமியுடைய உதவியினால் வேதசாஸ்திரம் கற்றுக்கொள்ளும்படி 1813-ம் வருஷம் ஜூலை மாதம் வீட்டுக்குத் திரும்பிவந்தார். ஞானசாஸ்திரம் கற்றுக்கொள்ளும்போது இவர் தர்க்க சாஸ்திரம் படிக்கும் சமயத்தில் அநுபவித்த அசௌகரியம், கஷ்டம், வறட்சி, இவைகளைக் கொஞ்சித்தும் அநுபவிக்கவில்லை. சுமார் இரண்டுவருஷம் விடா முயற்சியுடன் பயின்றபின், இவருடைய நண்பர் சங். பாலிசுவாமி இவரை லையன்ஸ் நகரத்துப் பெரிய மடத்தில் சேர்க்கும்படியாக அவ்விடம் இட்டுக்கொண்டுபோனார். மடத்தில் ஒருவரைச் சேர்த்துக்கொள்வதற்குமுன் அவருடைய திறமையைப் பரிசோதிப்பது வழக்கம்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் அவருடைய ஜீவிய காலத்தில் மகா கக்கிஷமான ஓர் சிறுமையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. சரித்திராசிரியர் சங். மொனென் என்பவர் சொல்லுவதுபோல, சர்வேசுரன் ஓர் ஆத்துமாவைத் தெரிந்தெடுத்து அதைச் சாங்கோபாங்கத்தின்

சிகரத்தில் இட்டுக்கொண்டுபோக ஆசிக்கும்போது அந்த ஆத்துமாவில் தமது முத்திரையைப்பதிக்கிறார். அத்தேவ முத்திரையேதென்று கேட்டால் சிலுவையே.

பரிசோதிக்கிற வேதசாஸ்திரிகள் முன்னிலையில் ஜான்மரி வியான்னி வந்ததும், அச்சம் மேலிட்டு தாம் கற்றவைகளனைத்தும் முற்றிலும் மறந்தவராய் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில் சொல்ல சக்தியற்றவராய், முகம் நாணி, நின்ற நிலையில் வெட்கி நின்றார். அந்த நேரத்தில் அவர் அநுபவித்த மனவேதனை எம்மாத்திரம் இருந்திருக்குமென்று சுவாமி ஒருவர் மாத்திரம் சரிவர அறிவார்.

மாணாக்கனுக்கு நேரிட்ட அவமானம் ஒருவாறு உபாத்தியாயருக்கும் சாருமல்லவா? ஆகவே, சங். பாலிசுவாமியார் தமது மாணாக்கனுக்கு உண்டான பெரும் அவமானத்தைக்கண்டு தாமும் மிக்கக் கிலேசமுற்றிருந்தாரென்று சொல்லவேண்டியதில்லை. என்றாலும், மனந்தளராமல் அவர் மடத்து சிரேஷ்டரிடம்போய், மறுநாட் காலையில் தமது விக்கர் ஜெனரலோடு வந்து ஜான்மரியைச் சோதிக்கும்படி கேட்க, அவரும் அந்த வேண்டுகோளுக்கு இணங்கி, அடுத்தநாள் சோதிக்க, காரியம் சித்திபெற்



றது. அதற்குமேல் அவர் மடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டார். மடத்திலிருக்கும்போது அவர் நடந்துவந்த சீவியத்தைப் பின்வருமாறு அவர் சரித்திராசிரியர் எழுதிவைத்திருக்கிறார்:

“அவர் பிரத்தியட்சமாக, தாழ்ச்சியிலும், சாந்தத்திலும், பக்தியிலும், நாடோறும் அதிகமதிகமாக வளர்ந்துவந்தார். அவருடைய மனப்பரித்தியாகத்தினாலும், தபசினாலும் பழைய மனிதனைக் களைந்து புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டாரென்று அவரோடு கூட இருந்தவர்கள் தெளிவாகக் கண்டுகொண்டார்கள். அவர் தமது ஆசாபாசங்களை எங்ஙனம் அடக்கி ஆண்டுவந்தாரெனில், எப்போதும் எது தமக்கு அதிக உத்தமமென்று தோன்றுமோ அதைத் தான் செய்வார். அற்பக்காரியத்தில் முதலாய் மடத்தின் ஒழுங்கை மீறினதாக ஒருவரும் காணவில்லை. அவரிடத்தில் ஓரபட்சம், தனிச்சிநேகம், அழுக்காறு, காய்மகாரம், அற்பத்தனம், இதுபோன்ற தீக்குணங்கள் கிடையவே கிடையா. சம்பாஷணை வேளைகளில் அவருக்கு ஞானக்காரியங்களைப்பற்றி பேச மிகுந்த ஆசையென்றாலும், தாரதம்மியமின்றி எந்த வேளையிலும், யாரிடத்திலும், அப்படிப் பேசாமல் சமயோஜிதமாய்ப் பேசுவார். சுருங்கச்சொல்

வில், அவர் எல்லாருக்கும் எல்லாமுமாயிருந்தார்."

கடைசியாய் குருப்பட்டம் பெறுவதற்கு நாள் நெருங்கியது. மடத்து அதிகாரிகள் ஜான்மரியுடைய அர்ச்சியசிஷ்டதனத்தையும், நன்னடக்கையையும் கண்டு களிகூர்ந்தாலும், சாஸ்திர விஷயத்தில் அவர் திறமையற்றிருப்பதைப் பார்த்து, குருப்பட்டம் பெற அநுமதி கொடுக்க ஐயப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் சங். பாலிசுவாமியார் பரிசிரமமெடுத்துக்கொள்ளாதிருந்தால், ஜான்மரி வீட்டுக்குத் திரும்பிப்போய், தமது ஆடுமாடுகளைத் திரும்ப மேய்க்கவேண்டியிருந்திருக்கும். ஆனால் அன்பான உற்ற சிநேகிதனை ஆபத்திலே அறிகிறோமாதலால், இந்த அர்ச்சியசிஷ்ட குருவானவர், தமது மாணாக்கனும் நண்பனுமான ஜான்மரிக்கு நேரிட்ட சங்கடத்தைக் கேள்விப்பட்டவுடனே, அதிமேற்றிராணியாருக்குப் பதிலாக அப்போது மேற்றிராசனத்தை நடத்திவந்த விக்கர் ஜெனரல் சங். கூர்போன் சுவாமியாரிடம் போய், சங்கதியைத் தெரிவித்தார். அவர் மனுஷருடைய குணாகுணங்களை அறிவதில் தீரன். சங். பாலிசுவாமி சொன்னவைகளையெல்லாம் கேட்டு தீர விசாரித்தபின், அவர்



மடத்து அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கேட்டதாவது: "வாலிபன் வியான்னி பக்தியுள்ளவனா? ஜெபமாலை பக்தியோடு ஜெபிக்கிறானா? தேவதாயார்பேரில் விசேஷ பக்தியுண்டா?"

அதற்கு அதிகாரிகள் அனைவரும் ஒருவாய்ப்பட, "ஆம், இந்த வாலிபன் பக்திவிஷயத்தில் மற்றவர்களுக்கெல்லாம், மேல்வரிச்சட்டமாய் விளங்குகிறான்" என்று சொல்லக்கேட்ட விக்கர் ஜெனரல், அப்படியானால் "நாம் அவனை ஏற்றுக்கொள்ளுகிறோம், மற்றதெல்லாம் தேவப்பிரசாதம் நிறைவேற்றும்" என்றார்.

1815-ம்௵ ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி அவருக்கு இருபத்தொன்பது வயது நடக்கும்போது, கிரேனோபிள் பட்டணத்து அதிமேற்றிராசனக் கோவிலில், ஜான்மரி வியான்னி குருப்பட்டம் பெறப் பாக்கியம்பெற்றார். அந்த நேரத்தில் தம்மை முழுவதும் தேவ மகத்துவத்துக்குத் தகனப்பலியாய் ஒப்புக்கொடுத்தார். அன்று துவக்கி அர்ச். சின்னப்பர் சொன்னதுபோல, அவரும் "நான் ஜீவிக்கிறேன், ஆனால் நானல்ல. கிறீஸ்துநாதரே என்னில் ஜீவிக்கிறார்" என்று அவரைக்கண்டவர் யாவரும் சொல்லத்தக்க விதமாய்ச் சாகும்பரியந்தம் ஜீவித்துவந்தார்.

# 4-ம் அதிகாரம்.

## ஆர்ஸ் ஊர்ப் பங்குசுவாமியாக நியமிக்கப்படுகிறார்.

சங். ஜான்மரி வியான்னி குரு அபிஷேகம் பெற்றபின், முதல்பூசை செய்த இடம், தமது உற்ற நண்பரும் பேருபகாரியுமான சங். பாலி சுவாமி பங்கு சுவாமியாயிருந்த எக்குலி என்கிற பட்டணமே.

அவர் அங்குவந்து சேர்ந்தவுடனே ஊராரெல்லாரும் அகமகிழ்ந்து திருநாள் கொண்டாடி அவர்கள் சொன்னதாவது: ஜான்மரி மாணாக்கராய் எங்கள் ஊரில் படிக்கும்போது நாங்கள் அவரை நேசித்தோம். அவரோ தம்முடைய பரிசுத்த சீவியத்தினால் எல்லாருக்கும் நன்மாதிரிகையாயிருந்தார். இப்போது குருவாய் எங்கள் மத்தியிலிருக்கிறது, ஆ! எங்களுக்கு எத்தனை பாக்கியம்.

சங். பாலிசுவாமி மேற்றிராணியாருடைய அநுமதிபெற்று சங். வியான்னியைத் தமது துணைவராக (Vicaire) தம்மோடு வைத்துக் கொண்டார். இதனால் இவருடைய சிநேகம் முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்ததென்று சொல்லவும் வேண்டுமா? தேவ சிநேகத்தாலும்



ஆத்துமாக்களை இரட்சிக்கவேணுமென்கிற பேராவலினாலும் பற்றியெரிந்த இந்த உத்தம குருக்கள் இருவரும், பிரபஞ்ச காரியங்களுக்கு முற்றிலும் மரித்தவர்களாய், தேவ ஊழியத்தில் தங்களை முழுவதும் செலவழித்து வந்தார்கள்.

சங். வியான்னி தமது நேசருடைய அர்ச்சியசிஷ்டதனத்தையும் குணாதிசயங்களையும், புண்ணியக் கிரியைகளையும் அடிக்கடி வியந்து பாராட்டி வந்ததுமன்றி அவரைக்குறித்து அடிக்கடி சொல்லி வந்ததென்னவெனில், : அந்த அர்ச்சியசிஷ்ட குருவானவர் "என் ஆண்டவரே! உம்மை என் முழு இருதயத்துடன் சிநேகிக்கிறேன்" என்று பத்தியுடன் உச்சரிப்பதைக் கேட்ட எவனும் தேவசிநேக மடையாதிருப்பதரிது. அவர் தனியே இருக்கும்போதெல்லாம் இந்த உச்சாரணத்தையே சொல்லி வருவார். நித்திரை வருமுன் கடைசியாய் அவருடைய இதழ்கள் படுக்கையில் சொல்லும் வார்த்தைகளும் இவைகளே.

இவ்விருவரும் எம்மாத்திரம் கடுந்தபசு செய்தார்களெனில், அவர்களுடைய விக்கர் ஜெனரல் தபமுயற்சியைக் குறைக்கவேணுமென்று கண்டிப்பான கட்டளை கொடுக்கவேண்டியிருந்தது. சங். ஜான்மரி வியான்னி குருப்பட்டம் பெற்ற

இரண்டாம் வருஷம் அவருடைய அருமை உபாத்தியாயரும் நண்பரும் ஞானத்தகப்பனும் மேல்வரிச்சட்டமுமான சங். பாலி சுவாமி, தம்முடைய நித்திய சம்பாவனையை அடையும்படி பரலோக பிராப்தியானார். அவர் மரிக்கிறதற்கு முன் தம்முடைய கசை, சங்கிலி, இதுமுதலிய தபசாதனங்களைக் காண்பித்து, சங். வியான்னியைப் பார்த்துச் சொல்வார்: "என் நேச மகனே! இவைகளையெல்லாம் எடுத்துக்கொள். மற்ற ஒருவரும் இவைகளைப் பார்க்கவேண்டாம். பார்த்தால் அவர்கள் நான் என்னமோ பரிசுத்தவானென்று எண்ணிக்கொண்டு என் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளமாட்டார்கள். அப்படியானால் நான் உலக





முடியுமட்டும் உத்தரிக்கிறஸ்தலத்தில் இருக்க நேரிடும். பிறகு தமது காலண்டை கண்ணீர் சிந்தி அழுதுகொண்டிருந்த சங். ஜான்மரியை அரவணைத்து ஆசீர்வதித்து, "என் அருமை மகனே! தைரியத்தை இழக்காதே. நம்முடைய நல்ல எஜமானுடைய (சேசுநாதருடைய) சிநேகத்திலும் ஊழியத்திலும் எப்போதும் நிலைத்திரு. திவ்விய பலிப்பீடத்தில் என்னை மறந்துபோகாதே. நான் இப்போ போகிறேன். ஆனால் நாம் இருவரும் மேலே சந்திப்போம். சந்தித்தபிறகு பிரியாமல் நித்தியமாய்க் கூடியிருப்போம்."

சங். வியான்னி சொல்லும் வண்ணம் "அவர் அர்ச்சியசிஷ்டவராய் ஜீவித்தார்; அர்ச்சியசிஷ்டவராய் மரித்தார். அவருடைய தூய பரிசுத்த ஆத்துமமானது மோக்ஷவாசிகளுக்குப் புது ஆனந்தத்தைக் கொடுக்கும்படி பறந்தோடிற்று."

சங். பாலிசுவாமி மரணத்துக்குப்பிறகு, எக்குலி ஜனங்கள் எப்படியாயினும் தங்களுக்கு சங். வியான்னியைப் பங்குசுவாமியாராக்கத் தங்களால் இயன்றமட்டும் பிரயாசப்பட்டுப் பார்த்தார்கள். அவரோவென்றால் தாம் அப்பேர்ப்பட்ட ஸ்தானத்திற்கு அபாத்திரவானென்று சொல்லி அவர்கள் வேண்டுகோளுக்கு

இணங்கவில்லை. மூன்றுமாதம் கழிந்தபிறகு அவருடைய விக்கர் ஜெனரல் அவரை ஆர்ஸ் பட்டணத்து விசாரணைக் குருவாக நியமனம் பண்ணி அவரை அவ்விடம் அனுப்பும்போது, "நண்பனே! அவ்விடத்தில் தேவசிநேகம் சொற்பம். அது பற்றி சுவாலித்து எரியும்படி நாம் உம்மை அங்கு அனுப்புகிறோம்" என்றார்.

1818-ம் ௵ சன். பிப்ரவரி போய்ச் சேர்ந்தபோது ஆர்ஸ் ஓர் சின்ன கிராமம்.! வீடுகளோ சொற்பம். நல்ல ரஸ்தாக்கள் கிடையாது. கிராமவாசிகள் ஏறக்குறைய எல்லாரும் ஏழைக் குடியானவர்கள். நாற்பது வருஷத்துக்கு மேலாக இந்த ஊர் ஜனங்களை விசாரித்து வந்தபடியால் அவருக்கு ஆர்ஸ் விசாரணைக்குரு என்கிற அர்த்தம் பொருந்திய கூரேதார்ஸ் என்கிற நாமம் அவருக்கு அளிக்கப்பட்டது.

இவருடைய முதல் பூசையைக்கண்ட ஜனங்கள் அவருடைய அடக்க ஒடுக்கத்தையும், பக்தி உருக்கத்தையும், அர்ச்சியசிஷ்டதனத்தையும் கண்டு, இவ்வளவு உத்தமகுரு தங்களுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமென்று சொல்லிக்கொண்டார்கள். அந்தக் கற்றறியாத ஏழை ஜனங்கள் தங்களுடைய புதுப் பங்குசுவாமி, சேசுநாதருடைய இருதயத்துக்கு உகந்த



உத்தம தாசனென்று அறிய வெகுநாள் செல்லவில்லை. அவருடைய சரித்திராசிரியர் சொல்லுகிறபோல "அவருடைய இருதயமானது ஜெபமும் தபமும் பொருந்திய அதி தூய்மையான தூபக்கலசம். தேவ சந்நிதானத்தில் அவர் தூபங்கொடுக்கும்போது எப்படி நறுமணம் மேலெழும்புமோ அதுபோல அவருடைய இருதயமானது உலகத்தை நாடாமல் என்றும் மோக்ஷத்தையே தாவிக்கொண்டிருக்கிறது.

அவரிடத்தில் சரீர இலக்ஷணங்கள் சிரேஷ்டமானவைகளல்ல. வெளுத்த முகமும், குட்டையான உயரமும், அந்தமற்ற நடையுமுள்ளவர். அவருடைய நடையுடை பாவனைகளில் அவருடைய கூர்ந்த நேத்திரங்களைத்தவிர, வேறொரு விசேஷமும் அந்நியனொருவன் அறியமாட்டான். ஆனால் உலக கல்வி கலைக்கியானங்களும், தேக இலக்ஷணங்களும், உயர்ந்த பிறப்பும் வளர்ப்பும், இல்லாத இவர், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சாஸ்திரத்திலும், ஆத்தும இலக்ஷணத்திலும், தேவசிநேக ஐக்கியத்திலும் பேரோங்கி விளங்கினார்.

புது இவ்விடத்துக்கு வந்ததின்பின், அவருடைய வாசஸ்தலம் தேவாலயமே என்கலாம்.

தேவநற்கருணைக்கு முன்பாக அநேகமணிநேரம் அசைவற்று முழந்தாளிலிருந்து சிநேகப்பந்தனத்தால் கட்டப்பட்டு நமக்காக இராப்பகலாய்க் காத்திருக்கும் ஆண்டவரோடு சல்லாபித்துக் கொண்டு தேவ சிநேகத்தில் அமிழ்ந்தியிருக்கும்போது, தேவநற்கருணைப் பெட்டியைப் பார்த்தவண்ணமாயிருப்பார்.

கூரேதார்ஸ் தமது பங்கில்செய்த நன்மையையெல்லாம் அறியவேணுமானால், அவர் வருகிறதற்குமுன் அந்த ஊர் ஜனங்களுடைய ஸ்திதியை அறிவது அவசரம். தேவகாரியத்தில் பக்தியுள்ளவரும், பின்பு சங். ஜான்மரி வியான்னிக்கு உதவியாயிருந்தவருமான கத்தரீன் லசாஞ் என்பவள் அந்தக்காலத்தில் ஆர்ஸ் இருந்த நிலைமையைக் குறித்துச் சொல்லுவதாவது: புதுப்பங்குசுவாமி வருமுன் ஆர்ஸ் ஞானவிஷயத்தில் அட்ட தரித்திரத்திலிருந்தது. புண்ணியத்தை அறிந்தவர்கள் சொற்பப்பேர். அதை அநுசரித்தவர்கள் அதிலும் சொற்பம். ஞாயிற்றுக்கிழமைகளில் வாலிபப் பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் ஆடல் பாடல்களிலும் விளையாட்டு வேடிக்கைகளிலும், காமவிகாரங்களிலும் நேரத்தைப் போக்குவார்களேயொ



ழிய ஞானக்காரியத்தில் சற்றேனும் கவலையற்றவர்களாயிருந்தார்கள்.

இவ்வித அக்கிரமங்களை கூரேதார்ஸ் எப்படி அடக்கினார்? அவரிடத்தில் இரண்டு உத்தம எத்தனங்களிருந்தன. முதல் எத்தனம்: தேவநற்கருணைக்கு முன்னால் அவர் வேண்டிக்கொண்டுவந்த உருக்கமான ஜெபமும், நாடோறும் செய்துவந்த திவ்விய பலிப்பூசையும். இரண்டாம் எத்தனம்: இடையறாமல் பிரமாணிக்கத்துடன் பிரசங்கித்துவந்த அமிர்த பிரசங்கங்கள்.

தேவவார்த்தையைப் பிரசங்கிப்பது எம்மாத்திரம் பிற ஆத்துமாக்களுக்குப் பிரயோசனமென்று இவர் நன்றாய் அறிந்திருந்தபடியால், பிரசங்கத்துக்குத் தம்மால் கூடிய ஆயத்தம் செய்வார். அதற்காக நேரம் கிடைத்தவுடனே, சக்கிறீஸ்துக்குள்ளேபோய் தாம் சொல்லப்போகிறதையெல்லாம் காகிதத்தில் எழுதி, அதன் பிறகு எப்படிப் பிரசங்கத்தொட்டியிலிருக்கும்போது பிரசங்கம் பண்ணவேணுமோ, அப்படியே தனியேயிருக்கும்போது, உரத்த சப்தமாய்ப் பிரசங்கித்து பழகுவார். கடைசிகாலத்தில் சர்வேசுரன் அவருக்கு ஆச்சரியமான பிரசங்க வரம் கொடுக்கும்வரையில், மேற்சொன்ன வழக்கத்தை அவர் விட்டுவிடவில்லை.

இதுதவிர, மனுஷர்களுடைய இருதயத்தை முற்றிலும் மாற்றுவதற்கு அவரிடத்தில் விசேஷ வாய்ச்சாலப் பிரசங்கம் இருந்தது. அதாவது, தமது பங்குவிசாரணைக்குட்பட்ட விசுவாசிகள் மேல் அவருக்குள்ள மெய்யான பிறர்சிநேகமே. சேசுவின் திரு இருதயம் எப்படி மனுக்குலத்தை பொதுவில் மாத்திரம் சிநேகியாமல் நம்மில் ஒவ்வொருவரையும் சிநேகிக்கிறதோ, அப்படியே அவரும் தம் பங்கிலுள்ள ஒவ்வொருவரையும் பிரத்தியேகமாய் சிநேகித்துவந்தார். பங்குவிசாரணைக் குருக்களிடம் இருக்கவேண்டிய முக்கிய இலக்ஷணம் இதுவே. பங்கு ஜனங்கள் தங்கள் விசாரணைக்குரு செய்கிறதெல்லாம் சிநேகத்தினால் செய்கிறாரென்று அறிந்தார்களேயானால், அவர்கள் குற்றம் செய்யும்போது அவர் கடிந்துகொண்டாலும், கண்டித்தாலும், கோபதாபப்படாமல் நல்மனதுடன் ஏற்றுக்கொண்டு, நல்வழியில் திரும்புவார்களென்பது நிச்சயம். கூரோதார்ஸ் தமது விசாரணைக்குட்பட்ட ஜனங்களை சன்மார்க்கத்தில் இட்டுக்கொண்டுவந்து, கணக்கற்ற நன்மை செய்ததற்கு முக்கிய காரணம் இதுவன்றி வேறல்ல.

ஆர்ஸ் கிராமத்து ஜனங்கள் சங். ஜான்மரி வியான்னி வரும்போது, பொதுப்பட ஞான



காரியத்தில் மிக்க அசமந்தர்களாயிருந்தாலும், தேவகாரியத்தில் பற்றுதலுள்ளவர்கள் இல்லாமலிருக்கவில்லை. அப்பேர்ப்பட்டவர்களுக்குள் ஆர்ஸ் துரைசானி என்றழைக்கப்பட்டுவந்த பத்தியுள்ள சீமாட்டி ஒருத்தி. அவளுடைய மாளிகை ஓர் மடமென்கலாம். வீட்டிலுள்ள வேலைக்காரர் அனைவரும் அந்திசந்தி செபம் செய்யவும், ஞாயிற்றுக்கிழமை திவ்வியபூசை காணவும் தவறமாட்டார்கள். இவர்களைத்தவிர இன்னம் மேர்பியோ என்னும் ஓர் ஏழை விதவையும், பிந்ஞோ என்ற மற்றொரு புண்ணியவதியும், வேறொரு குடும்பஸ்தனான ஏழைக்குடியானவனும் சங். கூரோதார்ஸ்க்கு ஆறுதலாயிருந்தார்கள். இவர்களுடைய உதவியினால் அவருடைய பங்குக் கோவிலில் தேவநற்கருணை ஸ்தாபகம் ஏற்படுத்தப்பட்டது. இவர்களுக்குள் யாராகிலும் ஒருவர் எப்போதும் தேவநற்கருணைக்கு முன்பாக ஆராதனை செலுத்திக்கொண்டிருக்கிறதைக் கண்ட சங். கூரோதார்ஸ் இருதயம் சந்தோஷத்தால் அகமகிழ்ந்தது.

எழுத்துவாசனை கிஞ்சித்தேனுமறியாத குடியானவன் ஒருவன் வயலில் வேலைசெய்யப்போகும்போதும், வயலிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போதும், கோவிலுக்குள் நுழைந்து

திவ்வியநற்கருணையில் நமக்காக அநவரதமும் காத்துக்கொண்டிருக்கிற ஆண்டவரைச் சந்திப்பது அவனுடைய சகிர்த வழக்கம். அவன் தன்னுடைய மண்வெட்டி, கோடாலி, கட்டப்பாரை இவைகளையெல்லாம் கோவில் கதவண்டை வைத்துவிட்டு, தேவநற்கருணைக்கு முன்பாக அசைவற்று, முழந்தாளிலிருந்து, வாய்ச்செபம் ஒன்றும் சொல்லாமல், வெகுநேரம் நாள்தோறுமிருப்பதைக் கண்ட சங். கூரேதார்ஸ் வியப்புற்று, அந்தக் குடியானவனைப் பார்த்து: "ஐயா! நீங்கள் நாடோறும் சில சமயம் பல தடவை வெகுநேரம், திவ்வியநற்கருணையைச் சந்திக்கிறீர்களே, அந்தச் சமயங்களில் சற்பிரசாத ஆண்டவரோடு என்ன சொல்லுகிறீர்கள்" என்று கேட்க, அந்தப் பக்தியுள்ள குடியானவன் சொன்ன அதிஉன்னத மறுமொழியாவது: "சுவாமி, நான் வாயினால் ஒன்றும் சொல்லுகிறதில்லை. நான் அவரைப் பார்க்கிறேன். அவர் என்னைப் பார்க்கிறார்."

அர்ச்சியசிஷ்டதனத்தை அடைவதற்கு சுருவானவழி இதுவே. அர்ச்சியசிஷ்டவர்களாவதற்குச் செய்யவேண்டியதென்ன? சேசுக்கிறிஸ்துநாதருடைய சாயலை நம்முடைய இருதயத்தில் உருவாக்கவேணும். அவரை உருவாக்குவ



தெப்படி? அவரை அடிக்கடி வெகுநேரம் உற்றுப்பார்க்கவேணும். எவ்வளவுக்கு நாம் அவரைக் கண்ணோக்குவோமோ, அவ்வளவுக்கு நாம் அவரைச் சிநேகிப்போம்; எவ்வளவுக்கு சிநேகிப்போமோ, அவ்வளவுக்கு நாம் அவரைக்கண்டுபாவிப்போம்; எவ்வளவுக்கு நாம் அவரைக் கண்டுபாவிப்போமோ, அவ்வளவுக்கு நாம் அர்ச்சியசிஷ்டவர்களாவோம் என்பது உறுதியாமே.

# 5-ம் அதிகாரம்.

## ஞாயிறு வாரம் அநுசரித்தல்.

கூரே தார்ஸ் தமது விசாரணைக்குட்பட்ட கிறீஸ்தவர்களைச் சீர்திருத்துவதற்கு பிரயோகித்த எத்தனங்களுக்குள் சபைக்கூட்டங்கள் ஒன்று. அவர் பெண்பிள்ளைகளுக்கு ஜெபமாலை மாதாச் சபையும், ஆண்பிள்ளைகளுக்கு நற்கருணை சபையும், ஏற்படுத்தினார். பெண்கள் சபையை ஆரம்பித்தவிதம் வெகு நூதனமாமே. ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம், துடிப்பான சில பெண்கள் தமது பாவசங்கீர்த்தனத் தொட்டிக்கு முன்னால் நிற்பதைக்கண்டு அவர்களருகாமையில் போய், "பிள்ளைகளே, நீங்கள் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படி பரிசுத்த தேவதாயாரின் உதவியை அடையத் தக்கதாக நாம் எல்லோரும் சேர்ந்து ஜெபமாலை சொல்லுவோம்" என்று சொல்லிக்கொண்டே ஜெபத்தைத் துவக்கினார். அவர்களும் கூட ஜெபமாலை சொல்லிமுடித்தார்கள். ஜெபமாலை மாதாச் சபைக்கூட்டத்தின் ஆரம்பம் இதுவே.



சங். ஜான்மரி வியான்னி ஆர்ஸ் ஊருக்கு வருமுன், ஞாயிற்றுக்கிழமைதான் மற்ற நாட்களைப் பார்க்கிலும் பாவத்துக்கு ஏதுகரமாயிருந்தது. ஆனால் இவருடைய புத்தி போதகத்தினாலும், ஏற்படுத்திய சட்டதிட்டங்களினாலும், சபைக் கூட்டங்களினாலும், ஞாயிறு வாரம், பரிசுத்த விதமாய் அநுசரிக்கப்பட்டது. குடியானவர்கள் ஞாயிற்றுக்கிழமை தானியத்தை அறுக்க வயலுக்குப் போகக்கண்டால், அவர் சொல்லுவது: "தேவ பராமரிக்கையின்மட்டில் அவநம்பிக்கைப்படாதேயுங்கள். வயலுக்கு நல்ல விளைச்சலைக் கொடுத்த ஆண்டவர், நஷ்டமின்றி தானியத்தைக் களஞ்சியத்தில் சேர்க்க வழி பண்ணுவார்." அவருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்தவர்கள் ஒருபோதும் நஷ்டம் அடையவில்லை.

சங். அபே ரெனூர் ஒருதடவை அறுப்புக்காலத்தில் ஆர்ஸ் ஊருக்கு வந்திருந்தபோது தாம் கண்டகாரியத்தைப் பின்வருமாறு எழுதிவைத்தார்: "நான் வந்திருந்தபோது ஏறக்குறைய ஒருவாரம் முழுவதும் மழை பெய்துகொண்டேயிருந்தது. சனிக்கிழமை அறுத்த தானியம் நனைந்துபோயிருந்தபடியால், களஞ்சியத்தில்

கொண்டுபோய்ச் சேர்க்காமல் வயலிலேயே கிடந்தது. ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகித் தன் தகசுவென்று அருமைநாயகமானன். அன்றையத்தினம் கதிர்களைக் கட்டிக் களஞ்சியத்தில் கொண்டுசேர்க்காவிட்டால் கன நஷ்டம் உண்டாகக்கூடும். ஆயினும் உழவன் ஒருவனுகிலும் புலத்துக்குப் போகவில்லை. அவர்களுக்குள் ஒருவனைக்கண்டு "இதேனிதா, உங்கள் விளைச்சலுக்கு நஷ்டம் வருமென்கிற பயமில்லையா" என்று வினவ, அவன் மாறுத்தாரமாகச் சொன்னதாவது: சுவாமி, எங்களுக்கு ஒரு பயமுமில்லை. சர்வேசுரன் எங்களுக்குக் கொடுக்கிறதை அவர்தாமே காப்பாற்றுகிறார். அன்றியும் நாங்கள் ஞாயிற்றுக்கிழமை வேலைசெய்வது எங்கள் பங்குசுவாமிக்குச் சற்றேனும் இஷ்டமில்லை. அவருக்குக் கீழ்ப்படிவது எங்கள் கடமை.

கூரேதார்ஸ், ஞாயிற்றுக்கிழமைகளில் தமது பங்குவிசாரணைக்கிறீஸ்துவர்கள் அடிமைவேலை செய்யாமலிருந்தால் மாத்திரம் போதுமென்றிருக்கவில்லை. அந்தநாள் மெய்யாகவே அர்ச்சிக்கப்பட்ட நாளாயிருக்கத்தக்கதாக, அன்றையத்தினத்தில் செய்யத்தக்க பற்பல ஞானக்கிருத்தியங்களை ஏற்படுத்தினார்.



முதல்காரியம் எல்லாரும் அன்று திவ்யபலிப்பூசை காணவேண்டும். அவருடைய அயராவூக்கத்தினால் அவசரத்தில் பூசைக்கு வராமலிருந்தவர்களும் அரைகுறையான பூசைக்கு வந்தவர்களும் ஞாயிற்றுக்கிழமையில் முழுப்பூசைக்கு நேரத்தோடு வருவார்கள்.

இரண்டாவது: அன்று பின்னேரம் எல்லோரும் ஞானோபதேசம் கேட்டு ஜெபமாலை ஜெபிப்பார்கள். மூன்றாவது: அஸ்தமானபிறகு கோவிலில் ஜனங்கள் அனைவரும் கூடியிருக்க, கூரேதார்ஸ் பிரசங்கிப்பார்.

இப்படிச் செய்ததினால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு பெரிய திருநாட்போல கொண்டாடப்பட்டு வந்தது. சனிக்கிழமை சாயங்காலம், பெருங்கூட்டம் பாவசங்கீர்த்தனத்துக்காக காத்துக்கொண்டிருக்கும். ஞாயிற்றுக்கிழமைப் பூசையில் நூற்றுக்கணக்கானபேர்கள் சம்மனசுக்களின் போஜனத்தை அருந்துவதைக் காணுவதுதான் கூரேதாருடைய ஒரு பெரும் பாக்கியம்.

ஆர்ஸ் ஊரில் வேறொரு விசேஷம் என்னவென்றால் திரிகாலமணி அடித்ததும் எல்லாரும் என்னவேலைதான் செய்துகொண்டிருந்தாலும்

உடனே அந்த வேலையை நிறுத்தி ஜெபஞ் சொல்லுவார்கள்.

இவ்வாறு ஞாயிற்றுக்கிழமையில் குடிவெறி, சூதுவிளையாட்டு, இதுபோன்ற பாவ சமயங்களை விட்டொழித்து, பரிசுத்தவிதமாய் அந்த நாளைச் செலவழித்துவந்ததால், சர்வேசுரன் ஆர்ஸ் ஊராருக்கு வளப்பமும் செழிப்பும், நல்ல வெள்ளாண்மையும்கொடுத்தது ஆச்சரியமில்லை.


அநேக ஊர்களுக்கும் பட்டணங்களுக்கும் தேசங்களுக்கும் தேவ கோபாக்கினை வருகிறதற்குக் காரணம் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்ற நாட்களைப்போல வேலை செய்கிறதும் வியாபாரம் பண்ணுவதும், ஆடல்பாடல் குடிவெறியில் செலவழிப்பதுமே.

ஆகையால் சர்வேசுரனுடைய தேவகோபாக்கினை நமதுபேரிலும் நமது குடும்பத்தின்பேரிலும் விழாதபடி ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தவிதமாய் அநுசரிக்கக்கடவோமாக.

## 6-ம் அதிகாரம்.


### ஆர்ஸ்ஊர்த் தேவாலயம்.

ஜான்மரி வியான்னி ஆத்துமாக்களை இரட்சிக்க எடுத்த பிரயாசத்துக்குப் பிறகு தமது கோவிலைச் சிறப்பிக்க எடுத்த பிரயாசமே பெரும் பிரயாசம். தேவாலயமானது பரலோக



பூலோக இராஜனை ஆண்டவர் வீற்றிருக்கும் வாசஸ்தலமானபடியால், அவ்விடம் அவருக்கேற்ற அரண்மனையாயிருக்கவேண்டியது நியாயமல்லவா. இதை முற்றுமுணர்ந்த கூரே


தார்ஸ் தாம் ஏழையாயிருந்த போதிலும், தம
து அறையிடு பாழாய்க்கிடந்தபோதிலும், தம
து கட்டு முட்டுகள் சொற்பமாயிருந்தபோதி
லும், சர்வேசுரன் வீற்றிருக்கும் கோவிலும்,
கோவிலைச் சேர்ந்த மற்ற ஜாமான்கள் மாத்திர
ம், அழகாய் கண்ணுக்கு இரமணியமாயிருக்கத்
தம்மால்கூடிய முயற்சியெல்லாம் எடுத்து வந்
தார். அவர் ஆர்ஸ் ஊருக்கு வரும்போது
கோவில் தக்கபீடமில்லாமல் அந்தமற்றிருந்த
து. ஆகையால் பாழாய்க்கிடந்த பெரிய பீடத்



தை இடித்து நேர்த்தியான ஓர் புதுப்பீடத்
தைத் தமது சொந்தச் செலவினால் கட்டி முடி
த்தார். தங்களுடைய பங்கு விசாரணைக்குரு



ஏழையாயிருந்தாலும், தமக்குள்ள பணத்தை
எல்லாம் கோவிலை அலங்கரிப்பதில் தாராள



மாய்ச் செல
வழிப்பதைக்
கண்ணுற்ற
ஆர்ஸ் ஊர்வா
சிகள், தாங்க
ளும் தங்களா
ல்கூடிய பண
த்தைக் கொடு
த்து, சர்வே
சுரனுடைய
வீடாகிய கோ
விலைச் சிறப்
பித்தார்கள்.
ஓர் பெரிய
திருவிழா வந்தால் அயலாரெல்லாரும் சேர்ந்து
திருநாளை ஆடம்பரமாய்க் கொண்டாடத்துவ
க்கினார்கள். "பலதுளி பெருவெள்ளம். ஆயிர
மாகாணி அறுபத்திரண்டரை" என்பதுபோல
இந்த ஏழை ஜனங்கள் ஒவ்வொருவரும் கொஞ்
சம் கொடுத்தபடியால், கடைசியில் மொத்த
மாய் ஓர் நல்ல தொகை வந்தது. அதைக்கொ
ண்டு திருநாள் பெருநாட்களை ஆரவாரத்துடன்

கொண்டாடுவது அருமையாயிருந்தது. (நம்முடைய ஊர்களிலும் ஓர் பெரிய திருவிழா, அல்லது ஓர் பெரிய உற்சவம் நடக்கும்போதும் அல்லது ஓர் கோவில் கட்டும்போது, பங்கு ஜனங்கள் அனைவரும் ஒன்றித்து ஒவ்வொருவரும் தங்களால் கூடிய உதவி செய்தால், திருநாளை எவ்வளவு ஆடம்பரமாய்க் கொண்டாடலாம். புதுக் கோவில்களை முதலாய் எவ்வளவு சீக்கிரம் கட்டலாம். ஆனால் அநேகர் சொல்வது என்னவெனில்: சுவாமிமார்களிடத்தில் பணமில்லையா? திருநாட் செலவெல்லாம் அவர்கள் கொடுக்கட்டும். புதுக்கோவில் கட்டவேண்டியிருந்தால் அவர்கள் பணத்தைப்போட்டு கட்டட்டும். நாங்கள் ஒன்றும் கொடுக்கமாட்டோம். அநேகந்தடவை இப்படிச் சொல்வது ஏழை ஜனங்களல்ல, பணக்காரர்களே:—ஐயோ இந்த நிர்ப்பாக்கிய ஜனங்கள் கோவிலுக்குப் பணம் கொடுக்கும்போது சர்வேசுரனுடைய மகிமைக்குத்தானே பணங் கொடுக்கிறதை முற்றிலும் மறந்துபோகிறதினாலல்லோ இப்படிப் பேசுகிறார்கள். இப்படிப் பேசுகிறவர்களை சர்வேசுரன் ஆசீர்வதிப்பதெப்படி?).

ஆர்ஸ் ஊரில் கொண்டாடின திருநாட்களுக்குள் சிரேஷ்டமானதும், கூரேதார்ஸ்க்கு மன



இஞ்சிதமாயிருந்ததும் தேவநற்கருணைத் திருநாள். தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் நடக்கும்போது நறுமலர்களைத் தூவும்படி பாலிய பிள்ளைகளைச் சேர்த்து அவர்களுக்குந் தூய வெண்மையான ஆடைகளைத் தரிப்பித்து அவர்களை நோக்கி புன்னகைப் பூத்துச் சொல்வார்: "பிள்ளைகளே, வாருங்கள், சுற்றுப்பிரகாரம் நடக்கும்வேளையில், நீங்கள் மிக்க அடக்கவொடுக்கத்துடன் இருப்பீர்களல்லவா. நீங்கள் நல்ல ஆண்டவருடைய சந்நிதானத்தில் சம்மனசுக்களுக்குப் பதிலாய் நிற்கிறதாக நினைத்துக் கொள்ளுங்கள், உங்களுடைய இருதயத்திலிருந்து நீங்கள் அடிக்கடி சொல்லவேண்டியதென்னவென்றால்: "என் ஆண்டவரே! நான் உம்மைச் சிநேகிக்கிறேன்" நீங்கள் சேசுவின் திரு இருதயத்துக்குப் பிரியப்படவேணுமாகில், உங்களுடைய ஆத்துமம் நீங்கள் இன்று தரித்திருக்கிற தூயவெள்ளை உடுப்பைப்போல, பரிசுத்தமாயிருக்கவேண்டும்."

இப்படி கூரேதார்ஸ் தமது பங்கு விசாரணைக் கோவிலை அலங்கரித்துத் திருநாட்களை ஆடம்பரமாய்க் கொண்டாடிவரும்போது, ஓர் பேருபகாரி கோவிலுக்கு அநேக விலையேறப்பெற்ற நன்கொடைகளை அளித்தார். அந்தப் பேருப

காரியாவென்றால், ஆர்ஸ் துரைசாணியின் சகோதரனன்றி வேறல்ல. அவர், தமது சகோதரியைப் பார்க்கும்படி ஆர்ஸ் ஊருக்கு வந்திருந்த சமயத்தில், கூரேதார்ஸுக்கும் அவருக்கும் பலத்த சிநேகம் உண்டானது. சிநேகம் வெறும் வார்த்தையிலல்ல, கிரியைகளில் விசேஷமாய்க்காண்பிக்கவேணுமென்று அறிந்திருந்த இவர், பாரீஸ் நகரத்துக்கு திரும்பிப்போய்ச் சேர்ந்ததும், சங். ஜான்மரி வியான்னிக்கு, ஓர் நேர்த்தியான தேவநற்கருணைப்பெட்டியும், அழகான தந்திரிசால்களும், அருளிக்கக்கூடுகளும், ஓர் கதிர்ப்பாத்திரமும், சில கொடிகளும், பூசை ஆயத்தங்களும் அனுப்பினார். இவ்வளவு விலையுள்ள அழகான ஜாமான்களைக் கண்டதும், கூரேதார்ஸ் உள்ளம் பூரித்து அகமகிழ்ந்தாரென்று சொல்லத்தேவையில்லை. தமது சந்தோஷத்தைப் பொறுக்கமாட்டாமல், தம்மை அடிக்கடி பார்க்கவரும் ஓர் கிழவியை நோக்கி "ஓ கிழவி அம்மா, நீங்கள் சாகிறதற்குமுன் அழகான இந்த ஜாமான்களைக் கண்ணாலே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று புன்சிரிப்புடன் சொன்னார்.

நன்றியறிகிறகுணம் பெருந்தன்மை வாய்ந்தவர்களிடத்திலும், அர்ச்சியசிஷ்டவர்களிடத்



திலும் முக்கியமாய்க் காணப்படும் சுகிர்தகுணம். கூரேதார்ஸ் பெருந்தன்மை வாய்ந்த அர்ச்சியசிஷ்டவரானபடியால் அவரிடம் நன்றி பாராட்டுகிற குணம் விசேஷித்த விதமாய் இலங்கியது. தமக்கு மேற்சொன்ன விலையுயர்ந்த ஜாமான்களெல்லாம் கிடைத்ததற்கு அவர் எவ்வாறு நன்றிசெலுத்தினாரென்று கேளுங்கள். மறு ஞாயிற்றுக்கிழமை தமது பங்கு விசாரணை ஜனங்களைப் பார்த்து அவர் சொன்னதாவது: "சகோதரர்களே! ஆர்ஸ் துரைசாணியுடைய சகோதரன் நமக்கு அனுப்பிய விலையேறப்பெற்ற பொருட்களையெல்லாம் நீங்கள் பார்த்தீர்களல்லவா? நாம் நம்முடைய நன்றியறிதலைக் காண்பிக்கும்படியாக நாமனைவரும் ஒருமித்து லயன்ஸ் நகரத்திலிருக்கும் பேர்போன பூர்வியேர் தேவாலயத்துக்குப்போய் தேவதாயார் பாதத்தில் நாம் பெற்றுக்கொண்ட பொக்கிஷங்களை பாதகாணிக்கையாக வைத்து, நம்மை முழுவதும் அந்த ஆண்டவளுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டுவருவோம். அந்தப் பரமநாயகி நம்மையும் நம்முடைய பொக்கிஷங்களையும் ஆசீர்வதிப்பாள். இதற்குப் பங்குக் கிறீஸ்துவர்களெல்லாரும் சந்தோஷத்துடன் இணங்கினபடியால், ஏறக்குறைய ஊராரெல்லோரும்,

பல வர்ணக்கொடிகளையும், துவசங்களையும் பிடித்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

கத்தரீன் என்பவள் எழுதிவைத்தபடி அன்றையத்தினம் கள்வர் ஊரிலுள்ள பொருட்களையெல்லாம் எளிதில் சூறையாடிக்கொண்டு போயிருக்கலாம். ஏனெனில் அன்றையத்தினம் ஆர்ஸ் ஊரில் ஒருவருமில்லை.

கூரே தார்ஸ் தமது பங்கு ஜனங்களோடு செய்த இத்திருயாத்திரை ஆர்ஸ் ஊருக்கு தேவ ஆண்டவருடைய விசேஷ கிருபை பெறுவதற்கு ஏதுவாயிருந்தது. அந்தக்காலத்திலுள்ளவர்கள் பிற்காலத்தில் ஆர்ஸ் ஊரும் ஓர் திருயாத்திரை ஸ்தலமாகுமென்று கிஞ்சித்தும் நினைக்கவில்லை.

கோவில் பெரிய பீடம் முடிந்த பிறகு, சங். ஜான்மரி பக்கத்துப் பீடங்களைச் சிறப்பிக்க ஆரம்பித்தார். முதலாவது கட்டிமுடித்தது தமது பாதுகாவலான ஸ்நாபக அருளப்பர் பீடம். இது முடிந்தவுடனே ஓர் நூதன சம்பவம் நடந்தது. அதாவது, தமது பணமெல்லாம் பீடத்தை அலங்கரிப்பதில் செலவழிந்துபோய்ட்டபடியால், கூலியாட்களுக்கு முதலாய்க் கூலிகொடுக்க தமது கையில் பணமில்லை. அத்தருணத்தில் தமது நம்பிக்கையெல்லாம்



ஏழைகளின் தஞ்சமாகிய தேவதாயாரிடம் வைத்து ஜெபமாலையைக் கையிலெடுத்து ஜெபித்துக்கொண்டு வயற்காட்டுப்பக்கம் உலாவப் போனார். கிராமத்தின் எல்லையைக் கடந்ததும் குதிரையின்மேல் சவாரிசென்ற ஓர் அந்நியன் இவருக்கு ஆசாரஞ்செய்து "சுவாமீ, நீங்கள் வியாதியாயிருக்கிறீர்களா? அல்லது உங்கள் பங்குஜனங்கள் உங்களுக்குத் தொந்தரவு செய்கிறார்களா" என்று வினவ, அவர் சொல்வார்: நான் வியாதியாயிருக்கிறதில்லை, என் பங்குஜனங்களும் என்னைத் தொந்தரவுபண்ணுகிறதில்லை. ஆனால் எனக்கு ஓர் காரியம் தேவையாயிருக்கிறது. கோவிலில் ஒரு புதுப்பீடம் கட்டியிருக்கிறேன். அதன் செலவைக்கொடுக்க எனக்கு இப்போது அவகாசமில்லை. இதைச் செவியுற்ற அன்னியன் சற்றே மௌனமாயிருந்து, "சுவாமி, அப்படியா, இதோ இந்த இருபத்தைந்து தங்கப்பவுன்களை எடுத்துக் கொள்ளுங்கள்", என்று தன் கையிலிருந்து பணத்தை யெடுத்துக்கொடுத்தான். குருவானவர் கையில் வாங்கினவுடனே, சுவாமி இதைக்கொண்டு உங்கள் கூலியாட்களுக்குச் செல்லவேண்டிய பணத்தைக் கொடுங்கள். எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லிச்

கொண்டு, சங். கூரோதார்ஸ் வந்தனஞ் சொல்லி முன்னேதானே குதிரையை வேகமாய் நடத்திச் சென்றான்.

திடீரென அவசரமான வேளையில் அற்புதமேனையாய் இவருக்கு வேண்டிய உதவி கிடைத்தது, இதுதான் முதல்தடவை. ஆனால் இது கடைசித்தடவையில்லை. பன்முறை இவ்வாறு அற்புத உதவிகளைப் பெற்றிருக்கிறதாகப் போகப்போக அவருடைய சரித்திரத்தில் நன்கு விளங்கும்.



இரண்டாவது இவர் கட்டிய பீடம், தமது விசேஷ பாதுகாவலும் பெருபகாரியுமான அர்ச். பிலோமினை பீடம். இந்தக் கன்னியும் வேதசாட்சியுமான பாலிய அர்ச்சியசிஷ்டவளின்



பேரில் அவருக்குள்ள வணக்கமும் நம்பிக்கையும், அன்பும் இம்மாத்திரமென்று வரையறுத்துச் சொல்லமுடியாது. அவருடைய பக்தியை பிரான்ஸ் தேசத்திலும், மற்றநேக நாடுகளிலும் பரம்பச்செய்தவர் இவரே. ஆகையால் இவரை அர்ச். பிலோமினாவின் அப்போஸ்தலர் என்று அழைப்பது நியாயமாமே. இவருடைய இனிய நாமமானது இடையறாது இவருடைய இதழ்களிலிருக்கும். அர்ச்சியசிஷ்டவளைக் குறித்துப் பேசும்போதெல்லாம் உருக்கநேசத்துடனும் பட்சவாஞ்சையுடனும் பேசுவார். இந்தக் கன்னியினுடைய சலுவினால் கூரோதார்ஸ் செய்த புதுமைகளுக்குக் கணக்கு வழக்கில்லை.

# ...ம் அதிகாரம்.

## தர்மசாலை ஸ்தாபகம்.

1825-ம் வருஷம் ஆர்ல் ஊருக்கு வந்துசேர்ந்த ஏழாம் வருஷத்தில் சங். ஜான்மரி தமது பங்கிலுள்ள அனாத பிள்ளைகளுக்காகவும், ஆதரவற்ற இளம்பெண்களுக்காகவும், ஓர் தர்மசாலை ஏற்படுத்தினார். அத்தர்மசாலைக்கு "தேவ பராமரிப்பு" என்று அருத்தங்கொள்ளும் "புரோவிதான்ஸ்" என்கிற பேர் கொடுத்தார். இத்தர்மசாலை ஸ்தாபனம் பெறும்போது நடந்த அற்புத சம்பவங்களே கூரேதாரின் அர்ச்சியசிஷ்டதனத்தை முதல் முதல் பிரான்சுதேசத்தின் நாற்றிசையிலும் அறியப்பண்ண முக்கிய காரணமாயிருந்தது.

சர்வேசுரனுக்காகச் செய்கிற வேலைகளை பொதுப்பட சத்தஞ் சந்தடியும், வீண் டம்பமுமில்லாமல் துவக்குவது வழக்கம். அதுபோலவே கூரேதார்ஸ் ஏற்படுத்திய தர்மசாலையின் துவக்கமுமிருந்தது.

தாரித்திரத்தினாலும், மடமையினாலும், சீரழிந்துபோகிற வாலிபப் பெண்களுக்கு ஓர் புக



விடம் தேடி அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்பது இவருடைய முக்கிய நோக்கம். தாம் கருதிய எண்ணத்தை எப்படி முடிப்பது என்று பலநாள் சிந்தையாயிருக்கும்போது, கோவிலுக்குப் பின்னால் ஒருவன் ஒரு பெரிய வீடு கட்டி முடித்தான். அப்போ தமக்குள்ளே சொல்வார்: "அந்த வீடு எனக்கு சொந்தமானால், என் தர்மசாலைக்குத் தகுந்த இடமாயிருக்கும். அதற்கும் கோவிலுக்கும் தூரமோ வெகு சொற்பம். அடிக்கடி ஆதரவற்ற என் பிள்ளைகளைச் சந்தித்து, ஞானோபதேசம் கற்றுக்கொடுத்து வருவேன். தர்மசாலை எனக்குப் போஜனம் கொடுக்கும். அதற்கு பதிலாக நான் ஆத்துமத்தின் போஜனமாகிய தேவ வார்த்தையைக் கொடுப்பேன், நான் அவர்களுக்கு ஆத்தும போஜனம் கொடுக்க, அவர்கள் எனக்கு சரீர போஜனம் கொடுப்பார்கள். ஓ! அப்படி நடக்குமானால் எவ்வளவோ நல்ல காரியமாயிருக்கும்"... நாள் போகப்போக இந்த எண்ணம் அவரிடத்தில் அதிக ஸ்திரம் கொண்டது. இக்கருத்தை நிறைவேற்றத்தக்கதாக பரிசுத்த அமலநாயகியைக் குறித்து ஓர் நவநாள் துவக்கினார். பரம ஆண்டவள் தமது திருக்குமாரனுடைய நண்பர்க

ளாகிய ஏழைகளை அதிகமாய் நேசிக்கிறபடியால், இச்சமயத்தில் தமக்கு அவன் உதவிபுரிவானென்பதை நிச்சயமாய் அறிந்திருந்தார். ஆயினும் அவர் சும்மாயிருக்கவில்லை. சர்வேசுரனை சோதிக்கிற குணம் அர்ச்சியசிஷ்டவர்களிடத்தில் கிடையாது.

கூரேதார்ஸ் தரித்திர வார்த்தைப்பாடு கொடுத்தவரல்லவென்றாலும், அந்த வார்த்தைப்பாடு கொடுத்த சந்நியாசியைப் பார்க்கிலும் அதிக நுணுக்கமாய்த் தரித்திரத்தை அநுசரித்து வந்தார். தம்மிடத்திலுள்ளது சகலமும் தம்முடைய பங்கு ஜனங்களுக்கே செலவிட்டார். சங். மொனென் சொல்லும் வண்ணம்: அவருடைய நினைவெல்லாம் என்றும் அவருடைய கிறீஸ்துவர்கள் பேரிலேயே. அவர்களுடைய சமாதானம் இவருடைய சமாதானம்; அவர்களுடைய சந்தோஷம் இவருடைய பாக்கியம்; அவர்களுடைய துன்பம் இவருடைய வருத்தம்; அவர்களுடைய புண்ணியம் இவருடைய கிரீடம்.

இவ்வளவு உருக்கமாய்த் தமது பங்கு ஜனங்களை நேசித்தவர் தமக்குச் சொந்தமான தாயபாகம், காணி பூமியை அவர்களுடைய நன்மைக்காகச் செலவழித்தது ஆச்சரியமல்ல.



தாம் கருதிய தர்மசாலை ஸ்தாபகம் பெறும்படி சுமார் ரூ. 10,000 தேவையாயிருந்தது. அதற்காகத் தமக்குச் சொந்தமான காணி பூமியையும், தமது அறைவீட்டிலுள்ள தட்டுமுட்டுக்களையும் விற்றார். அத்தோடு சில தர்மிஷ்டர்களுடைய உதவியினால் வீட்டை வாங்கினார்.

வீடு வாங்கியாயிற்று. ஆனால் வீட்டைப் பரிபாலித்துவருவது யார்? நடத்திவருவது யார்? துறவறவாசிகளா? இல்லறவாசிகளா? என்று பலவாறு சிந்தித்துக்கொண்டிருந்தார். ஜெபஞ்செய்து சர்வேசுரனைப் பிரார்த்தித்தபிறகு தர்மசாலைக்குத் தலைமையாக பெனுவாத்லார்தே என்பவளையும், கத்தரீன் லாசாஞ் என்பவளையும் நியமித்தார். அவர் தாமே சொன்னதுபோல அவர்களில் ஒருத்தி புதிய ஸ்தாபகத்தின் தலையாகவும், மற்றவள் இருதயமாகவுமிருந்தாள்.

இவர்கள் இருவரும் தர்மசாலையில் குடியேறின நாளில் அங்கிருந்த போஜன பதார்த்தங்களெல்லாம் ஒரு தர்ம துரைசானி அன்றையத்தினம் அனுப்பியிருந்த கொஞ்சம் வெண்ணெயும் பால்கட்டியுமன்றி வேறொன்றுமில்லை. ரொட்டி முதலாய்க் கிடையாது. வீடு வாசலெல்

லாம் சுத்தம் செய்தபிறகு தத்தம் வீட்டுக்குப் போய் ஏதாகிலும் சாப்பிட்டுவிட்டு வரலாமென்று உத்தேசித்தார்கள். ஆனால் சற்று யோசித்தபிறகு ஒருவர் ஒருவரைப்பார்த்து சொன்னதாவது: இத்தர்மசாலையின் பேர், தேவ பாராமரிக்கை. அப்படியானால் தேவ பாராமரிக்கையின் பேரில் நாம் அவநம்பிக்கைப்படுவது சரியல்ல. அவர்கள் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதுதானே, அவர்களுக்குள் ஒருத்தியினுடைய தாயார் தன் மகளை நினைவுகூர்ந்து, அனுப்பிய போஜன பதார்த்தங்கள் வந்து சேர்ந்தது. இருவரும் அதைப் பகிர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது, மற்றவளுடைய தாயார் அனுப்பிய போஜனமும் வந்தது. தேவ பாராமரிக்கை தங்களை கைநெகிழவில்லையென்று கண்டு இருவரும் சர்வேசுரனைஸ்துதித்துக் கொண்டாடினார்கள்.

தர்மசாலை ஸ்தாபகப்பெற்ற சில நாளைக்குப் பிறகு ஓர் ஏழைக் கைம்பெண்சாதியும், ஓர் வாலிபப் பெண்ணும் அவ்விடம் வந்துசேர்ந்தார்கள். வாலிபப் பெண்ணின் பேர் ஜான்மரி ஷரீனே. இவள் சரீர பலமுள்ளவளானபடியால், தர்மசாலையில் இருதயமும் தலையும்போலிருந்த இருவருக்கும் இவள் ஓர் புஜம்போலிருந்தாள்.



ரொட்டி சுடுவதும், துணிகளைக் கழுவுவதும், தோட்ட வேலைகளைப் பார்ப்பதும் இவளுடைய அலுவல்.

வீட்டலுவலெல்லாம் முடிந்ததும், அவ்விடத்தில் ஓர் பள்ளிக்கூடம் திறந்து பங்கிலுள்ள சிறு பெண்பிள்ளைகளுக்கெல்லாம் சம்பளமின்றி தர்மமாகக் கல்வி கற்றுக்கொடுத்து வந்தார்கள். சில நாளுக்குப்பிறகு லயன்ஸ் பட்டணத்திலிருந்து ஆர்ஸ் ஊருக்கு வந்த தயாள சீமாட்டி தர்மசாலைக்கு உதவியாக ஓர் நிலம் வாங்கிக் கொடுத்தாள். கூரேதார்ஸ் துவக்கத்தில் மூன்று அனாதபிள்ளைகளைத் தர்மசாலையில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வேண்டியதெல்லாம் செய்துவந்தார். கொஞ்சத்துக்குள் அறுபது அனாதபிள்ளைகள் வந்துசேர, அவர்களுக்கு உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க இருப்பிடமும் சேகரிக்க வேண்டியிருந்தது. அவர்களெல்லோருக்கும் தர்மசாலையில் போதிய இடமில்லை. வேறு கட்டடம் கட்டுவதற்கும் கையில் பணம் போதாது. அச்சமயத்தில் தரித்திரரான கூரேதார்ஸ் என்ன செய்தார்? அவரே கட்டடத்துக்கு மேஸ்திரியாகவும், தச்சனாகவும், சித்தாளாகவுமிருந்தார். தமது கையால் சுண்ணாம்பு குழைப்பார். கற்களை உடைத்து தூக்கிக்

கொண்டு போவார், இப்படி நெற்றி வேர்வை நிலத்தில் விழத் தாமே கூட இருந்து வேலை செய்து தர்மசாலையை முன்னிலும் பெரிதாக்கி, அநேக பிள்ளைகள் தாராளமாய் அங்கு ஜீவிக்கும்படி செய்தார்.

ஒருநாள் தர்மசாலையில் ரொட்டி சுடுவதற்குள்ள கோதுமை கிட்டத்தட்ட எல்லாம் முடிந்து போச்சுது. எண்பது பேருக்கு அன்றைக்குப் போஜனம் தேவை.

தர்மசாலையை நடத்திவந்த பெனுவாத் லார்தே என்ன செய்கிறது, ஏது செய்கிறதென்று தெரியாமல் திகைத்து நின்றாள். ஒருத்தி, ரொட்டி செய்கிற ஜான்மரி ஷானே என்பவளை நோக்கி, இருக்கிற கொஞ்ச மாவைக்கொண்டு ரொட்டி சுடச்சொன்னாள். அவள் அதற்கு மாறுத்தாரமாக: "என்னுடைய யோசனையும் அதுதான். ஏதுக்கும் பங்குசுவாமியுடைய ஆலோசனையைக் கேட்பது நல்லது" என்று சொல்லிக்கொண்டு கூரேதார்விடம் போய் சங்கதியைச் சொல்ல, அவர் சொன்ன மறுமொழி என்னவென்றால்: "இருக்கிற மாவில் புளிக்காரம் போட்டு வழக்கம்போல ரொட்டி செய்யுங்கள். தேவ பராமரிக்கை நம்மைக் கைவிடமாட்டாது. அது நிச்சயம்."



கீழ்ப்படிதலையே ஆபரணமாகப் பூண்ட அவள், சுவாமியார் சொன்னபிரகாரஞ் செய்து, ரொட்டி சுடும்போது நடந்த சம்பவத்தைக்குறித்து அவள்தானே சொல்லுவாள்: "நான் பங்குசுவாமி சொன்னபடி ரொட்டிசெய்ய மாவைப் பிசையும்போது, மாவு கொஞ்சம் கொஞ்சமாய்



அதிகரிக்கக் கண்டேன். பிசையப்பிசைய இன்னம் அதிகம் அதிகமாக எழும்பிக்கொண்டேயிருந்தது. ஆ! ஆச்சரியமே! இரண்டு சின்ன ரொட்டி முதலாய்ச் செய்யப் பற்றாத மாவைக் கொண்டு, சுமார் இருபது இராத்தல் நிறையுள்ள பத்து ரொட்டி சுட்டேன். சுபாவமாய்ச் செய்யவேண்டுமானால் ஒரு சாக்கு மாவு தேவை

யாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஓ! அந்த ரொட்டி எவ்வளவு ருசியாயிருந்தது!"

இந்த அற்புத வர்த்தமானத்தை ரொட்டி செய்த ஜான்மரி ஷானே என்பவரும், அந்த அற்புத ரொட்டிகளைப் புசித்த கத்தரீன் லாசாஞ், விகியாத் இன்னம் வேறே அநேகர்களும், கூரேதார்ஸின் சரித்திராசிரியராகிய சங். மொனேன் சுவாமியாருக்கு விபரமாய் எடுத்துரைத்தார்கள்.

மற்றொருதடவை தர்மசாலையில் உண்ண உணவு ஒன்றுமில்லை. கையில் காசுமில்லை. என்ன செய்கிறது? கூரேதார்ஸ் முதலாளியம்மாளைக் கூப்பிட்டுச் சொன்னதாவது: இதெல்லாம் என் பாவத்துக்கு ஆக்கினை. நமது பிள்ளைகளையெல்லாம் தங்கள் தங்கள் வீடுகளுக்கு அனுப்பிவிட நேரிடும்போலிருக்கிறது. அதுகளைப் பட்டினியாய்ப்போடுகிறது சரியா?...

ஆயினும், பயத்தோடும் நம்பிக்கையோடும் ஜான்மரி ஷானே என்பவனைக்கூட களஞ்சியத்துக்குப் போய் ஏதாகிலும் அகப்படுமாவென்று பார்க்கப் போனார். மெதுவாய் படிக்கட்டின் வழியாயிறங்கி களஞ்சியத்தின் வாசலை நடுநடுக்கத்துடன் திறந்தார்.



ஓ! சொல்லரிய அற்புத காட்சியே! அங்கு இருவரும் என்னத்தைக் கண்டார்கள். களஞ்சியம் நிறைய அப்போதுதான் தானியம் சாக்குசாக்காய்க் கொட்டிக்கிடந்தது.

ஜான்மரி வியான்னி விரைந்து தமது பிள்ளைகளிடம் போய், "ஓ என் அருமைக் குழந்தைகளே! நான் தேவ பராமரிக்கையின்மட்டில் முழு நம்பிக்கை வைக்கவில்லை. ஆண்டவர் என்னைத் தண்டித்தார்" என்றார். இப்பேர்ப்பட்ட புதுமைகள் நடக்கும்போது, கூரேதார்ஸ் தாழ்ச்சியினால் தம்மைப்பற்றி இவ்வாறு சொல்லுவது வழக்கம்.

இந்தப் புதுமையைச் செய்தவர் அர்ச். பிரான்சீஸ் ரேஜிஸ் என்று கூரேதார்ஸ் அடிக்கடி சொல்லிவந்தார். ஏனெனில் அந்த அர்ச்சிஷ்டவருடைய அர்ச்சியசிஷ்ட பண்டத்தைக் களஞ்சியத்தில் வைத்து அவர்தான் களஞ்சியத்துக்குப் பரிபாலகராயிருக்கவேணுமென்று பிள்ளைக்குரிய பத்தியுடன் அவரோடு உடன்படிக்கை செய்திருந்தார்.

சில வருஷங்களுக்குப்பிறகு பெல்லே நகரத்து மேற்றிராணியாராகிய மகா சங். தேவீ (Mgr. Devie) ஆண்டவர் ஒரு புதுமையின்

உண்மையைக் கூரோதார்ஸ் வாயாலேயே கேட்கும்படி எடுத்த உபாயம் மகா சாதுரியமானது. அவர் தர்மசாலையைச் சுற்றிப்பார்த்தபிற்பாடு, சங். கூரோதாரோடு களஞ்சியத்துக்கும் வந்தார். பற்பல காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, மேற்றிராணியார் கையைக் கொஞ்சம் உயர்த்தி, “சுவாமி, தானியம் இவ்வளவு உயரம் எழும்பியிருந்ததல்லவா” என்று கேட்க, கபடமென்பது கிஞ்சித்தேனும் அறியாத கூரோதார்ஸ்: “இல்லை ஆண்டவரே, இதற்கும் அதிக உயரம். இதோ பாரும், இவ்வளவு உயரம்” என்று தமது கையை இன்னம் அதிகமாய் உயர்த்திக் காண்பித்தார்.

எப்படிக் கூரோதார்ஸ் தேவபராமரிக்கையின் பேரில் தமது முழு நம்பிக்கையை வைத்தாரோ, அப்படியே நாமும் வைக்கக்கடவோம். சேசுநாதர் தாமே சுவிசேஷத்தில் சொல்லுகிறதாவது: உங்கள் உயிர் பிழைக்க எதை உண்போமென்றும், உங்கள் உடலை மூட எதை உடுப்போமென்றும் ஏக்கமாயிராதேயுங்கள். உணவைவிட உயிரும் உடையைவிட உடலும் மேன்மையானதல்லவோ? ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில்



குவிக்கிறதுமில்லை. ஆகிலும் அவைகளை உங்கள் பரம பிதா போஷித்துவருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்களல்லவோ? என்னத்தை உண்போம் அல்லது என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள். ஏனெனில் இவைகளெல்லாவற்றையும் அஞ்ஞானிகளே தேடுகிறார்கள். உங்கள் பிதாவானவரோவென்றால், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று அறிவார். ஆகையால் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும், அவருடைய நீதியையும் முந்தமுந்தத் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூட்டிக் கொடுக்கப்படும். ஆகையால் நாளையைக்குறித்து கவலைப்படாதிருங்கள், நாளையத்தினம் தன்மேல் கவலை கொண்டிருக்கும். ஏனெனில் அன்றாடக் கவலையே அன்றன்றைக்குப் போதும்.

# 8-ம் அதிகாரம்.

## அவர் பசாசினால் அனுபவித்த துன்பங்கள்.

நரகக் கூளிகள் முற்காலத்தில் மாத்திரமல்ல இப்போது முதலாய் சில சமயங்களில் மனுஷ ரூபமாய் அல்லது அசேதன ஜெந்துக்கள் ரூபமாய் வந்து பற்பல இக்கட்டு வருத்துவிக்கிறதென்பது வாஸ்தவம். ஆண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதும் வாஸ்தவம்தான். ஆகையால் ஒரு காரியம் மெய்யாகவே பசாசினிடமிருந்து வருகிறதா இல்லையாவென்று பகுத்தறிவது அவசியம். நாம் சொல்லப்போகிற வர்த்தமானங்களினின்று, கூரே தார்ஸை பற்பல விதமாய் சோதித்தது பசாசு தானென்று தெற்றென விளங்கும்.

பேயினங்கள் அவரிடம் வந்த முதற்தடவையைக் குறித்து அவர்தானே சொன்னதாவது: பசாசு முதல்முதல் என்னிடம் வந்தது, ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்கு வெளிக்கதவில் ஒரு பெரிய தடியைக்கொண்டு மூன்றுவிசை பலமாய் அடித்தாப்போல சப்தம் கேட்க,



நான் யார் அங்கே? என்றேன்— பதில் ஒன்றுமில்லை. ஆகையால் தேவமாதாவையும், காவல் சம்மனசானவரையும் பார்த்து வேண்டிக்கொண்டு படுக்கப்போனேன். நித்திரை போகுமுன்னே, திரும்பவும் மூன்றுதடவை பெருஞ் சத்தம் கேட்டது. இந்தவிசை வெளிக் கதவிலிருந்தல்ல, ஆனால் என் அறைக்கு முன்னாலிருந்த கதவினின்று சத்தம் புறப்பட்டது. திரும்பவும் அங்கே யார்? என்று கேட்டேன். இத்தடவையும் யாதோர் மறுமொழியில்லை. சிலவேளை ஆர்ஸ் துரைசாணி சகோதரன் அனுப்பிய ஜாமான்களை கள்ளர் திருட வந்திருக்கிறார்களோ என்னமோ என்கிற சந்தேகமிருந்தது.

அதற்குப் பிறகு பலாக்கிரமசாலிகளான இருவரை என்னோடு அறையில் படுக்கும்படி செய்தேன். அவர்களும் ஒவ்வொரு இரவும் கதவைப் படீர் படீர் என்று அடிக்கிற சத்தத்தைக் கேட்டார்களேயல்லாமல் அடித்தவன் யாரென்று கண்டுபிடிக்கவில்லை. இது சுபாவமான காரியமல்லவென்பதற்கு ஓர் அத்தாட்சி யென்னவென்றால்: ஒரு நாள் நடு இராத்திரியில் பனிக்கட்டி உறைந்திருக்கும்போது முன்சொன்னதுபோல மூன்றுதடவை கதவைத் தட்டுகிற சப்

தம் கேட்டது. உடனே ஓடிப்போய்க் கதவைத் திறந்தேன். ஒரு அற்பப் பிராணியுமில்லை. யாராவது வந்திருந்தால் பனிக்கட்டியில் அடிச்சுவடு இருக்கவேண்டும்; அதுவுமில்லை. ஆகையால் பசாசு என்னை அச்சுறுத்த வந்திருக்கிறதென்று நிச்சயமாய் அறிந்துகொண்டேன்.

இவர் சுமார் முப்பது வருஷம் பசாசினுடைய உபத்திரவங்களை அநுபவித்துவந்தார். அத்தோடு இந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு ஓர் பலத்த சோதனை வந்தது. அதனால் அநுபவித்த மனோ வியாகுலம் இம்மாத்திரமென்று அளவிட்டுச் சொல்லிமுடியாது. அதெங்ஙனமென்றால், நரகம் தமது காலின்கீழ் திறக்கப்பட்டிருக்கிறதாகவும், அந்த அக்கினி நிறைந்த பாதாளத்தில் தமக்காகக் குறிக்கப்பட்ட இடம் இதுதானென்று ஓர் அசரீரி சப்தம் கேட்பதாகவும் தோன்றியது. ஆனால் அவர் எவ்வளவுதான் உள்ளாந்தரத்தில் சொல்லொண்ணா மனோவேதனை அநுபவித்தாலும், அவருடைய முகத்தில் எப்போதும் அர்ச்சியசிஷ்டவர்களுக்குரிய முகமலர்ச்சி காணப்பட்டது.

சில சமயங்களில் இராமுழு பசாசு அவருடைய அறைக்குள் நுழைந்து திரைச்சீலைகளைத் துண்டுதுண்டாய்க் கிழிப்பதாகவும், நாற்காலி



மேசைகளை அங்குமிங்கும் எறிவதாகவும் தோன்றும். பகடியாக பசாசு அவரைப்பார்த்து "அடே வியான்னி! அடே வியான்னி, உருளைக்கிழங்கு சாப்பிடுவோனே! நீ எங்களிடம் அகப்பட்டாய், அகப்பட்டாய்" என்று சொல்லும். வேறு சமயங்களில், பட்டாளம் புறப்படுவதுபோலவும், ஊளையிடுவதுபோலவும் அல்லது தச்சன் பலகையை இழைப்பதுபோலவும், ஆணி கடாவுவதுபோலவும், மேசையில் மத்தளம் அடிப்பதுபோலவும், இப்படியாக என்னென்ன விதமாய் அவருடைய தூக்கத்தைக் கெடுத்து உபத்திரவம்பண்ணக்கூடுமோ, அதுவெல்லாம் செய்யும். ஒருசமயம் இப்படி அட்டகாசம் செய்துகொண்டிருக்கும்போது கூரே தார்ஸ் "என் ஆண்டவரே! பாவிகள் மனந்திரும்பத்தக்கதாக தூங்காமல் நான் அநுபவிக்கிற துன்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" என்றார். என்றவுடனே அந்த சப்தம் அமர்ந்தது.

இந்த அபூர்வ சம்பவங்கள் ஆர்ஸ் ஊரில் மாத்திரமல்ல, சுற்றுக்கிராமங்களிலும், பட்டணங்களிலும் பிரசித்தமாயின. சிலர் சற்றேனும் நம்பவில்லை.—அவரை அறிந்தவர்களோ சந்தேகப்படவில்லை. ஏனெனில் இல்லாததை உருசி

கரிக்கிற குணம் அவரிடத்தில் கிடையாது. மேலும் அவருக்கு கூர்மையான கண்ணும், நல்ல செவியும், சரியான ஞானமுமிருந்தபடியால் இது விஷயத்தில் தவறுவது கூடாதகாரியம். அன்றியும் அவைகள் ஒரு நாள் அல்லது ஒரு மாசம் ஒருநடவை நடந்தவைகள் அல்ல; முப்பது வருஷம் பலநூறுதடவை நடந்தவைகள்.

(கூரேதார்ஸ் பசாசுக்குக் கிராப்பேன் என்கிற பட்டப்பேர் கொடுத்திருந்தார்.)

என்றாலும், இவைகளையெல்லாம் நம்பாதவர்களுக்குள் பெரும்பாலர் அக்கம்பக்கத்திலுள்ள குருக்களே. அவர்கள் நினைத்ததென்னவென்றால் கூரேதார்ஸ் மற்றவர்களைப்போல சரியாய்ச் சாப்பிடுகிறதில்லை, தூங்குகிறதில்லை. அதினால் தான் இராவில் சித்தம் கொஞ்சம் தடுமாறுகிறது. பசாசும் பூதமும் எல்லாம் பொய். அவர் மாத்திரம் மற்றவர்களைப்போல சாப்பிடட்டும், தூங்கட்டும்; பசாசெல்லாம் பறந்தோடிப்போம் என்றார்கள். அவர்களுக்குள் சிலர் இவரை உன்மத்தம் கொண்டவரென்றும், மதிப்பிரம்ஷம் உடையவரென்றும் சொல்லப் பின்வாங்கவில்லை. ஆயினும் அப்படிச் சொன்னவர்கள் தாங்கள் செய்த குற்றத்தை அறிந்து சங்-



வியான்னியுடைய அர்ச்சியசிஷ்டதனத்தைப் புகழ ஓர் சமயம் வாய்த்தது.

1826-ம் ௵ இவருடைய சிநேகிதராகிய சங். கிராஞ்சே சுவாமி இவரையும் வேறு சில குருக்களையும் திரிவியே என்கிற தமது பங்குக்கு அழைத்து ஜனங்களுக்குப் புத்தி பிரசங்கம் பண்ணவும் பாவசங்கீர்த்தனம் கொடுக்கவும் கேட்டிருந்தார். ஏனெனில் அந்த வருஷம் ஜூபிலி கொண்டாட்டங்கள் அங்கே நடந்தது.

சுவாமிமார்களில் சிலர் ஒருநாள் இரவு பேசிக்கொண்டிருக்கும்போது, இவரைப்பார்த்து: "என்ன, உமது அறைவீட்டில் இராக்காலங்களில் பேயினங்கள் வருகிறதாமே. அதெல்லாம் என்ன? மற்ற எல்லாரையும்போல நீங்களும் உண்டு உறங்கிவருவீர்களேயாகில் இதெல்லாம் ஓடிப்போய்விடும். பேய் பூதம் என்கிறது சுத்தப் பைத்தியம். உமது அறைவீடு பாழடைந்த களஞ்சியம்போலிருக்கிறது. இராக்காலங்களில் எலிகள் வந்து பறண்டுகிறதை நீர் பசாசின் சேஷ்டையென்று விருதாவில் எண்ணிக்கொண்டு வருத்தப்படுகிறீர்" என்று அவரைக் கொஞ்சம் இகழ்ச்சியாய்ப் பேசினார்கள். கூரேதார்ஸ் இவைகளையெல்லாம் தாழ்ச்சியுடனும்

சாந்தத்துடனும் கேட்டுக்கொண்டிருந்தாரே யன்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. இதற்குப் பிறகு ஒவ்வொருவரும் தத்தம் அறையில் நித்திரை செய்யப்போனார்கள். எல்லாரும் அயர்ந்து தூங்குகிற நடுச்சாம வேளையில், கோடையிடி முழங்கினாற்போல பயங்கரமான பெரிய சத்தங்கேட்டது. கதவு கபாடங்களும், ஜன்னல் சாளரங்களும், படார் படாரென்று அடிக்கத் துவக்கின. சுவர்கள் பிளந்து இடிந்து விழுகிறாப்போலிருந்தது. சங். வியான்னியை இகழ்ந்து பேசியவர்கள், அவர் அந்த இரவு சொன்ன வார்த்தைகளை நினைவுகூர்ந்தார்கள். அதாவது: "இன்று இராத்திரி ஏதாகிலும் ஓர் அசம்பவம் நடந்தால் ஆச்சரியப்படவேண்டாம்." அவர்கள் சட்டென்று படுக்கையை விட்டெழுந்து கூரேதார்ஸ் இருந்த அறைக்கு ஓடிப் போய் பார்க்கும்போது அவர் சுகமாய்ப் படுத்துக்கொண்டிருந்தார். அங்கே வந்தவர்கள் எல்லாரும் "எழுந்திரும்---உடனே எழுந்திரும்--- அறைவீடு விழுமாப்போலிருக்கிறது" என்று ஆத்திரத்துடன் கத்த, அவர் கலக்கமற்ற முகத்துடன் சொல்வார்: "இது கிராப்பேனுடைய வேலையென்று எனக்கு நன்றாய்த் தெரியும். பேசாமல் நீங்கள்போய் படுத்துத் தூங்குங்கள்.



ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" இந்த வார்த்தைகள் அவர்களுக்குத் தைரியத்தை வருத்துவித்தது. அப்போதுதானே சத்தமும் நின்று போய்விட்டது.

இதுவரையில் கூரேதார்ஸ் பைத்தியங் கொண்டவரென்று நினைத்தவர்கள் இப்போது அவர் ஒரு பெரிய அர்ச்சியசிஷ்டவரென்று தெளிவாய் அறிந்துகொண்டார்கள்.

பசாசு அவருக்கு செய்த இன்னம் ஒரு விநோத சம்பவத்தைமாத்திரம் இங்கெடுத்துரைப்போம்.

கூரேதார்ஸ் சரித்திரத்தை எழுதியிருக்கிற சங். மொனேன் அவரோடு சில வருஷம் உபகுருவாக ஆர்ஸ் ஊரில் இருந்தவர். அவர் தமது கண்ணால் கண்டதைத்தானே எழுதிவைத்திருக்கிறார். அவர் சொல்லுவது: ஒருநாள் நான் அதிகாலையில் கோவிலுக்குப் போகும் போது, வெந்துபோன துணிநாற்றம் எங்கும் வீசியது. கோவிலில் பூசை செய்து ஞானோபதேசம் கற்றுக்கொடுத்துவிட்டு அறைவீட்டுக்குத் திரும்பி வரும்போது சுமார் ஏழுமணி இருக்கும். வரும்போது அறைவீட்டுக்கு முன்னால் கிராமத்தார் எல்லாரும் பெருங்கூட்

டமாய்க் கூடியிருந்தார்கள். ஏதோ ஓர் பெரிய விபத்து நடந்திருக்கவேண்டுமென்று முக்லில் நினைத்தேன். அந்த சந்தடியில் என் காதில் விழுந்தது "படுக்கை கிராப்பேன்" என்கிற இரண்டு வார்த்தைகள் மாத்திரந்தான். ஒருவன் கிட்டப்போய் "என்ன சங்கதி என்று வினவ அவன் சொல்வான்" என்ன! உங்களுக்குத் தெரியாதா? ராத்திரி கூரோதார்ஸின் படுக்கையை கிராப்பேன் கொளுத்திவிட்டான். வந்து பாருங்கள், வந்து பாருங்கள். அதே நேரத்தில்தானே வெந்துபோன படுக்கையை சிலர் தூக்கிக்கொண்டு வெளியே கொண்டு போட்டார்கள். நான் உடனே அறைவீட்டுக்குள் நுழைந்து நேராய் கூரோதார்ஸைப் பார்க்கப்போனேன். அவருடைய அறையில் எல்லாம் அலங்கோலையாய்க்கிடந்தது.

அர்ச். பிலோமினம்மாளுடைய அர்ச்சிய சிஷ்ட பண்டமிருந்த அருளிக்கத்துக்கிட்ட நெருப்புவந்தவுடனே நின்றுவிட்டது. இது ஓர் பெரிய புதுமையென்பதற்குச் சந்தேகமில்லை.

கூரோதார்ஸ் என்னை நோக்கி மலர்ந்த முகத்துடன் சொல்வார்: சர்வேசுரனிடமிருந்து வெகு நாளாய் இந்த வரம் கேட்டுக்கொண்டு



வந்தேன். கடைசியாய் அதை எனக்களித்தார். பங்கில் என்னைப் பார்க்கிலும் ஏழை ஒருவருங் கிடையாது. ஏனென்றால் ஏழைகளுக்கு முதலாய் படுக்கை உண்டு. எனக்கு இப்போது படுக்கையுமில்லை. நான் அவருடைய ஸ்திதியைக் குறித்து அநுதாபப்படும்போது அவர் சொன்ன உச்சித மறுமொழியாவது: ஓர் சின்னஞ் சிறிய அற்பப் பாவத்துக்கு முன்னால் நான் அநுபவிக்கிற தீமைகளெல்லாம் என்ன? ஒன்றுமில்லை.

அன்று மத்தியானம் சாப்பிட்ட பிறகு நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கையில்: இது பசாசுதான் செய்திருக்கவேண்டும். உங்களுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர்: என் மித்திரனே அது நிச்சயம். 'கிராப்பேன்' என்னைச் சுட்டெரிக்க சக்தியற்றவனாயிருக்கிறபடியால், என் படுக்கையைக் கொளுத்தினான். அவனுக்கு என்மேல் அதிகப்பகையிருக்கிறது. அது நல்ல அடையாளம். நமக்கு அதிக தர்மப்பணம் கிடைக்குமென்றும், அநேக பாவிகள் மனந்திரும்புவார்களென்றும் அர்த்தமாகிறது. மற்றநேக ஆத்துமாக்கள் கெட்டழிந்து நரகத்திற்கு போவதற்குக் காரணமாயிருக்கிற பணத்தைக்

கொண்டு நாம் நன்மை செய்வதைக் கண்டால் சாத்தானுக்குக் கனகோபம் கிளம்புகிறது.

அவர் சொன்ன பிரகாரம் நடந்தது. அந்த வாரத்தில் தர்மமாக ஏராளமான பணம் வந்தது. அநேக பாவிகளும் மனந்திரும்பினார்கள்.

சர்வலோகத்தையும் படைத்த கர்த்தரே பசாசினால் சோதிக்கப்பட்டிருக்கும்போது அற்ப மனுஷர்களாகிய நாம் அந்தத் துஷ்ட அரூபியால் சோதிக்கப்படுவது ஆச்சரியமல்ல. பசாசுக்கு ஊழியம்பண்ணுகிறவர்களை அது அதிகமாக அலைக்கழிக்காது. ஆனால் அதைத் துவேஷித்துத் தள்ளி சர்வேசுரனுக்குப் பிரியப்படுகிறவர்களை சும்மா இருக்கவிடாது. சோதனை வேளையில் தைரியத்தைக் கைசோரவிடாமல், கூரே தார்ஸ்போல ஜெபஞ்செய்து பசாசை வெல்லக்கடவோம்.

## 9-ம் அதிகாரம்.

### அவர் புறத்தியாரால் அனுபவித்த துன்பங்கள்.

"என்னுடைய நாமத்துக்காக உலகம் உங்களைப் பகைக்கும். ஏனெனில் உங்களைப் பகைக்குமுன்னே என்னைப் பகைத்தது. அப்படிப் பகைக்கிறவர்கள் சர்வேசுரனுக்கு ஊழியம் பண்ணுகிறதாக நினைப்பார்கள்" என்று சேசுநாதர்தாமே திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். கூரே தார்ஸ் பசாசினால் அலைக்கழிக்கப்பட்டது பெரிய துன்பமல்ல. துஷ்டர்கள் அவரைப் பழித்ததும் அத்தனை கஷ்டமாயிருக்கவில்லை. ஆனால் நல்ல எண்ணமுடையவர்கள், அவருக்கு ஆறுதல் சொல்லக் கடமைப்பட்டிருந்தவர்கள், அவரை மனநோகப் பண்ணினார்கள். அவர் பட்ட வருத்தங்களுக்குள்ளெல்லாம் அதிகக் கடினமாயிருந்தது இதுதான்.

குருக்கள் அர்ச்சியசிஷ்டதனத்தை நாடி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாரும் அர்ச்சியசிஷ்டவர்களல்ல. சிலர் கெட்டுப்போயிருக்கிறார்கள். சிலரிடம் சிற்சில துர்க்குணங்கள் இருக்கக்கூடும். குருக்கள் சேசுநாதருடைய ஸ்தானத்திலிருந்தபோதிலும்,

அவர்கள் மற்றவர்களைப்போல மனுஷர்கள்தான் என்பதை மறந்துபோகவேண்டாம். குருவானவுடனே மனுஷனுக்கு சுபாவமாயுள்ள சார்புகளெல்லாம் அவனைவிட்டு நீங்கிப்போகுமென்று நினைக்கிறது தர்க்கப்பிசகு. அவரும் மற்றவர்களைப்போல சோதனையோடு போராடுகிறவர். அவரும் ஆசாபாசங்களுடையவர். அவரும் குற்றங்குறையுள்ளவர். ஆகையால் குருக்களிடம் ஓர் அற்பக்குறை கண்டமாத்திரத்தில் இடறல்படத் தேவையில்லை. அப்படி இடறல்படுகிறவன் யாரென்றால், தன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப் பாராமல், தன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறவனன்றி வேறொருவனுமல்ல.

நாம் இப்போது சொல்லப்போகிற வர்த்தமானங்களைச் சரியாய்க் கண்டுபிடிப்பதற்கு மேற்சொன்னவைகள் பிரயோஜனமாயிருக்குமென்றே அவைகளை இங்கு எழுதினோம்.

கூரேதார்ஸின் பிரதிஷ்டை தேசமெங்கும் பரவ, நூற்றுக் கணக்கானபேர் நாடோறும் பற்பல ஊர்களினின்று ஆர்ஸ் ஊருக்கு வந்து அவரிடம் பாவசங்கீர்த்தனம் பண்ணத்துவக்கினார்கள். தங்களிடம் பாவசங்கீர்த்தனத்துக்கு வராமல் ஜனங்களெல்லாம் இந்த ஏழைக் குரு



விடம் பாவசங்கீர்த்தனம் பண்ணப் போகிறதைக் கண்ட சில குருக்களுக்கு, சாஸ்திரத்தில் தேர்ச்சியடையாத கூரேதார்ஸ் ஜனங்களுக்கு விமரிசையற்ற புத்திமதிகளை அல்லது தப்பான ஒழுங்குகளைக் கொடுக்கிறாரோ என்கிற வீண் சந்தேகம் உண்டானது. இப்படிச் சொன்னவர்கள் கெட்டவர்களல்ல. அவர்கள் தாங்கள் செய்வது ஒரு புண்ணியக் கிரிகை யென்றும், சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கு அவசியமென்றும் எண்ணியிருந்தார்கள். வேறு சில விசாரணைக் குருக்கள், தங்கள் பங்கிலுள்ளவர்கள் யாராகிலும் கூரேதார்விடம் பாவசங்கீர்த்தனம் பண்ணினால், அவர்களுக்குத் தண்டனை விதித்தார்கள். வேறு சிலர் அவருக்கு விரோதமாய்ப் பிரசங்கிக்கத் தலைப்பட்டார்கள்.

பலதடவை அவர் சொன்னதையும் செய்ததையும் விபரீத அர்த்தப்படுத்தி, அல்லது ஒன்றை நூறாகப் பெருக்கி அவருக்கு அவமானம் வருத்துவித்தார்கள். காரியம் இந்தடவிலிருக்கும்போது ஒருநாள் சங். மோனென் அவரைப் பார்த்து: “சுவாமி, உங்களுக்கு விரோதமாய் எத்தனையோ காரியங்களைச் சொல்லுகிறார்கள், உங்கள் மனதில் கலக்கமில்லையா? சமாதானம் இருக்கிறதா?” என்று கேட்க, அர்ச்சியசிஷ்ட

வர் முகமலர்ச்சியுடன் சொல்வார்: "சிலுவை
யானது ஒருவனுடைய சமாதானத்தைச் சீர்குலை
க்கிறதாவது? உலகத்துக்கு சமாதானம் கொடுக்
கிறது சிலுவையன்றி வேறென்ன? நம்முடைய
இருதயங்களுக்கு சமாதானத்தைக் கொண்டு
வரவேண்டியது சிலுவைதான். நாம் சிலுவை
யை சிநேகியாமலிருப்பதே நம்முடைய சஞ்ச
லங்களுக்கெல்லாம் காரணம். சிலுவைக்கு அஞ்
சிப் பின்வாங்குவதுதான், சிலுவையைப் பளு
வாக்குகிறது. நல்லமனதுடன் சுவாமிக்காக
ஏற்றுக்கொள்ளுகிற சிலுவையில், சிலுவையின்
பாரம் தோன்றாது. சமாதான அமரிக்கையுட
ன் ஏற்றுக்கொள்ளுகிற துன்பம் துன்பமல்ல.
நாம் வருத்தப்படும்போது முறையிடுகிறோம்.
அது சரியல்ல. அதற்கு மாறாய், நாம் வருத்
தப் படாதபோது சிலுவை யில்லையே என்று
முறையிடவேண்டும். ஏனென்றால் சிலுவை
யைப்போல நம்மை சேசுநாதரோடு ஒன்றிக்கச்
செய்வது வேறொன்றில்லை. சிநேகத்தினாலும்
சிலுவையினாலும் சேசுநாதரோடு ஒன்றித்திரு
க்கிற ஆத்துமம் மெய்யாகவே பாக்கியமான
ஆத்துமம். எப்படி ஓர் கிறீஸ்துவன் சிலுவை
யைவிட்டு அகன்று ஓடிப்போகக்கூடும்? அப்
படி ஓடுகிறவன், நமதுபேரில் வைத்த அன்பி
னால் சிலுவையில் அறையுண்ட கர்த்தரை விட்டு



பறந்தோடிப் போகிறானென்றல்லோ சொல்
லவேண்டும். வறுமையும் சிறுமையும் நம்மைச்
சிலுவை அடியில் இட்டுக்கொண்டு போகின்ற
ன. சிலுவை நம்மை மோக்ஷவாசலுக்கு இட்
டுக்கொண்டு போகிறது. மோக்ஷத்துக்குப்
போகவேணுமானால், நிந்தை அவமானங்கள்
அநுபவிக்கவேண்டும்; மற்றவர்கள் நம்மைக்
காலால் மிதித்துச் சவட்டவேண்டும். ஆயினும்
துன்பத்தின் மத்தியில் சமாதானம் அநுபவிக்
கிறவர்களைப்போல பாக்கியவான்கள் இவ்வுல
கில் வேறொருவருமில்லை. நம்முடைய நல்ல
ஆண்டவரோடு ஏகோபித்து வருத்தமனுபவிக்
கும்போது, வருத்தம் வருத்தமாகத் தோன்
றாது, மதுரமாயிருக்கும். வருத்தப்படுகிறது
கடந்துபோகிறது. வருத்தப்பட்டதுக்கு நாம்
அடையும் பலன் நித்தியகாலம் நிலைக்கும். நாம்
ஒரு வாரம் மோக்ஷத்திலிருந்துவிட்டுத் திரும்பி
இப்பூமிக்கு வந்தால், உலகத்தில் மனுஷரெல்
லாம் அநுபவிக்கிற கஷ்ட நஷ்டங்கள், துன்ப
துரிதங்கள் எல்லாம் எவ்வளவு விலையேறப்
பெற்ற பொக்கிஷம் என்று கண்டுகொள்ளு
வோம். அப்போது எப்பேர்ப்பட்ட சிலுவை
யானாலும் நமக்குப் போதாதென்போம். சர்
வேசுரன் தமது அருமை நேசர்களுக்குக் கொ
டுக்கும் வெகுமானம், சிலுவையன்றி வேறல்ல.

ஒவ்வொருநாள் காலையிலும் நம்மை முழுவதும் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்து விட்டு, அன்றையத்தினம் வருகிற சிலுவைகளை யெல்லாம் நல்ல மனதுடன் ஏற்றுக்கொண்டு வோமேயானால், ஓ! நாம் எவ்வளவோ பாக்கிய வான்களாய் ஜீவிப்போம்! நாம் சிலுவையின் பேரில் சிநேகப் பற்றுதலைக் கொண்டோமானால், அப்போது அதின் கசப்பெல்லாம் நீங்கிப்போய் மதுரமாக மாறிவிடும். நாலைந்து வருஷமாக என்னை அநேகர் நிந்தித்தார்கள், பழித்தார்கள், அவதூறு சொன்னார்கள். சிலுவைகளுக்குக் குறைச்சலில்லை. அந்த சமயத்தில்தான் சிலுவையை நான் நேசிக்கும்படி சுவாமியை மன்றுடினேன். உடனே என்னிருதயத்தில் மனச் சந்தோஷமும், கிளர்ச்சியும் உண்டானது. அப்போதுதான் சிலுவையிலன்றி வேறெங்கும் மெய்யான பாக்கியம் இல்லையென்று சரியாய்க் கண்டுணர்ந்தேன். சிலுவை எங்கிருந்து வருகிறதென்று விசாரிக்கக்கூடாது. ஏனென்றால் சிலுவைகளெல்லாம் தேவ திருக்கரத்தினின்று தான் வருகிறது. சிலுவையைக்கொண்டு நாம் அவரைச் சிநேகிக்கிறதையும் சிநேகியாமலிருப்பதையும் அவர் அறிகிறார்."



எப்படி அர்ச்சியசிஷ்டவர்களின் இராஜனை அவதரித்த ஆண்டவர், பிலாத்து சமுகத்தில் குற்றவாளியாய்த் தலைகவிழ்ந்து, வாய் பேசாமலிருந்தாரோ, அதுபோலவே அந்த இராஜனைப் பின்செல்லுகிறவர்களும் அவரைக் கண்டு பாவித்து, நிந்திக்கப்படும்போதும் பழிக்கப்படும்போதும் வாய்திறவாமல் எல்லாம் சகித்துக் கொண்டு வருகிறார்கள். உலக ஞானிகளுக்குச் சிலுவை ஓர் பைத்தியமாகத் தோன்றுகிறது. சிலுவையின் நேசர்களுக்கு உலக ஞானம் பைத்தியமாயிருக்கிறது.

ஒரு நாள் இவருக்கு ஓர் காகிதம் வந்தது. காகிதத்தை உடைத்துப்பார்க்க அதில் எழுதியிருந்ததாவது: "உம்மைப்போல சொற்பமாய் ஞானசாஸ்திரம் படித்திருக்கிறவர்கள் பாவசங்கீர்த்தனக் கொட்டிக்கு எப்படிப் போகலாம்?" இதைப்போலொத்த இகழ்ச்சியான வசனங்கள் நிறைந்த அக்கடிதத்தை வாசித்ததும், அகமகிழ்ந்து உடனேதானே கடிதம் எழுதியவருக்கு பதில் அனுப்பினார்: "சங்கை பொருந்திய என் சகோதரனே! தாங்கள் எழுதிய கடிதத்துக்காக மிகவும் நன்றியறிந்திருக்கிறேன். என்னைச் சரியாய் அறிந்தவர் நீர் ஒருவர்தான். எனதாத்துமத்தின் பேரில் தாங்கள் இவ்வளவு

கவலையெடுத்துக் கொள்ளுகிறபடியால் தயவு செய்து இவ்விடத்தைவிட்டு என்னை மற்றோர் ஊருக்கு மாற்றும்படி செய்வீராக. தாங்கள் சொல்வதுபோல எனக்குப் படிப்பில்லை. எங்கேயாவது ஓர் ஒதுக்கிடத்திற்போய் என் பாவத்துக்காக அழுது கண்ணீர்சிந்தி என் வாழ்நாளைக் கழிக்கவேண்டுமென்பதே எனது விருப்பம்" என்று தாழ்ச்சியினால் எழுதினார். சிலநாளைக்குப்பிறகு அக் காகிதம் எழுதிய குருவானவர் தாம் செய்தது குற்றமென்று உணர்ந்து, கூரே தார்ஸ் பாதத்தில் முழந்தாளிலிருந்து மன்னிப்புக் கேட்டார்.

கொஞ்சநாளைக்குப் பிறகு வேறு சிலர் கூடி மேற்றிராணியாருக்கு ஓர் விண்ணப்பஞ்செய்து, படிப்பில்லாத இந்த கூரே தாரை அவருடைய பங்கைவிட்டு நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு பக்தி நிறைந்த தேவீ ஆண்டவர் மாறுத்தாரமாக: "நீங்கள் அவரிடமிருக்கிற மடமையில் கொஞ்சம் உடையவர்களாயிருப்பீர்களேயாகில் உங்களுக்கு மிகவும் பிரயோசனமாயிருக்கும்" என்றார்.

இதுமட்டும், நல்லவர்கள் கையினின்று அவர் அநுபவித்த கஸ்தி துன்பங்களை எடுத்துக் காட்டினோம். அக்கிரமிகள் அவருக்கு செய்த



நிஷ்டூரங்கள் என்னவென்று சுருக்கமாய் இங்கு எடுத்துக்காட்டுவோம். மனுஷன் தன் கண்விழியைப்போல் இவ்வுலகத்தில் பாதுகாப்பது தன்னுடைய நல்லபேர் என்பது நிச்சயம். தன்னுடைய பேருக்கும்கீர்த்திக்கும் வந்த அவமானத்தைத் தாளமாட்டாமல் உயிரிழந்தவர்கள் பலர். ஆனால் மனுஷப்பிறவிகளென்கிற பேர் வகிக்க சுதந்தரமில்லாத நாணமிழந்த கசடர்கள், தங்கள் நல்ல பெயரை இழந்தபிற்பாடு மற்றவர்கள் பெயரையும் பங்கப்படுத்த முயலுவது வழக்கம். அப்பேர்ப்பட்ட சிலர் கூரே தார்ஸ் ஓர் கள்ள ஞானியென்றும், துர்நடத்தையுள்ளவனென்றும் படுபாவியென்றும், சண்டாளனென்றும் இவ்வாறு அவதூறு சொல்லி நிந்தித்தார்கள். அன்றியும் அவர் அறை வீட்டின் சுவரிலும், தெருக்களிலும் அவருக்கு விரோதமாய் எழுதினார்கள்.

எச்சும், திட்டும், பழிப்பும் நிறைந்த கையொப்பமில்லாத கடிதங்களையும், கள்ள ஒப்பம் போட்ட கடிதங்களையும் அவருக்கு அனுப்பினார்கள். சங். மொனேன் அவரைப்பார்த்து: "இதுகளெல்லாம் நாணங்கெட்ட துஷ்டர்களுடைய அலுவல்" என்று சொல்ல, தாழ்ச்சியே அணிகலமாகப்பூண்ட அர்ச்சியசிஷ்டவர் சொல்வார்: "அவர்கள் தான் என்னுடைய நிலைமையை

சரியாய் அறிகிறார்கள். தெருவிலுள்ள புழுதியை மனுஷர் காலால் மிதிக்கிறதுபோல இவர்களும் என்னை மிதிக்கிறார்கள். இது எவ்வளவோ பாக்கியம்! ஆனால் இதனால் அவர்கள் நல்ல ஆண்டவரை மனநோகப் பண்ணுகிறார்கள் என்று மாத்திரம் நான் கஸ்திப்படுகிறேன். என்னை அவர்கள் நிந்திக்கிறதினால் எனக்கு வருத்தமில்லை. ஏனென்றால் உலகம் பழித்தால் பரலோகம் ஆசீர்வதிக்கும் என்பது சத்தியம்."

வேறொரு சமயம் பங்கு ஜனங்களால் தொந்தரவு அநுபவித்த ஓர் குருவானவர் இவரிடம் வந்து முறையிடும்போது இவர் கொடுத்த மறுமொழியாவது: "என் சிநேகிதனே, உம்முடைய பங்கு ஜனங்கள் சொல்லவேண்டியதெல்லாம் வாய்பாலிக்கச் சொல்லட்டும், எல்லாம் சொல்லியான பிற்பாடு சும்மாயிருப்பார்கள். பங்குசுவாமியிடத்தில் இருக்கவேண்டிய ஓர் முக்கிய புண்ணியம், பொறுமை. பொறுத்தவர் பூமியாள்வார் என்கிற அநுபோக வாக்கியம் பங்குசுவாமிகளுக்கே பூரணமாய்ச் செல்லும்."

சுமார் எட்டு வருஷகாலமாய் நல்லவர்கள் கையினின்றும், பொல்லாதவர்கள் கையினின்றும் மேற்சொன்ன நிர்ப்பந்தங்களை யெல்லாம் அநுபவித்து வந்தார். அத்தனை வருஷகாலமும்



ஒருதடவை யென்கிலும் அவர் முறையிட்டவரல்ல. அன்றியும் எவ்வளவுதான் அவர் கஸ்தியினால் பூரிக்கப்பட்டிருந்த போதிலும், அவருடைய முகம் எப்போதும் ஒருகண்ட சீராய்க் களங்கமின்றி இருந்தது.

உண்மை எப்போதும் கடைசியில் வெளியாகும். அப்படியே இவரை நிர்ப்பந்தஞ் செய்தவர்கள் நாளாவட்டத்தில் அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவரைப் பூசித்துத் தோத்தரித்து வந்தார்கள்.

## 10-ம் அதிகாரம்.

### சர்வேசுரன் அவருக்கு அனுப்பின துன்பங்கள்.

அர்ச். அகுஸ்தீன் சொல்லுமாப்போலே: "ஓர் கிறீஸ்துவன் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிக வருத்தப்படவேண்டும். ஓர் அர்ச்சியசிஷ்டவர் சாதாரண கிறீஸ்துவர்களைப் பார்க்கிலும் அதிக வருத்தப்படவேண்டும்." சங். வியான்னியை ஓர் பெரிய அர்ச்சியசிஷ்டவராக்க வேண்டுமென்று தேவசித்தம். ஆகையால் குறேதார்ஸ் தாமே தம் சரீரத்தை உபாதித்த உபாதிகளோடும், பசாசு அவருக்கிழைத்த நிஷ்டூரங்களோடும், நல்லவர்களும் பொல்லாதவர்களும் அவருக்கு வருத்துவித்த நிந்தை அவமானங்களோடும், சர்வேசுரனும் தாம் குடித்த கசப்பான பாத்திரத்தைத் தமது தாசனும் உருசி பார்க்கச் சித்தமானார்.

அதெப்படியென்றால்: சில வருஷகாலமாய் தமதிருதயத்தில் அருள்பிரகாசம் இல்லாதது போலவும் அந்தகாரம் மூடிக்கொண்டிருந்தது போலவும் தோன்றியது. அவர் ஆத்துமாக்களுக்குச் செய்துவந்த கணக்கற்ற நன்மைகளை



சர்வேசுரன் அவர் கண்ணுக்கு மறைத்துவைத்தார். "நான் இந்தப் பங்கிலிருந்து என்ன பிரயோஜனம்? என்னிடம் பத்தியில்லை, புத்தியில்லை, விவேகமில்லை. என்னுடைய பத்தியற்ற நடத்தையினால் மற்றவர்களுக்கு தீமைவிளையக் கூடுமே" என்று மனவறட்சி அநுபவிக்கும்போது அங்கலாய்த்துக் கொண்டிருப்பார். ஆனால் ஒருக்காலும் மனதைரியத்தை இழந்தவரல்ல. எப்போதும் தேவபராமரிக்கையின் அரவணைப்பில் தம்மை முழுவதும் கையளித்தார்.

"தயாள சம்பன்னரான ஆண்டவர் என்பேரில் தமது கிருபைக்கண்ணை நோக்கி, எனக்கு கல்விகலைக்கியானங்கள், புத்திநுட்பம், தீக்ஷண்ணிய அறிவு, இது முதலியதொன்றும் எனக்குக் கொடுக்கவில்லை. என்னை நான் கண்ணோக்கிப் பார்க்கும்போது, பாவத்தையன்றி வேறொன்றும் என்னிடத்தில் காண்கிறதில்லை. நான் அவதைரியப்பட்டுக் கெட்டுப்போகாதபடி நல்வேளை சர்வேசுரன் எனக்கு என் பாவங்களையெல்லாம் காட்டுகிறதில்லை. அவநம்பிக்கையென்கிற பெருஞ்சோதனை எனக்கு வரும்போது நான் செய்வது என்னவென்றால், எப்படி ஓர் நாய்க்குட்டி தன் எஜமானன் காலடியில் கிடக்குமோ அப்படியே நானும் தேவநற்கரு

லைப்பெட்டிக்கு முன்பாகப்போய், அங்கு வீற்றிருக்கும் ஆண்டவர் பாதத்தில் வீழ்ந்து என்னை முழுவதும் அவருக்கு ஒப்புக்கொடுப்பேன்" என்பார்.

குருக்களுடைய அந்தஸ்தின் மகத்துவமும், அவர்களிடம் இருக்கவேண்டிய அர்ச்சியசிஷ்டதனமும் என்றும் இவர் கண்முன் இருந்தது. சர்வேசுரன் குருக்களுக்கு அபரிமிதமாய் அள்ளி இறைக்கிற வரங்களுக்கு அவர்கள் இசைந்து நடக்காததினால் அவர்களுக்கு உண்டாகிற நஷ்டத்தைப்பற்றி மிக்க விசனத்துடன் பிரலாபித்துக் கொண்டிருக்கும்போது, ஓர் வாலிப சுவாமி அவரை நோக்கி "குருக்களுக்குள்ளே எத்தனையோ பேர் அர்ச்சியசிஷ்டவர்களாய் நடக்கிறார்கள்" என்று சொல்ல, சங். வியான்னி சொன்ன மறுமொழியாவது: "நமக்குள்ளே அநேக பரிசுத்தவான்கள் இருக்கிறார்களென்பது நிச்சயம். முதல்முதல் குருக்களிடம் அர்ச்சியசிஷ்டதனம் இல்லாவிட்டால் யாரிடத்தில் இருக்கும்?...ஆனால் சகோதரனே, திவ்யபலிப்பூசை செய்கிறவர் பத்திச்சுவாலகராயிருக்கவேண்டும்." இவ்வளவு சொன்னபிற்பாடு கண்ணீர் ததும்ப சற்றுநேரம் மௌனமாயிருந்து, "ஆ! சிநேகிதனே! அவரை நான் வலது



பக்கம் வைக்கிறேன், அங்கே யிருக்கிறார்! அவரை இடதுபக்கம் வைக்கிறேன், அங்கே யிருக்கிறார்! ஆ! ஆண்டவரே! திவ்யபூசை யென்னவென்று சரிவர அறிவோமானால், நாம் உடனே உயிர்விடுவோம். நாம் மோக்ஷத்தில் போய் சேரும்வரையில் பூசை செய்கிற பாக்கியம் இத்தன்மையதென்று கண்டுகொள்ள மாட்டோம். குருக்கள் பக்தியில் தளர்ந்து போவதற்கு ஓர் முக்கிய காரணம், பக்திக் குறைச்சலுடன் பூசை செய்வதுதான். ஆ! சுவாமி! ஏதோ ஓர் சாதாரண கிரிகையைச் செய்கிறதுபோல பூசை செய்கிற குருவானவருடைய ஸ்திதி எவ்வளவோ பரிதாபத்துக்குரியது! சிலர் குருப்பட்டம் பெற்ற சில மாதங்களாக பத்தியுடன் திவ்யபூசை செய்துவந்தார்கள். ஆனால் அதன்பிறகு...(இவ்வளவு சொன்னதும் பேசக்கூடாமல் கண்ணீர் சிந்தி அழுதார்).—அற்பர்களாகிய நமக்கு சர்வேசுரன் அளித்திருக்கிற பதவி எவ்வளவு மேன்மையானது! பூசை செய்யும்போதும், கடன் ஜெபம் சொல்லும்போதும் அநேகர் அஜாக்கிரதையாயும், பராக்காயும் இருப்பதற்குக் காரணம், உலகசமாச்சாரம் அறியப்பிரியமும், வீண்பேச்சும், பத்திரிகைகளை வாசிப்பதுமே."

வேறொருநாள் மற்றொரு சுவாமியோடு பேசிக்கொண்டிருக்கும் போது சொல்வார்: "நாம் தைரியத்தை ஒருபோதும் இழந்துபோகக்கூடாது. அர்ச்சியசிஷ்டவர்களுடைய அட்டவணையை யெடுத்துப்பார்த்தால் பங்கு சுவாமிமார்களுடைய தொகை மகா சொற்பம். குருக்களைப்பார்க்கிலும் மேற்றிராணிமார்கள் மகா கொஞ்சமென்றாலும், அர்ச்சியசிஷ்ட பட்டமடைந்தவர்கள் அவர்களுக்குள்தான் அதிகம். குருக்கள் அவசரமாயிருக்கும்போது மற்றொரு குருவானவரைப்போய்ப் பார்க்கலாம். தேவ திரவிய அநுமானங்களை நிறைவேற்றப்போக நேரிடும்போது வெளியிடங்களுக்குப் போகலாம். ஆனால் அவசரமில்லாமல் ஒருவர் ஒருவரைப்போய்ச் சந்திப்பதும், வெளியிடங்களுக்குப்போவதும் கெடுதிக்குக் காரணம். பார்க்கிறவர்களுக்குத் துர்மாதிரிகை. பங்குசுவாமிமார்களாகிய நாம் அர்ச்சியசிஷ்டவர்களாகாததற்கு காரணம் நம்மிடத்தில் எப்போதுமிருக்கவேண்டிய தேவ ஐக்கியமும் ஒன்றிப்புமில்லை. நாம் நமதுள்ளாந்தரத்தில் பிரவேசிக்காததினால் நாம் செய்கிறது என்னவென்று சரியாய் அறிகிறதில்லை. நாம் உள்ளாந்தர மனுஷர்களாயிருக்கவேண்டும். சகோதரனே! உள்ளாந்தரமுள்ள



வனாயிருப்பதற்கு மௌனம், அடக்கவொடுக்கம், ஏகாந்தம் அவசரம். நான் நமது மேற்றிராணியாருக்குச் சொன்னது: 'ஆண்டவரே! உமது மேற்றிராசனத்தை மனந்திருப்பவேணுமானால் உம்முடைய பங்கு சுவாமிமார்களை முதல்முதல் அர்ச்சியசிஷ்டவர்களாக்கும்.' பங்குவிசாரணைத் துவக்கத்தில் நமது கிறீஸ்துவர்கள் தேவசிநேகத்தில் தளர்ந்திருந்தால் அல்லது நடத்தை சீரில்லாவிட்டால் மனம் வருத்தப்பட்டு அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரப் பிரயாசப்படுகிறோம். ஆனால் வருஷம் போகப்போக நம்முடைய கவலை குறைந்துபோகிறது. அப்போ நாம் என்ன சொல்லுகிறோமென்றால்: 'இன்னார் நல்லவழியில் நடக்கிறார்கள்' அடிக்கடி தேவ திரவிய அநுமானங்களைப் பெறுகிறார்கள். ரொம்ப நல்ல காரியம். இன்னார் நல்லவழியில் நடக்கிறதில்லை. அடிக்கடி தேவதிரவிய அநுமானங்களைப் பெறுகிறதில்லை. சரி, அவர்களுக்குத்தான் நஷ்டம்.' இப்படிப்பட்ட அசமந்தத்தை நாம் முற்றிலும் விட்டொழிக்கவேண்டும்."

ஒருநாள் தமது சிநேகிதரான ஒரு குருவானவரோடு சொன்னதாவது: "சகோதரரே! துக்கத்தினால் நான் உலர்ந்துபோகிறேன். என் ஆத்

னுமம் மரணமட்டும் கஸ்திப்படுகிறது. என்னால் இனித் தாளமுடியாது. மேற்றிராணியாருக்கு சொல்லாமல் பங்கைவிட்டு ஓர் ஏகாந்தத்துக்கு ஓடிப்போகிறது பாவமா?"

கூரோதார்ஸின் தாழ்ச்சியை அறிந்திருந்த அந்தக் குருவானவர்: "இது நீர் செய்கிற நன்மைகளையெல்லாம் கெடுக்கத்தேடுகிற பசாசின் சோதனையன்றி வேறல்ல. இந்த சோதனைக்கு இடங்கொடுத்தால் ஆத்துமாக்களுக்கும் பெரும் நஷ்டம் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை" என்றார். இந்த மறுமொழி அவருக்கு ஆறுதலைக் கொடுத்தது.

அவர் குடித்த கசப்பான பாத்திரத்தில் அதிகக் கசப்பாயிருந்தது சர்வேசுரனுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட தூஷணங்களும் கட்டிக்கொண்ட பாவங்களுமே. "என் ஆண்டவரே! இத்தனை பாவங்கள் மத்தியில் நான் இன்னம் எத்தனை வருஷம் ஜீவிக்கவேண்டும்! அர்ச்சியசிஷ்டவர்களோடு எப்போ இருப்பேன்!" என்று ஒருநாள் பிரலாபித்தார்.

நமது நல்ல ஆண்டவருக்கு விரோதமாய்ச் சொல்லப்படுகிற நிந்தைகளையும், செய்யப்படுகிற அவமானங்களையும் நினைக்கும்போது,



உலகமுடியவேண்டுமென்று வேண்டிக்கொள்ள சோதனை வருகிறது. மனுஷர்களுடைய நன்றிகெட்டதனத்தை யோசிக்கும்போது, உலகத்தின் மூலைக்குப்போய் தனிவாசஞ் செய்யலாமென்று எண்ணம் வருகிறது. ஆ! ஆண்டவரே! பொதுத்தீர்வைநாளில் எங்களுடைய நன்றிகெட்டதனம் எம்மாத்திரமிருந்ததென்று விளங்கும். ஆனால் அப்போது நேரமிராது."

ஒருநாள் பிரசங்கஞ்செய்யும்போது விசனத்துடன் அவர் சொன்னதாவது: "உலகத்திலே பங்குசுவாமியைப்போல அநுதாபப்படவேண்டியவர் ஒருவருமில்லை. அவருடைய ஜீவியமென்ன? நல்ல ஆண்டவரை பாவிகள் நிந்திக்கிறதைப் பார்க்கிறார். தேவதூஷணஞ்சொல்வதைக் கேட்கிறார். தேவகட்டளைகளை ஜனங்கள் இடைவிடாமல் மீறுவதையும் அவருடைய சிநேகத்தைப் பழிப்பதையும் காண்கிறார். அவர் காதால் கேட்கிறதோ பாவங்களன்றி வேறொன்றுமில்லை. குருவானவர் கிறீஸ்துநாதரை எப்போதும் பிலாத்து அரண்மனையில் காண்கிறாப்போலே யிருக்கிறார். பாவிகள் தங்கள் பாவங்களால் அவருடைய திருமுகத்தில் அப்புவதாகவும், அவருடைய திருச்சிரசில் முண்முடி சூட்டுவதாகவும், அவருடைய திருச்சரீரத்தைக்

கசைகளால் சர்வாங்கமும் அடிப்பதாகவும், அவரைக் காலால் மிதிப்பதாகவும், சிலுவையை அவருடைய திருத்தோளில் சுமத்துவதாகவும் பார்க்கிறதில் அவருடைய இருதயம் துக்கத்தால் நிறைந்துபோகிறது."

வெள்ளிக்கிழமைகளில் அவருடைய முகம் வெளுத்து வாடியிருக்கும். சாதாரணமாய் அவருடைய இருதயம் எவ்வளவுதான் துக்கசஞ்சலத்தால் பீடிக்கப்பட்டிருந்தபோதிலும், முகத்தில் எப்போதும் சமாதான அமரிக்கை தோன்றுமேயல்லாமல் விசனக்குறிகள் தோன்றமாட்டா.

சோதனைவேளைகளிலும், மனச்சஞ்சலநேரங்களிலும், தமது பிரதிக்கினைகளையென்கிலும், அன்றாடஞ்செய்யும் புண்ணியக்கிரிகைகளையென்கிலும் செய்யாமல் விட்டுவிட்டவரல்ல. அப்பேர்ப்பட்ட சமயங்களில் ஜெபத்தில் அதிக நேரம் செலவழிப்பார். சர்வேசுரனோடு அதிகமதிகமாய் ஒன்றிக்கப் பிரயாசப்படுவார். எந்தப் பாரச்சிலுவையென்றாலும் அவர் தமது கடமையைச் சுமுத்திரையாய்ச் செய்துமுடிக்கத் தடங்கலாயிருக்கவில்லை.

# 11-ம் அதிகாரம்.

## அவருடைய அன்றாட அலுவல்.

பதினெட்டாம் நூற்றாண்டில், பிரான்சுதேசத்திலும் மற்ற அநேக ஐரோப்பிய தேசங்களிலும், அநேக கற்றறிந்த மேதைகளும், மூடச்சித்தாந்திகளும் பாவசங்கீர்த்தனத்துக்கு விரோதமாய் எழுதவும், பிரசங்கிக்கவும் தலைப்படும்போது, ஆர்ஸ் என்னும் சிற்றூரிலுள்ள பங்குசுவாமியிடம் பாவசங்கீர்த்தனம் பண்ணும்படி, பிரான்சுதேசத்து நாலாபக்கங்களினின்றும், பெல்ஜியம், ஜெர்மனி, இங்கிலாந்து தேசங்களினின்றும் பெருங்கூட்டம் வந்தது ஆச்சரியமாமே.

ஆர்ஸில் நடந்த அநேக புதுமைகளும், சங். வியான்னியுடைய அர்ச்சியசிஷ்டதனமும், அவருடைய ஜெபத்தின் வல்லமையும், எங்கும் பரவ, ஆயிரக்கணக்கானபேர்கள் திருயாத்திரிகளாக அவ்விடம் வந்தார்கள். சங். மொனேன் சொல்லுகிறதாவது: "1848-ம் ௵ ஆர்ஸ் ஊருக்கு வந்த திருயாத்திரைக்காரர்களின் தொகை எண்பதினாயிரம். அப்படி வந்தவர்கள்

சகல ஸ்திதியிலும் அந்தஸ்திலுமுள்ளவர்கள். ஏழைகளும், தனவான்களும், சாமான்யர்களும், பிரபுக்களும், குருக்களும், மேற்றிராணிமார்களும், தங்களுடைய ஆத்தும நன்மை அல்லது சரீர நன்மையை நாடிவந்தார்கள். குருடர், செவிடர், சப்பாணி, முடம், இன்னம் எவ்வித அங்கவீனர்களும், சந்துவாதம், சூலை, காக்காய் வலிப்புள்ளவர்களும், பித்தம் பைத்தியங்கொண்டவர்களும், சுருக்கமாய்ச் சொல்லவேணுமானால் சகலவித ரோகஸ்தர்களும் சௌக்கியமடையும்படி ஆர்ஸ் ஊருக்கு திருயாத்திரையாக வருவார்கள். சரீரப் பிணிகளைக் குணப்படுத்தினதிலும் அவர் ஆத்தும நோய்களைச் சௌக்கியப்படுத்தினதே மீசுரம் என்கலாம்."

பலதடவைகளில் அநேகர் தாங்கள் அர்ச். பிலோமினம்மாளைப் பார்த்து நவநாள் செய்து அடைந்த பேருபகாரத்துக்கு நன்றி செலுத்தும்படி ஆர்ஸ் ஊருக்கு வருவார்கள். கன்னியும் வேதசாட்சியுமான அந்தப் பாலிய அர்ச்சியசிஷ்டவளின் பீடத்துக்கு முன்னால் தொங்கும் வாடா விளக்கின் எண்ணெயினால் சுகமடைந்தவர்கள் அனந்தம் பேர்.

ஆர்ஸ் ஊருக்கு வருகிறவர்கள் ஊருக்கு வந்ததும் செய்கிற முதல்காரியம் நல்ல பாவசங்கீர்த்தனம். திருயாத்திரிகளிடம் இருக்கவேண்டிய முதல் இலட்சணம் இதுதான். (நம்முடைய நாட்டில் பல இடங்களில் திருயாத்திரையென்று பேர்வைத்துக்கொண்டு கூட்டங் கூட்டமாய்ப் போய் உல்லாசமாய்ச் சுற்றித்திரிந்துவிட்டுவருவது திருயாத்திரையல்ல; தமாஷ் யாத்திரை. அப்பேர்ப்பட்டவர்கள் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்கிறதுமில்லை, திவ்ய நன்மை வாங்குகிறதுமில்லை. விநோத வேடிக்கை பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்புவார்கள். இப்பேர்ப்பட்ட திருயாத்திரை செய்து பணத்தை வீணில் செலவழிக்கிறதைப் பார்க்கிலும் வீட்டில் தங்கியிருப்பது நூறுமடங்கு மேல் என்று அறியக்கடவீர்கள்.)



நூற்றுக்கணக்கான ஜனங்கள் நாடோறும் அவரிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்யவந்தபடியால், ஏறக்குறைய நாள்முழுதும் பாவசங்கீர்த்தனத் தொட்டியிலேயே செலவழிப்பார். பாவசங்கீர்த்தனஞ் செய்யக் காத்துக்கொண்டிருப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் முறை வந்தபிற்பாடுமாத்திரம் போய்ப் பண்ணவேணும். யாராயிருந்தாலும் சரிதான், இந்த ஒழுங்கை மீறி நடக்கக்கூடாது.

ஒருநாள் ஓர் உயர்குல துரைசாணி நேர்த்தியான குதிரைவண்டியில் ஏறிக்கொண்டு

கோவில் வாசற்படியிற் வந்து இறங்கினாள். அந்நேரத்தில் அநேகர் பாவசங்கீர்த்தனஞ் செய்ய தங்கள் முறை எப்போது வருமென்று காத்துக் கொண்டிருந்தார்கள். அலாசாரி அம்மா ஜனங்களை விலகச்சொன்னாள். ஒருவரும் அசையவில்லை. இதைக்கண்டு பக்கத்தில் நின்ற ஒரு குருவானவரைப்பார்த்து: "என்ன! கூரோதார் விடம் பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படி கால் மணிநேரம் காத்துக்கொண்டிருக்கிறேன், இந்த ஜனங்கள் எனக்கு வழி கொடுக்கிறதில்லை. காத்துக்கொண்டிருக்கிறதென்றால் என்னால் முடியாது. நான் பவேரியா இராஜாவின் அரண்மனையிலென்கிலும், உரோமை வத்திக்கானில் என்கிலும் காத்துக்கொண்டிருப்பவளல்ல" என்று கம்பீர சிலாக்கியத்துடன் சொல்ல, குருவானவர் மறுமொழியாக: "என்னமாயிருந்தாலும், ஆர்ஸ் ஊரில் நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும்," என்றார்.

மற்றொரு தடவை ஒரு புதுப்பெண் பாவசங்கீர்த்தனஞ் செய்யவந்தாள். கூட்டம் எப்போதும்போல அதிகமாயிருந்தது. இதைக்கண்ட புதுமாப்பிள்ளை ஜனங்களை பலாத்காரமாய் இடித்துத் தள்ளிக்கொண்டு கடைசியாய்ப்



பெண்ணை பாவசங்கீர்த்தனத் தொட்டிக்குக் கொண்டுவந்து சேர்த்தான்.

கூரோதார்ஸ்: "மித்திரா! என்ன சங்கதி?" யென்று வாலிபனைக்கேட்க, அவன் "சுவாமி, என் பெண்சாதி பாவசங்கீர்த்தனம் பண்ண ஆசைப்படுகிறாள்" என்றான்.

"சரி: அவள் முறை வரட்டும்."

இதைக்கேட்ட அவன் பெண்சாதி "சுவாமீ, என்னால் காத்துக்கொண்டிருக்க முடியாது" என்று சற்று ஒய்யாரத்துடன் சொன்னாள்.

அதற்குக் கூரோதார்ஸ்: "அம்மா, நீங்கள் சக்கரவர்த்தினியாயிருந்தபோதிலும், உங்கள் முறைக்குக் காத்துக்கொண்டிருக்கத்தான் வேண்டும்," என்றார்.

1857-ம௵ ஆர்ஸ் ஊரில் நமது கண்ணால் கண்ட வர்த்தமானங்களை லூயின் லாக்குருவா என்பவர் விபரமாய் எழுதிவைத்தார். இவை தன் கூரோதார்வின் நாளாந்த நடபடிக்கைகளை தெளிவாயெடுத்துக் காட்டுகிறபடியால், நாம் இங்கு இவைகளை சற்று விஸ்தாரமாய் எடுத்துரைப்பது வெகு நலமாயிருக்கும். அவர் சொல்லுவதாவது:

நான் உரோமாபுரிக்கு திருயாத்திரையாய்ப் போகத் தயாராயிருக்கும்போது, கல்விமானும்

பற்பல பிரபந்தங்களுக்கு ஆக்கியோனுமான என் சிநேகிதர்களில் ஒருவர் என்னைப் பார்த்து, 'சிநேகிதனே, உரோமைமா நகருக்குப் போகுமுன்னே, ஆர்ஸ் ஊருக்கும் திருயாத்திரை போகிறது கஷ்டமாயிராது. ஏனெனில் அந்த ஊர் லையன்ஸ் நகருக்கு சமீபத்தில்தானிருக்கிறது. ஒருநாள் அங்கே செலவழிப்பது நஷ்டமில்லை. அங்கே பார்ப்பது மற்ற எந்த இடத்திலும் பார்க்க ஏலாது. சத்திய வேதம் எப்படி ஸ்தாபிக்கப்பட்டதென்றும், கிறீஸ்துவ நாகரீகம் எவ்வாறு பரம்பினதென்றும், ஜனங்கள் எப்படி மனந்திரும்பினார்களென்றும், அங்கே பார்ப்பாய். அப்போஸ்தலர்களைப்போல கிறீஸ்துநாதரை அறியப்பண்ணுகிற ஒருவர் அங்கேயிருக்கிறார். நாம் அர்ச்சியசிஷ்டவர்கள் சரித்திரங்களில் வாசிக்கிற நவங்களை அவரிடத்தில் காண்பாய். கூடுமானால் அவரைக் கண்டுபேசு. கூடாதேபோனால் அவருடைய முகத்தைப் பார், அது போதும். தற்காலத்து அறப்படித்த மூடர்கள், புதுமைகளெல்லாம் பித்தங்கொண்டவன் கண்ட கனவென்று பிதற்றுகிறார்கள். சிநேகிதனே! ஆர்ஸ் ஊரில் நீ காணப்போகிற கூரேதார்வின் ஜீவியம் நிலைத்திருக்கிற ஓர் புதுமை. இச்சமயத்தைக் கைநெகிழவிடாதே,



ஏனெனில் கூரேதார்ஸ் இன்னம் அநேக வருஷம் உயிரோடிருப்பாரென்பது சந்தேகம்.'

என்னுடைய சிநேகிதன் சொன்ன வார்த்தைகளைத் தட்டாமல் அப்படியே ஆர்ஸ் ஊருக்குப் புறப்பட்டேன். ஊருக்கு நெருங்குகிறபோது அடைமழை பெய்யத் துவக்கினது. வழியில் ஜனங்கள் வெகு சொற்பம். நான் எனக்குள்ளே சொன்னதாவது: சரி, நம்முடையபாடு அதிர்ஷ்டந்தான், நல்ல சோனைமழை பெய்கிறது. ஜனங்கள் அதிகமிருக்கமாட்டார்கள். தாராளமாய் அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்துவிட்டு அட்டியின்றிப் புறப்படலாம். இந்த எண்ணத்தோடு ஆர்ஸ் ஊர் வந்து சேர்ந்ததும் கோவிலுக்குப் புறப்பட்டேன். கோவில் வாசலில் காலெடுத்து வைத்தவுடனே என்னத்தை பார்த்தேன்? அன்று முழுவதும் விடாமல் கனத்த மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் கோவில் நிறைய ஜனங்களிருந்தார்கள். ஜனத்திரள் இராது, அவரோடு சகசமாய்ப் பேசிவிட்டு வரலாமென்று நினைத்திருந்த எனக்கு இது பெரும் ஆச்சரியத்துக்கிடமாயிருந்தது. அங்கு கூடியிருந்த ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் மௌனமாய் அடக்க ஒடுக்கத்துடனிருந்தது அதிலும் பெரும் ஆச்சரியம். கூரேதார்ஸ்

எங்கே யிருப்பாரென்று கோவிலில் நாலாபக்கமும் பார்த்தேன். ஆனால் அவரைக் காணக்கூடவில்லை. கடைசியாய் அவர் சக்கிரிஸ்துக்குள்ளே ஆண்பிள்ளைகளுக்கு பாவசங்கீர்த்தனம் கொடுப்பதாக அறிந்துகொண்டேன். அப்போது சாயுங்காலம் ஐந்துமணி. பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவர்களெல்லாம் இதற்கு முந்தின தினம் வந்தவர்கள். இன்னம் அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுடைய தொகையைப் பார்த்தவுடனே இன்றையத்தினம் நான் அவரைக் காணுவது அசாத்தியம் என்று அறிந்துகொண்டேன். ஆயினும் நான் முறையிடவில்லை. ஏனென்றால் கூரே தார்ஸ் தமது அன்றாட வேலையை எப்படி முடிக்கப்போகிறாரென்று பார்க்கச் சமயம் வாய்த்தது. சக்கிரிஸ்து கதவு திறந்து பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவர்கள் உள்ளே போகிறதாகவும், பண்ணினவர்கள் வெளியே வருகிறதாகவு மிருந்ததேயல்லாமல், கூரே தார்ஸ் இன்னம் தமதிடத்தைவிட்டு அசையவில்லை. மணி எட்டாகிவிட்டது. ஜனக்கூட்டம் வர வர அதிகரித்துக்கொண்டேயிருந்தது. இராச்செபம் சொல்லுகிற நேரம் இதுதான். கிராமவாசிகள் எல்லாரும் காலையில் பூசைக்கும், சாயுங்காலம் இராச்செபத்துக்கும் வரத்



தவறமாட்டார்கள். மணி அடித்தவுடனே கூரே தார்ஸ் பாவசங்கீர்த்தனத் தொட்டியை விட்டெழுந்து, பிரசங்கத் தொட்டிக்கு நேரே போனார். அவர் வந்தவுடனே, சுற்றிலுள்ள சகலத்தையும் மறந்தவனாய், அவரையே கண்ணோக்கினேன். எப்போதும் சர்ப்பிளிஸ் போட்டுக்கொண்டிருப்பது அவருடைய வழக்கம். அவர் செய்துவந்த அகோர தபசினால் அவர் எலும்புந் தோலுமாயிருந்தது ஆச்சரியமில்லை. தலையைச் சற்றே கவிழ்ந்துகொண்டு நடந்தார். அவருடைய வெள்ளிபோன்ற நீண்ட உரோமம் கழுத்துவரையில் தொங்கினது. என் பக்கமாய் அவர் போகும்போது என் உள்ளாந்தரத்தில் ஓர் சலனமும் கிளர்ச்சியும் உண்டானது. அவருடைய அங்கியைத்தொட்டு முத்தமிட்டேன். பிரசங்கத் தொட்டியிலேறி முழந்தாளிலிருந்து இராச்செபம் சொல்லத் துவக்கினார். இளைத்துக் களைத்து மெலிந்துபோயிருந்த அவருடைய குரல் மெல்லிய குரலாயிருந்தபடியால் அவர் சொன்ன ஜெபம் சரியாய்க் கேட்கவில்லை. ஆயினும் அவரைப் பார்த்தாலே போதும், பக்தி தன்னாலே கிளம்புகிறது. ஜெபத்துக்குப் பிறகு சர்ப்பிளிஸ் போட்டுக்கொண்டே அறைவீட்டுக்குப்போனார். இருமருங்கும் ஜனங்கள்

முழங்காலிலிருந்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள்.

அர்ச்சியசிஷ்டவரைப் பார்த்தது எனக்குப் பெரும் பாக்கியம். அவரோடு பேசவேணுமென்கிற பேராவல் என்னை ஆட்கொண்டிருந்தபடியால், மறுநாட் காலையில் எந்த நேரத்தில் வந்தால் அவரைக் கண்டுகொள்ளலாமென்று கோவில்பிள்ளையைக் கேட்க, அவன் காலை நாலு மணிக்கு வரச்சொன்னான்.

மறுநாட்காலை (1857-ம் ௵ செப்டெம்பர் மாதம் 11-ம் தேதி) சொன்னதுபோல் நாலுமணிக்கு கோவிலுக்குப் புறப்பட்டேன். இதற்குமுன் ஒருவராகிலும் போயிருக்கமாட்டார்களென்று நினைத்துக் கொண்டு கோவிலுக்குள் நுழையும்போது, இது என்ன ஆச்சரியம்! அதற்குள்ளே பெருங்கூட்டம் வந்திருந்தது. என்னுடைய முறை வரும்படி வெகுநேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருந்தது.

அங்கு நின்ற சிலரைப் பார்த்து: நீங்கள் இங்கே எப்போது வந்தீர்கள் என்று வினவ, அவர்கள் அதிகாலை இரண்டு மணிக்கெல்லாம் கோவிலுக்கு வந்துவிட்டோம் என்றார்கள்.

சுவாமி எப்போ வந்தார்?

நடுச்சாமத்தில் வந்தார்.



அவர் எங்கே? என்ன செய்கிறார்?

அவர் பீடத்துக்கருகாமையில் பெண்பிள்ளைகளுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுத்துக்கொண்டிருக்கிறார். வெள்ளிக்கிழமைகளில் பூசைக்குமுன், பெண்பிள்ளைகளுக்கும் பூசைக்குப்பிறகு ஆண்பிள்ளைகளுக்கும் பாவசங்கீர்த்தனம் கொடுப்பது அவருடைய வழக்கம்.

என்ன! இத்தனைபேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள்!

எல்லாரும் எப்போது தங்கள் முறை வருமென்று பொறுமையுடன் நிற்கிறார்கள்.

அவர்களெல்லாம் எப்போ வந்தார்கள்?

அவர்கள் கோவில் வாசற்படியில் இராமுழுவதும் காத்திருந்து நடுச்சாமம் கூதோர்ஸ் கதவைத் திறந்ததும், ஒவ்வொருவரும் தங்கள் முறைப்பிரகாரம் அந்தந்த இடத்தில் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் என் கண்ணால் நான் நேரே பார்த்திராவிட்டால் ஒருபோதும் நம்பியிருக்கமாட்டேன். ஒரு குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் பண்ணும்படி தூரத்திலிருந்து வந்து, நித்திரையிழந்து, ஒரு நாள் இரண்டு நாள் பொறுமையுடன் காத்திருப்பது சாதா

ரணமாய் நடக்கும் காரியமல்ல. மனுஷன் பண ஆசையினிமித்தம் கஷ்ட நஷ்டங்கள் அநுபவிப்பானென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் தன் ஆத்தும நன்மைக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்வானென்று நான் நம்பவில்லை. இதற்கெல்லாம் காரணம் கூரேதார்வின் அர்ச்சியசிஷ்டதனமன்றி வேறொன்றுமில்லை.

நான் கோவில்பிள்ளையென்றெண்ணினவனுடைய நடபடிக்கைகளை சற்று உற்றுப்பார்க்கும்போது அவனிடம் பெரிய துரைகளுக்குரிய போக்குகளெல்லாமிருக்கக் கண்டேன். அவன் யாரென்று விசாரிக்கும்போது என்னுடைய சந்தேகம் சரியாயிருந்தது. அவன் மெய்யாகவே ஓர் துரையின் குமாரன். அவனுடைய வியாதியைக் கூரேதார்ஸ் குணப்படுத்தி அவனை நல்வழிக்குக் கொண்டுவந்த பேருபகாரங்களுக்கு நன்றியறிதலாக தன்னை முழுவதும் அவர் கையில் ஒப்படைத்துவிட்டு, கோவில் திருப்பணிவிடையிலேயே அலுவலாயிருந்தான்.

நடுச்சாமம் பாவசங்கீர்த்தனத் தொட்டியில் உட்கார்ந்தவர், எழு மணிக்கு பூசை செய்ய எழுந்திருந்தார். அவர் பூசை ஆயத்தம் போட்டுக்கொள்ளும்போது நான் பக்கத்தில் நின்



றேன். அவர் என்னைப் பார்த்த பார்வை எனக்கு சந்துஷ்டிகரத்தைக் கொடுத்தது. ஆனால் இன்னம் அவரோடு பேசவில்லை. ஆயத்தம் தரித்துக்கொண்டு அர்ச். பிலோமினம்மாள் பீடத்தில் பூசை செய்யப்போனார். இந்த அர்ச்சியசிஷ்டவள் பொரிசினால் அவர் செய்த புதுமைக்குக் கணக்கில்லை. அந்தப் பீடத்தினருகில் ஜனங்கள் தாங்களடைந்த உபகாரங்களுக்காகக் கொண்டுவந்த பொருத்தனைகளும், காணிக்கைகளும் ஏராளமாய் சுவரில் தொங்கின. (இந்த இடத்திலே தான் சிலநாளைக்கு முன்னே நடக்கக் கிஞ்சித்தும் சக்தியற்ற ஓர் முடவனை முற்றிலும் குணமாக்கினார். அந்த சமயத்தில், கூட இருந்த ஜனங்களனைவரும் இவரை ஆர்ப்பரித்துக் கொண்டாடும்போது தாழ்ச்சியுடன் சொன்னதாவது: "என்ன! அர்ச். பிலோமினம்மா இப்படித்தானா செய்கிறது? வியாதியை குணமாக்கும்போது வீட்டில் குணமாக்கும். பெரியவரங்கள் அளிக்கும்போது இரகசியமாயிருக்கட்டும்.)

திவ்விய பலிப்பூசை செய்யும்போது அவர் ஓர் பத்திசுவாலகர்போலத் துலங்கினார். பூசை முடிந்தது. அப்போதாகிலும் நான் அவரைக் கண்டு பேசலாமென்று நினைத்தேன். அதுவும்

கூடவில்லை. மணி ஒன்பதாகிவிட்டது. திரும்பவும் அவர் பாவசங்கீர்த்தனம் கொடுக்கத் துவக்கினார். வழக்கம்போல ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் முறை வந்ததும் உள்ளே போய் வந்தார்கள். என்னுடைய ஆச்சரியமும் பிரமிப்பும் இத்தன்மையதென்று வாக்கினால் சொல்லுந் தன்மையல்ல. நடுச்சாமம் கோயிலுக்குள் நுழைந்தவர் மணி பத்தாயிற்று. இன்னும் அதைவிட்டு அகலவில்லை. அவருக்குப் பின் வந்த நான் சும்மா கோவிலிலிருந்தபோதிலும் எனக்குக் களைப்பாயிருந்தது. கோவிலை விட்டு வீட்டுக்குப்போக நினைவு வந்தது. ஆயினும் அப்படிச் செய்கிறதற்கு முன்னால் இன்னம் ஒரு தடவை பிரயாசப்பட்டுப் பார்ப்போமென்று சொல்லிக்கொண்டு கோவில்பிள்ளையின் உதவியினால் சக்கிறீஸ்து வாசலண்டைபோனேன். அவர் கதவைத் திறந்தவுடனே என்னைப் பார்த்தார். பார்த்ததும், உள்ளே கூட்டிக்கொண்டுபோனார். அர்ச்சியசிஷ்டவரோடு நின்று பேசக்கிடைத்தது இவ்வுலகத்தில் எனக்குக் கிடைத்த பாக்கியங்களுக்குள் ஓர் மேலான பாக்கியம். நான் அவரிடத்தில் கேட்க நினைத்திருந்த இரண்டு சந்தேகங்களைக் கேட்டேன். அவர் தாமதிக்காமல் ஞானம் நிறைந்த மறு



மொழி கொடுத்தார். கடைசியில் அவரைப் பார்த்து: "சுவாமீ, நான் உரோமாபுரிக்குத் திருயாத்திரையாய்ப் போகிறேன். சுக க்ஷேமமாய்ப் போய்விட்டு வர உங்களுடைய ஆசீர்வாதத்தைக் கொடும்" என்றேன். உரோமாபுரி என்று கேட்டவுடனே, அவருடைய முகம் மலர்ந்தது. தாழ்த்தியிருந்த கண்களை உயர்த்தினார். "உரோமைக்குப் போகிறாயா? நம்முடைய பரிசுத்த பிதாவைப் பார்க்கக்கூடும். அப்போஸ்தலர்களுடைய கல்லறையின் கிட்டேயிருக்கும்போது எனக்காக வேண்டிக்கொள்" என்றார்.

போகிறதற்கு முன்னே அர்ச்சியசிஷ்டவருடைய கையை முத்திசெய்துவிட்டு, சந்தோஷப்பிரவாகத்தில் அமிழ்ந்தினவனாய் வெளியில் வந்தேன். அப்போது எனக்குள்ளே சொன்னதாவது! கூரோதார்ஸ் அர்ச்சியசிஷ்டவர் என்பதற்குஅற்பமேனும் சந்தேகமில்லை. நூற்றுக்கணக்கான ஜனங்கள் அவரை விடாமல் தொடர்ந்து என்னதான் தொந்தரவு பண்ணினபோதிலும் என்ன கேள்விதான் கேட்டபோதிலும், பொறுமையுடன் சாந்தத்துடன் கோபப்படாமலிருப்பது சாதாரண மனுஷர்கள் செய்யத்தக்க காரியமல்ல. வரப்பிரசாதம் ஓர் மனுஷனை

எவ்வளவு தூரம் உயர்த்தக் கூடுமென்று இவருடைய நடக்கையினால் அறிந்துகொண்டேன்.

ஆர்ஸ் ஊரை விட்டுப்போகுமுன் இன்னம் ஓர் விசேஷத்தைப் பார்க்க ஆசையிருந்தது. அதாவது கூரேதார்ஸ் மத்தியானத் திரிகால மணி அடிக்குமுன் ஏறக்குறைய அரைமணி நேரம் நாடோறும் ஞானப்போதகம் கொடுப்பது வழக்கம். இன்றையத்தினம் அவருடைய பிரசங்கத்தைக் கேட்கும்படியாய்ப் போனேன். எனக்குக் கோவிலின் ஓர் மூலையில் இடங்கிடைத்தது பெரிய காரியம். கூரேதார்ஸ் பிரசங்கிக்கும்போது வாய்ச்சாலகமும், வக்கணையும், அணி அலங்காரமும், சொல் அலங்காரமும் கிடையாது. மனிதர்களுடைய புகழ்ச்சியை நாடி அவர்களுக்குப் பிரியப்படும்படி பிரசங்கிப்பவர் அவரல்ல. அவர் என்ன செய்தபோதிலும் அவருடைய நோக்கமெல்லாம் ஒன்றே ஒன்று. ஆத்துமாக்களை இரட்சித்து சேசுநாதருடைய இராச்சியபாரத்தை விஸ்தரிக்கவேண்டுமென்பதுதான் அந்த நோக்கம். அவர் போதிக்கும்போது அவருடைய வார்த்தைகளைக் கேட்காவிட்டாலும் அவருடைய முகத்தையும் கை சயிக்கினைகளையும் பார்த்தாலேபோதும். கோவிலில் கூடியிருந்தவர்களனைவரும் அசை



பார்த்த மேனியாகவேயிருந்தார்கள். பாவத்தினால் சர்வேசுரனுக்கு உண்டாகும் அவமானத்தைப்பற்றிப் பேசும்போது அவர் உடம்பெல்லாம் நடுநடுங்க, கண்ணீர் சிந்தி அழுதார். அடிக்கடி அவர் வற்புறுத்தி சொன்னதென்னவென்றால், பாவமானது நம்மைச் சர்வேசுரனிடமிருந்து பிரித்துவிடுகிறது. மனஸ்தாபம் நம்மை மீண்டும் அவரிடம் கூட்டிக்கொண்டுவருகிறது, என்பதுதான். அர்ச். அருளப்பரைப்போல இவரும் அடிக்கடி "என் அருமைப்பிள்ளைகளே, என் அருமைப் பிள்ளைகளே" என்று சொன்னார். அவர் மெதுவாய்ப் பிரசங்கம் பண்ணினபடியால் சொன்னதெல்லாம் எனக்குக் கேட்கவில்லை. இரண்டொரு வசனங்கள் என் இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்தன. அவைகளில் ஒன்று: "என் அருமைப் பிள்ளைகளே! நல்ல ஆண்டவனை நேசியாததினால் பின்னால் வருத்தப்பட்ட அநேகரை நான் அறிவேன். ஆனால் அவனை நேசித்ததற்காக வருத்தப்பட்ட எவனையும் நானறியேன்." 12 மணிக்கு திரிகாலச் செபமணி அடித்தவுடனே தமது பிரசங்கத்தை நிறுத்தி அறைவீட்டுக்குப் போனார். நானும் ஆர்ஸ் ஊரைவிட்டு என்வழியே சென்றேன். நான் விசேஷ புதுமை ஒன்றும் காண

வில்லை. ஆனால் கூரோதார்ஸின் நாளாந்த ஜீவிய புதுமையைப் பார்த்தேன்.

சங். மொரேனோ சொல்லுவதுபோல அவருடைய ஜீவியம் மெய்யாகவே ஒரு புதுமையாகத்தானிருந்தது. தமது கட்டளை ஜெபத்தைச் சொல்லுகிற நேரமும், மத்தியானவேளையில் அவர் சாப்பிட்ட நேரமும் தவிர, மற்ற நேரமெல்லாம் கோவிலில் பாவசங்கீர்த்தனம் கொடுப்பதிலும், பத்திபிரசங்கம் சொல்வதிலும் அவருடைய வாழ்நாளெல்லாம் செலவழித்தார். புத்தி தடுமாற்றமின்றி இவ்வளவு வேலை எப்படி செய்தாரென்பது எல்லாருக்கும் பெரும் ஆச்சரியமாயிருக்கது. ஒரு குருவானவர் சமயாசமயம் ஓர் பெரிய திருநாளுக்கு முந்தினநாள் பதினாறு மணிநேரம் பாவசங்கீர்த்தனம் கொடுப்பது அத்தனை பிரமிக்கத்தக்க காரியமல்ல. ஆனால் ஒரு நாளல்ல, ஒரு வாரமல்ல, ஒரு மாதமல்ல, ஒரு வருஷமல்ல, முப்பது வருஷகாலம் தினந்தோறும் சுமார் 16 மணிநேரம் பாவசங்கீர்த்தனத் தொட்டியில் நேரமெல்லாம் செலவழிப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்பதற்குச் சந்தேகமில்லை.

கூரோதார்ஸ் இங்ஙனம் இடைவிடாமல் தம்மை முழுவதும் சர்வேசுரனுடைய ஊழி



யத்தில் செலவழிப்பதைக்கண்ட அவருடைய சிநேகிதர்கள் அவர் மேல் இரக்கப்பட்டு, "சுவாமி, சற்று இளைப்பாறுங்கள்," என்று சொல்லும்போது, அவர் சொல்லும் மறுமொழியாவது: "மறு உலகத்தில் நித்திய காலம் நல்ல ஆண்டவரோடும் தேவதாயாரோடும் சம்மனசுக்களோடும் இளைப்பாறலாம். இவ்வுலகம் இளைப்பாற்றிக்காகக் குறிக்கப்பட்ட இடமல்ல. இவ்வுலகத்தில் எவ்வளவுக்கதிகம் உழைப்போமோ, அவ்வளவுக்கதிகம் நம்முடைய நித்திய இளைப்பாற்றி ஆறுதலாயிருக்கும்.

நாமும் நம்முடைய அன்றாட அலுவலைப் பிரமாணிக்கத்துடன் மனந்தளராமல் உற்சாகத்துடன் செய்துவருவோமாகில், நம்முடைய சம்பாவனையும் ஏராளமாயிருக்கும். நம்முடைய அலுவல் கஷ்டமாயிருக்கும்போது வானத்தை அண்ணாந்து பார்த்து: "சுவாமீ, இந்தக்கஷ்டமெல்லாம் கடந்துபோகும், உம்மோடு நித்திய காலம் இளைப்பாறுங் காலம் வரும்" என்று எண்ணிக்கொள். அப்படிச் செய்வாயாகில் உன்னுடைய அலுவல் எவ்வளவு கஷ்டமாயிருந்தபோதிலும் அதைச் சந்தோஷத்துடன் செய்து முடிப்பாயென்பது நிச்சயம்.

---

# 12-ம் அதிகாரம்.

## அவர் கடின வியாதிப்பட்டுப் புதுமையாய்க் குணப்பட்ட வர்த்தமானம்.

1843-ம் ௵ வரையில் ஆர்ஸ் ஊரில் சங். வியான்னிக்குத் துணைக் குருவானவர் ஒருவருமில்லை. அதற்குப் பிறகுதான் மேற்றிராணியார் இவருக்குத் துணையாக ஒருவரை அனுப்பினர்.

அந்த வருஷம் மேமாதம் திருயாத்திரைக் காரர்கள் மற்ற வருஷத்தைப் பார்க்கிலும் அதிகப் பெருங்கூட்டமாய் வந்திருந்தார்கள். தேவதாயாருடைய வணக்க மாதத்தில் ஒவ்வொரு நாள் சாயரட்சையும் அந்த ஆண்டவளைக் குறித்துப் பிரசங்கிப்பது அவருடைய வழக்கம். மூன்றும் நாள் பிரசங்கத்தொட்டியிலிருக்கும்போது தானே, நடுவில் பிரசங்கத்தை நிறுத்திவிட்டு அறை வீட்டுக்குப் போகும்படி நேரிட்டது. என்னென்றால் வியாதி கடினமாய் அதிகரிக்க அதனால் இறங்க முதலாய்க் கூடவில்லை.

அவருடைய வியாதியைப்பற்றி தேகாரே பிரபுவின் மனைவி எழுதினதாவது: எங்களுடைய பரிசுத்த பங்கு சுவாமி வியாதியாயிருக்



கிறார். மோட்சபாக்கியத்தை அவர் அநுபவிக்க சமயம் கிட்டியது போலத் தோன்றுகிறது. பங்கு ஜனங்களுடைய கஸ்தி இம்மாத்திரமென்று வரையறுத்துச் சொல்லமுடியாது. இவர் குணப்படுவாரென்கிற நம்பிக்கை வைத்தியர்களுக்கில்லை. அவரை இழந்துபோனால் ஐயோ! எங்கள் பங்குக்கு எவ்வளவு பெரிய நஷ்டம்! அவர் எங்களுடைய அர்ச்சியசிஷ்டவர், எங்களுடைய நல்ல சம்மனசு, எங்களுடைய மகிமை, எங்களுடைய ஆறுதல், எங்களுடைய பட்டயம், எங்கள் நம்பிக்கை, எங்கள் ஊன்றுகோல். பங்கில் அழாதவர் ஒருவருமில்லை, கோவிலுக்குப்போனால் ஜனங்கள் பெரு



மூச்சுவிட்டு கண்ணீர்சிந்தி அழுதுபிரலாபித்து எப்படியாகிலும் பங்கு சுவாமிக்கு ஆரோக்கியம் கொடுக்கவேணுமென்று உருக்கத்துடன் வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

பங்கு ஜனங்கள் அனைவரும் அவரைப் பார்க்க ஆசைப்பட்டு அறைவீட்டுக்கு ஓடிப் போனபடியால் அங்கே காவல் வைக்கவேண்டியிருந்தது. யாராகிலும் அறைவீட்டிலிருந்து வெளியே வந்தால் உடனே ஜனங்கள் அவனிடம் போய்: "நம்முடைய பரிசுத்த குருவானவர் எப்படியிருக்கிறார் இப்போ? நம்முடைய நல்ல தகப்பனுக்கு சௌக்கியம் எப்போ வரும்? வைத்தியர்கள் என்ன சொல்லுகிறார்கள்?" என்று இவ்வாறு பற்பல கேள்விகளைக் கேட்பார்கள். அவருக்கு இன்னும் குணமாகவில்லை. வியாதி கடினமாய்த்தானிருக்கிறது என்று கேட்டவுடனே, ஜனங்கள் கோவிலுக்குப்போய் விசேஷமாய்த் தேவதாயாரையும் அர்ச். பிலோமினம்மாளையும் பார்த்து கட்டாயம் எங்கள் பங்கு சுவாமியைக் குணமாக்கவேணும், குணமாக்கவேணும் என்று வேண்டிக் கொள்ளுவார்கள்.

வியாதி வர வர அதிகரித்துக்கொண்டே வந்தது. கடைசித் தேவதிரவிய அநுமானங்



கள் நிறைவேற்றவேண்டுமென்று அவருடைய ஆத்தும குருவானவர் சொன்னார். கொடுக்கு முன்னே ஒழுங்குப்பிரகாரம் நமது வேதசத்தியங்களை எல்லாம் விசுவசிக்கிறீரா என்று கேட்க, அவர்: "நான் ஒருபோதும் அவைகளைப்பற்றி சந்தேகப்படவில்லை" என்றார். உம்முடைய பகையாளிகளை மன்னிக்கிறீரா என்று கேட்டபோது, "சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நான் ஒருவரையும் விரோதித்ததில்லை. ஒருவருக்காகிலும் தின்மை ஆசித்ததில்லை" என்றார்.

மறுநாள் பான்ஸ் பட்டணத்துப் பங்கு சுவாமி கூரேதார்ஸ்க்கு நல்ல சௌக்கியம் கூடிய சீக்கிரம் கிடைக்கும்படி அர்ச். பிலோமினம்மாள் பீடத்தில் பூசை செய்தார். வியாதியஸ்தர் அந்த சமயத்தில் நன்றாய் நித்திரை செய்தார். இதற்கு முன்னால் அவருக்கு சரியான நித்திரை கிடையாது. அவருக்காக பூசை செய்யும்போது அர்ச். பிலோமினம்மாள் அவருக்குத் தம்மைக் காண்பித்து, அவருக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லி குணப்படுத்தினாளென்பது ஆர்ஸ் ஊர்வாசிகளின் துணிபு.

கூரேதார்ஸ் வியாதியாயிருக்கும்போது அவருக்கு பற்றுதலுடன் சிகிச்சை செய்து வந்த உபாத்தியாயர் பொர்த்தினன் இதைப்பற்றி

சொல்லுவதாவது:—எங்கள் பரிசுத்த பங்கு சுவாமி அவஸ்தையாயிருக்கும் சமயத்தில், அர்ச். பிலோமினம்மாள் பீடத்தில் தமக்காக பூசை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்தப் பூசைக்கு வெளி ஜனங்களும் உள்ளூர் ஜனங்களெல்லாரும் வந்திருந்தார்கள். பூசை ஆவதற்கு முன்னே அவரே தான் இளைப்படைந்தவராகத் தோன்றினார். ஒரு நாளும் தோன்றாத கலக்கமும் குழப்பமும் அவருடைய முகத்தில் காணப்பட்டது. அவருடைய அந்திய காலம் நெருங்கி விட்டதென்று நான் எண்ணிக்கொண்டேன். ஆனால் பூசை ஆவதின மாத்திரத்





தில் அவருடைய முகத்தில் சமாதானக் குறியும், சந்தோஷக் களையும் தோன்ற, ஏதோ இன்பமும் மனோகரமும் கொடுக்கத்தக்க ஓர் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதாக, எனக்குத் தோன்றியது. பூசை முடிந்தவுடனே அவர் என்னைப் பார்த்து: "என் சிநேகிதனே, என்னிடத்தில் ஓர் பெரிய மாற்றம் உண்டாயிருக்கிறது; நான் சௌக்கியமானேன்!" இதைக் கேட்டவுடனே என் இருதயம் சந்தோஷத்தால் பூரித்துப்போய்விட்டது. அவரே தான் ஓர் காட்சி கண்டிருக்கவேண்டும். பல முறை அவருடைய விசேஷ பாதுகாவலான மதுரம் நிறைந்த அர்ச். பிலோமினம்மாளின் பேரை உச்சரித்தார். ஆயினும் இதைக் குறித்து நான் அவரிடம் அப்போது ஒன்றும் கேட்கவில்லை.

ஆர்ஸ் துரைசாமி சொல்லுகிறதாவது: எங்களுடைய அர்ச்சியசிஷ்டவர் சாகிறதறுவாயிலிருக்கும்போது பெட்டிபெட்டியாய் சுரூபங்களும், ஜெபமாலைகளும், பாடுபட்ட சுரூபங்களும், படங்களும் கொண்டுவந்து அவரை மந்திரிக்கக் கேட்டார்கள். பிரான்சுதேச முழுவதுமுள்ள மேற்றிராணிமார்கள் எல்லாரையும் சேர்த்தாலும் அத்தனை மந்திரித்திருக்கமாட்டார்கள்.

நேற்று அவருக்கு நல்ல சூப் கொடுத்தபோது முதலாவது வேண்டாமென்றார். ஆனால் அவருடைய ஆத்தும குருவானவர் குடியும் என்ற க்ஷணமே மறுபேச்சில்லாமல் எல்லாம் குடித்தார். அவருடைய நடை எப்படியோ, அப்படியே அவருடைய கீழ்ப்படிதலும். வைத்தியர் கொடுத்த மருந்துகளைச் சாப்பிடுவதிலும் சொன்ன பக்குவங்களை நிறைவேற்றுவதிலும் அணுப்பிரமாணம் தவறவில்லை.

"அர்ச். பிலோமினம்மாள் செய்த புதுமையினால் குணமானதொன்று அவர் தாமே சொல்லுகிறார்."

மேமாதம் 19-ம் தேதி பெருங்கூட்டம் அவரைப் புடைசூழ கோவிலுக்குள் நுழைந்தார். தேவநற்கருணைக்கு முன்னால் சாஷ்டாங்கமாய் விழுந்து வேண்டிக்கொண்டபின், அவருடைய மதுரமான பாலிய அர்ச்சியசிஷ்டவளின் பீடத்துக்குப்போய் தமது நன்றியறிதலைச் செலுத்தினார். பங்கு ஜனங்களுடைய சந்தோஷம் எம்மாத்திரமிருந்ததென்று நாம் இங்கு விவரித்துச் சொல்ல அவசியமில்லை.

இவர் வியாதியாயிருக்கும்போது தேவ நீதியின் பயமும், சாவின் நினைவும், அவரை நடுநடுங்கச் செய்தது. அந்த வேளைகளில் அவர்



சொல்வார்: "என் ஆண்டவரே! இன்னம் இல்லை. இன்னம் இல்லை. உம்முடைய நீதி ஆசனத்துக்கு முன்னால் நிற்க நான் இன்னம் முஸ்திப்பாயில்லை. இது தவிர பசாசுக்களும் அவரை வெகுவாய் உபாதித்தன. ஆயினும் மெய்யாகவே அவருடைய அந்திய காலம் கிட்டினபோது இப்பேர்ப்பட்ட பயம் அச்சம் ஒன்றுமில்லை. பரம பிதா தமது திருக்குமாரனுக்குக் கொடுத்த கசப்பான பாத்திரத்தில் தமது உற்ற தாசனுக்கும் இந்த வியாதியில் பங்கு கொடுக்கச் சித்தமானார். அதெப்படியென்றால், தாம் சர்வேசுரனுடைய சித்தத்துக்கு கீழ்ப்படிகிறதில்லையென்றும், தம்முடைய இடம் ஆர்ஸ் ஊரல்ல, ஆனால் ஓர் ஏகாந்தத்தில் போய் தமது பாவங்களுக்காகக் கண்ணீர் சிந்தி அழுது தமது மிஞ்சிய சிறிய நாட்களைச் செலவழிக்க வேண்டுமென்றும் தோன்றினது.

நாள் போகப் போக இந்த எண்ணம் அவரிடத்தில் அதிகமாக ஸ்திரப்பட்டுப்போக தம்முடைய பங்கைவிட்டு ஓர் தனிமையான ஸ்தலத்துக்குப்போக சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். இரண்டு தடவை ஓடிப்போனார். கடைசியாய் சர்வேசுரனுடைய சித்தம் ஆர்ஸ் ஊரில்தான் தாம் இருக்க வேண்டுமென்று அறிந்த

யுடனே தமது சீவிய நாள் முழுவதும் அங்கேயே செலவழித்தார். அவரைத் திரும்ப தமது பங்குக்கு வரும்படி செய்த சில சிந்தனைகளாவன: "ஒரு பாவியை நரகத்தினின்று விடுவித்து அவனை மோக்ஷகதி சேரச் செய்வது, ஏகாந்தத்தில் இடைவிடாமல் செய்கிற செபத்தைப்பார்க்கிலும் மேலல்லவா?"

அர்ச். மார்த்தீன் சாகிற தருணத்திலிருக்கும்போது "உழைக்கும்படி நான் பின்வாங்குகிறதில்லை" என்றாரே. அர்ச். பிலிப்புநெரியார்: "நான் பரகதி வாசலுக்கிட்டே யிருக்கும்போது ஒரு பாவி வந்து என்னுடைய உதவியைக் கேட்டால், உடனே மோக்ஷ அரண்மனையை விட்டு விட்டு அந்தப் பாவிக்கு உதவிசெய்யத் தீவிரிப்பேன்" என்று சொன்னாரல்லவா?

இது தவிர அவருடைய பங்கு ஜனங்கள் அவரைப் பார்த்து: "சுவாமி, உங்களிடம் பாவசங்கீர்த்தனம் பண்ணும்படி எத்தனையோ பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீர் எங்களை விட்டுப் போய்விட்டால் எத்தனையோ ஞான நஷ்டம் விளையக்கூடும். இதற்கெல்லாம் சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் உத்தாரஞ் சொல்ல வேண்டாமா?" என்றார்கள். இதற்குப்



பிறகு ஏகாந்தத்துக்குப்போய் தபசு செய்ய வேணுமென்கிற சோதனை அவரை விட்டு நீங்கியது.

பலதடவை அந்தகாரப் பசாசு பிரகாசத் தூதன் வேஷம் தரித்துக்கொண்டு நம்மைக் கெடுக்கப்பார்க்கும். சில சமயங்களில் அதனுடைய சதிமானத்தையும் சற்பனையையும் கண்டுபிடிப்பது சுலுவல்ல. அர்ச்சியசிஷ்டவரான கூரேதார்மேலே அப்பேர்ப்பட்ட சோதனைக்குட்படுஞ் சமயத்திலிருந்தாரே. அப்படியானால் பலவீனர்களாகிய நாம் பசாசின் தந்திர கபடங்களில் விழாமல் எவ்வளவோ எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இதற்காகத்தான் "பசாசினுடைய சகல தந்திரங்களின்மேலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று வேண்டிக்கொள்ள திருச்சபை கற்பிக்கிறது.

# 13-ம் அதிகாரம்.

## அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்துக்குச் செய்யப்பட்ட மகிமை.

சங். வியான்னி பிரதிஷ்டை அடைவதற்குக் காரணம் அவருடைய பிறப்பு அல்லது கல்வி கலைக்கியானங்களல்ல; ஆனல் அவருடைய அர்ச்சியசிஷ்டதனமே காரணம். அவரைப் பார்க்கும்படி ஐரோப்பாக் கண்டத்தின் நாலு தேசங்களிலிருந்தும், அமெரிக்காவிலிருந்து முதலாய் வந்தார்கள். அப்படி வந்தவர்கள் கிறீஸ்துவ புருஷ ஸ்திரீகள் மாத்திரமல்ல; குருக்களும், சந்நியாசிகளும், மேற்றிராணிமார்களும், இராஜபிரபுக்களும் அநேகம்பேர்.

ஆர்லியன்ஸ் நகருக்கு துப்பான்லூ ஆண்டவர் மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டவுடனே அவர் ஆர்ஸ் கூரேதார்ஸைச் சந்திக்க வந்திருந்தார். அச்சமயத்தில் தமது மேற்றிராசன அலுவல் தமக்குப் பயம் உண்டாக்குகிறதென்று சொல்ல, கூரேதார்ஸ் மறுமொழியாக: "ஆண்டவரே! அர்ச்சியசிஷ்டவர்கள் அட்டவணையில், மேற்றிராணிமார்கள் அநேகர் இருக்கிறார்கள். பங்கு



சுவாமிமார்கள் மகா அருமை. அப்படியானல் தங்களைப் பார்க்கிலும் நான் அதிகம் பயப்பட வேணுமல்லவா?" என்று புன்சிரிப்புடன் சொன்னர்.

1854-ம் ஆு மே மாதம் இங்கிலாந்திலுள்ள பெர்மிங்கம் பட்டணத்து மேற்றிராணியாரான அலத்தார்ன் ஆண்டவர் இவரைப் பார்க்கும்படி ஆர்ஸ் ஊருக்கு வந்தார். இதைக்குறித்து அவர்தாமே சொல்லுவதாவது:—

"நான் கூரேதார்ஸோடு பேசிக்கொண்டிருக்கும்போது இங்கிலாந்துதேசத்தில் கத்தோலிக் கிறீஸ்துவர்கள் நம்முடைய பரிசுத்த வேதத்துக்காகப் பல இடைஞ்சல்கள் அநுபவிக்கிறார்களென்றும், அவர்களுக்காக வேண்டிக்கொள்ள வேணுமென்றும் கேட்டுக்கொண்டேன். அவர் சற்று மூடியிருந்த தமது நேத்திரங்களை நன்றாய்த் திறந்துகொண்டு, 'இங்கிலாந்து தேசம் திரும்பவும் திருச்சபையின் பழைய கீர்த்தியை அடையும் என்று நம்புகிறேன்' என்றார்.

தேவசிநேகத்தைப்பற்றியும், தேவ ஆண்டவரின் வல்லமையைப்பற்றியும் அடிக்கடி பிரசங்கிக்கிறார். அர்ச்சியசிஷ்டவர்களுக்குள் அர்ச். பிலோமினம்மாள் பேரில் அவருக்கு அதிக

உருக்கமான பக்தி இருக்கிறது. அவருடைய பேரால் அலங்காரமான ஓர் சிறிய பீடம் கட்டியிருக்கிறார். பிரான்ஸ் தேசத்தில் அவள் பேரால் கட்டப்பட்ட முதல் பீடம் இதுதான்.

அவரிடம் விடைபெற்று போகுமுன்னே அவருடைய அடையாளமாக ஓர் சின்ன வட்டச்சுரூபம் கொடுக்கும்படி கேட்டேன். அதற்கு அவர் சில சுரூபங்களைக் கையில் வைத்துக் கொண்டு 'உங்களுக்கு வேண்டியது எதுவோ அதை எடுத்துக்கொள்ளுங்கள்' என்றார். நான் அதற்கு: 'நான் எடுக்கிறது சரியன்று, நீங்களே ஒன்று எடுத்து எனக்குக் கொடுங்கள்' என்றேன். அவர்: 'இதோ ஜென்மப்பாவமில்லாமலுற்பவித்த கன்னித்தாயாரின் சுரூபம்! இதோ அர்ச். பிலோமினம்மாள் சுரூபம்' என்று சொல்லிக்கொண்டு இரண்டு வட்டசுரூபங்களை என் கையில் கொடுத்தார். நான் மகா சந்தோஷத்துடன் அவைகளை ஏற்றுக்கொண்டேன்."

19-ம் நூற்றாண்டில் ஐரோப்பா கண்டமெங்கும் பேர்போன பிரசங்கி சங். லக்கோர்தேர் ஏழைக் குருவாகிய கூரேதார்ஸைப் பார்க்கும்படி ஆர்ஸ் ஊருக்கு வந்தார். இவர் அர்ச். தொமினிக் சபையைச் சேர்ந்தவர். பிரான்ஸ் தேசத்தில் அச்சபையை ஸ்திரப்படுத்தி புதுப்



பித்தவர் இவர்தான். வேதசாஸ்திரத்தை ஐயந்திரிபற கற்றறிந்திருந்த இவர், சாஸ்திரத்தில் தேர்ச்சிபெறாத கூரேதார்விடம் வந்து அவருடைய ஆலோசனையைக் கேட்க பின்னிடவில்லை. சங். வியான்னி அவர் போனபிற்பாடு சொன்னதாவது: "லக்கோர்தேர் சுவாமி என்னைப் பார்க்க வந்திருக்கும்போது என்னிடத்திலுண்டான நினைவு என்னவென்று தெரியுமா? உன்னத சாஸ்திரமானது முழு அறிவீனத்துக்கு முன்னால் தன்னைத் தாழ்த்தினது. சந்திக்கக்கூடாத அந்தங்கள் இரண்டும் சந்தித்தன."

திருயாத்திரைக்காரர்கள் அநேகர் அவரைப் பார்த்துவிட்டு அவரிடம் பாவசங்கீர்த்தனம் பண்ணுவது போதுமென்றிராமல், அவருக்குச் சொந்தமாயிருந்த எந்த அற்ப வஸ்துவானாலும் அதை அர்ச்சியசிஷ்ட பண்டமாகக் கொண்டுபோகப் பிரயாசப்படுவார்கள். அவர் எப்போதும் சர்ப்பிளிஸ் கழுத்தில் போட்டுக்கொண்டிருப்பதற்குக் காரணம் இதுதான். கழற்றி வைத்தால் இந்த ஞானத் திருடர்கள் துண்டு துண்டாய்க் கத்தரித்துக்கொண்டு போவார்கள். இதற்காகவே அவர் பிற்காலத்தில் தொப்பி போடுவதில்லை.

கூரோதார்ஸுக்கு அளிக்கப்பட்ட சம்மானங்களில் ஒன்று மகா விசேஷித்தது. அதாவது: பிரான்ஸ்தேசத்து சக்கரவர்த்தி அவருக்கு 'குருவா தெலெஜியோன்தொனர்' என்கிற சிறந்த கௌரவப்பட்டம் அளித்து, அதற்கடையாளமாக ஓர் வெள்ளிச்சிலுவை அனுப்பினார். இதை அவர் கையில் கொடுத்தவுடனே அவர் புன்னகைகொண்டு சொல்வார்: 'சக்கரவர்த்தி எனக்கு ஏன் இந்தப் பட்டம் அளித்தாரோ தெரியாது? நான் அவருக்குச் செய்ததெல்லாம், அவருடைய பட்டாளத்தில் சேவிக்காமல் ஓடிப்போனது மாத்திரந்தான்.' கௌரவசின்னமடங்கிய பெட்டியைத் திறக்கும்போது ஏதோ ஒரு அர்ச்சியசிஷ்டபண்டம் இருக்குமென்று நினைத்துக்கொண்டு திறந்தார். இதைக் கண்டவுடனே 'என்ன இதுதானா?' என்றார். உலகத்தின் கண் சக்கரவர்த்தி அளித்த பட்டம் பெரிய பட்டம். ஆனால் அர்ச்சியசிஷ்டவர்களுடைய கண்ணுக்கு அது ஒன்றுமில்லை. அவர்களுடைய மகிமை நமதாண்டவர் பேரிலுள்ள சங்கை நேசத்தினிமித்தம் அவரைப்போல உடுபாவனை அணிந்திருப்பதே. அல்லது அர்ச். சின்னப்பர் சொன்னதுபோல, சிலுவையன்றி வேறே மகிமை ஒன்றுமில்லை.



இந்தக்காலத்தில் அவர் ஜென்ம ஊராகிய தார்நில்வி பங்கு ஜனங்களுக்கும், ஆர்ஸ் ஊர் பங்கு ஜனங்களுக்கும் ஓர் நூதன வாக்குவாதம் உண்டானது. அது என்னவென்றால், கூரோதார்ஸ் மரணமடைந்தபிறகு அவருடைய பரிசுத்த சடலத்தை யார் கைப்பற்றுகிறது—தார்நில்வி ஊர் ஜனங்களா? ஆர்ஸ் ஊர் பங்கு ஜனங்களா? அவர் உயிரோடிருக்கும்போதுதானே அவருடைய ஜென்ம ஊரிலிருந்து ஓர் ஸ்தானபத்தியம்போல அநேகர் சேர்ந்து ஆர்ஸ் ஊருக்கு வந்து, அவர் மரித்தபிறகு தமது சரீரத்தை எப்படியாவது தமது ஜென்ம ஊருக்குக் கொடுக்கவேணுமென்று அவரைக் கெஞ்சி மன்றாடினார்கள். இதென்ன அற்பக்காரியமென்று நினைத்து 'சரி, உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்' என்றார். இது சங்கதி ஆர்ஸ் ஊரார் அறிந்தவுடனே எல்லாரும் ஒன்று கூடி இது கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள். பெல்லே மேற்றிராசனத்து பங்குகளெல்லாம் ஆர்ஸ் ஊர் ஜனங்களோடு சேர்ந்து மேற்றிராணியாருக்கு விண்ணப்பஞ்செய்து, வேணும் வேண்டாம் ஆர்ஸ் ஊருக்கே அவருடைய சரீரத்தைக் கொடுக்கவேணுமென்று கேட்டார்கள். மேற்றிராணியார் கூரோதார்ஸைப் பார்த்து: 'ஏன் உமது ஊர்

ஜனங்கள் பக்கம் நிர்த்திர்?' என்று கேட்க, அவர் சொல்லுவார்: 'ஆண்டவரே! என்னுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய வசமிருந்தால் எனக்குப் போதும். என்னுடைய நீச சரீரத்தை எங்கே புதைத்தால்தான் எனக்கென்ன?'

மேற்றிராணியாரே தமது மேற்றிராசனத்தைச் சேர்ந்த ஆர்ஸ் ஊருக்கு அவருடைய சரீரத்தைக் கொடுக்கவேணுமென்று கேட்கும்போது, கூரேதார்ஸ் என்ன செய்யக்கூடும்? மேற்றிராணியாருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, செத்தபிறகு தமது சரீரம் ஆர்ஸ் ஊருக்குத்தான் சொந்தமென்று சாகுமுன் எழுதிவைத்தார்.

கூரேதார்ஸ் தம்மை எவ்வளவுக்குத் தாழ்த்தினாரோ அவ்வளவுக்கு அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தின் மகிமை அதிகரித்தது. நமது அருமை இரட்சகர் வாக்கியம் ஒருபோதும் தவறமாட்டாதல்லவா? "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்." ஆகையால் நாமும் சர்வேசுரனுக்குப் பிரியப்படவும், அவருடைய சந்நிதானத்தில் மகிமை அடையவும், ஆசிப்போமேயாகில், தாழ்ச்சியை அனுசரிக்கக்கடவோம்.

---

# 14-ம் அதிகாரம்.

## அவருடைய சுபாவ இலட்சணங்கள்.

சங். மொனேன் அர்ச்சியசிஷ்டவருடைய சுபாவ இலக்ஷணங்களைக் குறித்துச் சொல்லுவதாவது:

அவர் அதிக வளர்த்தியுள்ளவரல்ல. கண்கள்



இரண்டும் மணிகள்போல துலங்கும். தேவசிநேகத்தைப்பற்றிப் பேசும்போது அவைகள் மிக்கப் பிரகாசத்துடன் ஒளிரும். பாவத்தைப்பற்றிப் பேசும்போது அதுகளினின்று கைப்பான கண்ணீர் வடியும். அன்பும் தயாளமும் இரக்கமும் ஒளிர்ந்த இந்தக் கண்களே அநேக பாவிகளை அவருடைய பாதத்தில் வந்து விழும்படி பலமாய் இழுத்தன.

நடக்கும்போது எப்போதும் சற்றுத் துரிதமாய் நடப்பார். மரணபரியந்தம் அவருடைய ஐம்புலன்கள் யாதொரு மோசமின்றி முழுத் தத்துவங்களைக்கொண்டிருந்தன. அவருடைய கண் பார்வை மங்கவில்லை. செவியின் கூர்மை தணியவில்லை. புத்தி ஒருபோதும் தடுமாறவில்லை. ஞாபகசக்தி குறையவில்லை. ஆயினும் அவர் செய்துவந்த கடுந்தபசினாலும், பட்ட கஷ்டத்தினாலும், அநுபவித்த மனோ வேதனையினாலும், அவருடைய சரீரம் தளர்ந்து மெலிந்துபோயிருந்தது. தலை சாதாரணமாய் சற்று குனிந்திருக்கும். வெள்ளிச் சரடுகள் போலிருந்த அவருடைய உரோமம் கழுத்துவரையில் தொங்கும். கூரேதார்வின் சுபாவ இலட்சணங்களைப்பற்றிப் பேசும்போது சங். மொரேனன் ஓர் நூதன விசேஷம் சொல்லியிருக்கிறார்.

அதாவது: வேதத்தை விரோதித்துப் பழித்து நிந்தித்து அநேக அக்கிரம புஸ்தகங்களை எழுதிய வோல்த்தேர் என்பவனுடைய முகத்தில் கூரேதார்வின் முகச்சாயல் காணப்பட்டதாம். ஆயினும் அர்ச்சியசிஷ்டவரிடத்தில் காணப்பட்ட சமாதானக் குறியும், அடக்க ஒடுக்கமும், தேவ ஒன்றிப்பும், அத்துஷ்டனுடைய முகத்தில் காணப்படவில்லை. இவ்விரு



வருக்குமுள்ள சாயலையும், பின்னபேதங்களையும் யோசிக்கும்போது, வரப்பிரசாதம் ஒருவனை எம்மாத்திரம் உயர்த்தி சர்வேசுரனுக்கு பிரியப்படுத்தச் செய்கிறதென்றும், பாவம் ஒருவனைத் தாழ்த்தி எம்மாத்திரம் பசாசுக்கு அடிமையாக்குகிறதென்றும் பிரத்தியட்சமாய்க் கண்டுகொள்ளுகிறோம்.

கூரேதார்ஸ் தமனுமட்டில் மாத்திரம் மகா கண்டிப்புள்ளவர். மற்றவர்கள்மட்டில் மகா தாட்சண்ணியமும்; இரக்கமும் பொருந்தியவர். அவருக்கு அறிமுகமானவர்களோடும், சிநேகிதர்களோடும், தாராளமாய், உல்லாசமாய்ப் பேசுவார். அவருடைய சம்பாஷணையின் இரஞ்சிதத்தையும், அவருடைய புன்சிரிப்பின் மதுரத்தையும் காகிதத்தில் எழுதுவது கூடாத காரியம்.

ஒருதடவை அவருடைய மேற்றிராணியார், மகா சங். லாங்கலரி ஆண்டவர் அவரைப் பார்க்க வந்திருக்கும்போது: சுவாமி, நாளைக்கு உங்களுடைய கோவிலில் பூசை செய்ய உத்தரவு கொடுங்கள் என்று கேட்க, கூரேதார்ஸ்: "ஆண்டவரே! நாளைக்குக் கர்த்தர் பிறந்த திருநாள் அல்லவே யென்று மாத்திரம் வருத்தப்படுகிறேன். ஏனென்றால் அப்படியானால் நாளைக்கு

ஒரு பூசைமாத்திரமல்ல, மூன்று பூசை செய்வீர்களே" என்று மலர்ந்த முகத்துடன் பதிலுரைத்தார்.

சில வருஷம் அவருக்கு உதவியாயிருந்த அவருடைய சிநேகிதர் சங். தொக்கானியர் கொஞ்சக்காலம் ஆர்ஸ் ஊரைவிட்டு வேறிடத்துக்குப் போய்விட்டுத் திரும்பிவந்தவுடனே கூரேதார்ஸ் அவரைப் பட்சத்துடன் ஆலிங்கனஞ்செய்து அரவணைத்து: "என் சிநேகிதனே! இது எவ்வளவு பாக்கியம்! நம்முடைய சிநேகிதர்களைவிட்டுப் பிரிகிறது இவ்வளவு கஷ்டமாயிருக்கும்போது, சபிக்கப்பட்ட பாவிகள் நித்திய காலம் சிநேக தேவனைவிட்டுப் பிரிந்திருப்பது எப்படிப்பட்ட நிர்ப்பந்த வேதனையாயிருக்கவேண்டும்!" என்று சொன்னார்.

ஒரு வருஷம் தேவநற்கருணைத் திருநாளன்று சுற்றுப்பிரகாரத்துக்குப் பிறகு அவர் வெகுவாய்க் களைத்துப்போயிருந்தார். அவருடைய சிநேகிதர்கள் சிலர் களைப்புத்தீர ஏதாகிலும் புசிக்கவேணுமென்று கேட்டார்கள். அப்போது அவர் சொன்ன மறுமொழி: "எனக்கு ஒன்றுந் தேவையில்லை, நான் இன்றைக்கு எப்படிக் களைத்துப்போகக்கூடும்? என்னைத் தாங்



கிக்கொண்டிருக்கிறவரை நான் கையில் ஏந்திக்கொண்டு போனேனல்லவா?"

அவர் அநுபவித்த இக்கட்டு இடையூறுகள் மத்தியில் அவரிடத்தில் விளங்கிய அமரிக்கையையும் சாந்தகுணத்தையும் கவனிக்கும்போது முன்னொரு காலத்தில் திவ்ய சேசுநாதரும் அவருடைய சீஷர்களும் படகில் ஏறிச் செல்லுகையில், புசலினால் படகு அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படுவதைக் கண்ட சீஷர்கள் பயப்பிராந்திகொண்டவர்களாய் நடுநடுங்க, ஆண்டவர் ஒன்றுமில்லாததுபோல சுகமாய் நித்திரைபோன வர்த்தமானம் ஞாபகத்துக்கு வருகிறது. சங். வியான்னியிடம் தோன்றிய இப்பேர்ப்பட்ட மாறாத அமரிக்கைக்கும், நிலைபெயராத சமாதானத்துக்கும் காரணம் என்ன? காரணம் என்னவென்றால், அவர் எவ்விடத்திலும் எப்போதும் சர்வேசுரனுடைய சித்தத்துக்குப் பணிந்து நடந்து வந்தார். தேவசித்தத்தைத் தவிர அவரிடத்தில் வேறே ஆசையுமில்லை, விருப்பமுமில்லை. அன்றியும், சிலுவையே தமது மகிமையாகவும் விருதுக்கொடியாகவும் கொண்டவர், துன்ப துரிதம் வரும்போது மனச்சமாதானத்தை இழப்பதெப்படி? ஆனால் நம்முடைய சமாதானம் அடிக்கடி சீர்குலைந்துபோகிறதற்குக் காரணம் என்னவென்றால்: நாம் எப்போதும் சர்

வேசுரனுடைய சித்தத்துக்கு அமைந்து நடக்கிறதில்லை. நம்முடைய மனதுபோல் நடக்க விரும்புகிறோம். சிலுவையைக் கண்டால் அப்பால் ஓடிப்போகிறோம். இதினால்தான் அர்ச்சியசிஷ்டவர்கள் இடையறாது அநுபவித்துவந்த சுவாதீனத்தையும், சமாதானத்தையும் நாம் அநுபவிக்கிறதில்லை.

கூரோதார்ஸ் என்னும் தேவ சித்தத்துக்குப் பணிந்து நடந்ததினால் தேவசிநேகம் நிறையப் பெற்றவராயிருந்தார். இதனால் அவர் அர்ச். சின்னப்பரைப்போல: "கிறீஸ்துநாதருடைய சிநேகத்தைவிட்டு நம்மைப் பிரிக்கப்போகிறது யார்? துன்பமோ? நெருக்கிடையோ? நிர்வாணமோ? ஆபத்தோ? கலாபனையோ? பயமோ? .....சாவானாலும், ஜீவனானாலும், தேவதூதரானாலும், சத்துவகரானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், பராக்கிரமமானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர்மேல் நமக்குள்ள தேவசிநேகத்தை விட்டு நம்மை விலக்கமுடியாது" என்று சொல்லக்கூடுமாயிருந்தார். (உரோமர் 8-ம் அதி.)

---

# 15-ம் அதிகாரம்.

## அவருடைய புண்ணியங்கள்.

கூரோதார்ஸ் விசுவாசம் என்கிற தேவசம்பந்தமான புண்ணியத்தை உச்சிதமாய்ப் பெற்றிருந்தார்: இதுதான் அவருடைய சாஸ்திரம். இதைக்கொண்டுதான் எல்லாவற்றையும் கண்டுபிடித்தார். கத்தரீன் என்பவள் சொல்லுவது போல அவருடைய விசுவாசம் எவ்வளவு உயிருள்ளதாயிருந்ததென்றால், அவர் சொல்லுவதெல்லாம் தாம் கண்ணால் பார்ப்பதுபோலவும், உள்ளத்தில் உணர்வதுபோலும் விளங்கும். "தேவநற்கருணையில் நமது நல்ல ஆண்டவரைப் பார்க்கும் நமது கண்கள் எவ்வளவோ பாக்கியம் பெற்ற கண்கள்" என்று அடிக்கடி சொல்லுவார்.

"நம்முடைய விசுவாசம் பல சமயங்களில் உயிருள்ள விசுவாசமாயிருக்கிறதில்லை. நமது நல்ல ஆண்டவர் ஏதோ முன்னூறு மைலுக்கு அப்பால் வெகுதூரத்தில் இருக்கிறதாகத் தோன்றுகிறது. அர்ச்சியசிஷ்டவர்களிடமிருந்த கெட்டியான விசுவாசம் நம்மிடமிருந்தால், சர்வேசுரன் நமதருகாமையிலிருக்கிற

காகக் கண்டுகொள்ளுவோம். சில சுவாமிமார்கள் திவ்விய பூசை நேரத்தில் தினந்தோறும் அவளைப் பார்க்கிறார்கள்."

சங். கூரேதார்ஸ் பூசை செய்யும்போது சேசுநாதரைக் கண்ணால் பார்க்கும் பாக்கியம் பெற்றவர்போல் துலங்குவாரென்று அவருடைய பூசையைக் கண்டவர்கள் எல்லாரும் சொல்லியிருக்கிறார்கள். பூசை நேரத்தில் கோவிலில் எத்தனை ஆயிரம் ஜனங்கள் தான் கூடியிருந்தபோதிலும், தன்னந்தனியே தமதறையின் ஏகாந்தத்தில் இருப்பதுபோலவே, அச்சமயத்திலும் சர்வேசுரனோடு ஒன்றித்திருப்பார். அவர்





வெகு துரிதமாகவும் பூசை செய்யமாட்டார். அதி சீக்கிரமும் முடிக்கமாட்டார். சுமார் அரை மணி நேரஞ்செல்லும். பூசை நேரத்தில் ஓரே ஒரு இடத்தில் மாத்திரம் சற்றே தாமதிப்பார். அதாவது, திவ்ய நற்கருணை உட்கொள்ளும் முன், சற்பிரசாத ஆண்டவரை மனங்கனிய உற்றுநோக்கி சல்லாபித்துக்கொண்டிருப்பார்.

திவ்ய சற்பிரசாதம் எழுந்தேற்றம் பண்ணியிருக்கும்போது பக்தி விசுவாசத்துடன் அன்பின் தேவனைப் பார்த்தவண்ணமாய் ஒரு உற்ற சிநேகிதரோடு பேசிக்கொண்டிருக்கிறாப்போல பேசிக்கொண்டிருப்பார்.

விசுவாசம் ஸ்திரமாய் ஊன்றியிருக்கிற இருதயத்தில் தேவசிநேகம் தானாய்க் கிளம்பும். சங். மொனேன் சொல்லுகிறதுபோல, சர்வேசுரனைச் சிநேகிப்பதும், அவரைச் சிநேகிக்கச் செய்வதுமே, கூரேதாரின் ஏக அலுவல். அவர் செய்த சகல காரியமும் தேவ சிநேக முகாந்தரத்துக்காகச் செய்தாரேயல்லாமல், ஒருபோதும் வேறெந்த முகாந்தரத்துக்காகச் செய்யவில்லை.

சிறு குழந்தையாயிருக்கும்போதுதானே அமலோற்பவதாயாரை எம்மாத்திரம் அவர் நேசித்துவந்தாரென்று முன்னே சொல்லிக்காட்

டினும். யாதொரு விசேஷ உபகாரம் பெற வேணுமானால் அமலோற்பவ மாதாவின் திரு இருதயத்தைக்குறித்து நவநாள் செய்வார். "அந்த மாசற்ற இருதயத்தினின்று நான் பெற்றிருக்கிற உபகாரங்களுக்குக் கணக்கில்லை." என்று அவரே அடிக்கடி சொல்லுவார்.

தேவதாயாருக்குப்பிறகு அவருடைய விசேஷ பாதுகாவலர்கள் அர்ச். சூசையப்பர், அர்ச். பிலோமினா, அர்ச். ஸ்நாபக அருளப்பர், அர்ச். தெரேசம்மாள், அர்ச். பிரான்சீஸ்கு அசிஸி. இது தவிர உத்தரிக்கிற ஆத்துமாக்கள் மட்டில் அவருக்கு விசேஷ பத்தியிருந்தது. இராக்காலங்களில் அவர்பட்ட வருத்தங்களையும், ஒவ்வொருநாளும் தாமநுபவித்த துன்பதுரிதங்கள், செய்த ஜெபதபங்களில், மூன்றில் ஒரு பங்கையும், அவர்களுக்கு ஒப்புக்கொடுப்பார். மற்ற இரண்டு பங்கும் தம்முடைய பாவத்துக்கும், மற்றனைவர்களுடைய பாவத்துக்கும் பரிகாரமாக ஒப்புக்கொடுப்பார்.

ஒருநாள் நித்திய மோக்ஷ பாக்கியத்தையும், தேவதரிசனத்தையும் குறித்து கேட்டவர்கள் இருதயம் தேவசிநேகத்தால் பற்றி யெரியச் செய்யும்படி பிரசங்கித்தார். அந்தப் பிரசங்கத்தைக்கேட்ட ஒருவன் பிறகு அவரிடம் வந்து



"சுவாமி, நீங்கள் சொன்ன பேரின்ப பாக்கியத்தை அடையும்படி நான் செய்யவேண்டியது என்ன?" என்று வினவ, அவர் சொன்ன உத்தரமாவது: "என் சிநேகிதனே, வரப்பிரசாதமும், சிலுவையுமிருந்தால் போதும், வேறொன்றும் அவசரமில்லை."

கண்களில் நீர்ததும்ப வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு அவர் அடிக்கடி சொல்லுவதாவது: ஓ! சேசுவே! உம்மை அறிவதும் சிநேகிப்பதும் ஒன்றுதான். நமது அருமை இரட்சகர் எவ்வளவு உருக்கமாய் நம்மை சிநேகிக்கிறாரென்று நாம் அறிவோமேயாகில், சந்தோஷத்தால் நாம் இறப்போம். நாம் சர்வேசுரனைச் சிநேகிப்பதும், அவரால் நாம் சிநேகிக்கப்படுவதுந்தான் பாக்கியங்களுக்குள்ளெல்லாம் மேலான பாக்கியம். சர்வேசுரனோடு ஜீவிப்பதும், அவரோடு ஒன்றித்திருப்பதும், அவருக்காக மாத்திரம் ஜீவிப்பதும், ஓ! எவ்வளவு பாக்கியமான ஜீவியம்!

குருவிகள் இனிமையாய்ப் பாடும்போது அவர் சொல்வார்: ஓ! சிறிய பட்சிகளே! நீங்கள் பாடும்படி சர்வேசுரன் உங்களை சிருஷ்டித்தார். நீங்கள் அப்படியே பாடுகிறீர்கள். சர்

வேசுரனைச் சிநேகிக்கும்படி மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான். ஆனால் அவன் சிநேகிக்கிறதில்லை.

ஒரு தடவை ஓர் பங்கு சுவாமி அவரிடம் வந்து: "என்னுடைய பங்கு ஜனங்கள் எல்லாம் முரட்டாத்துமங்களாயிருக்கின்றன. அதுகளுடைய கல்லான இருதயத்தை இளகச்செய்யும்படி என்னால் கூடியதெல்லாம் செய்துபார்த்தேன். ஒன்றும் பலிக்கவில்லை" என்று முறையிட்டார். அதற்குக் கூரேதார்ஸ்: "சகோதரரே, நீர் அவர்களுக்காக வேண்டிக்கொண்டீர், அவர்களுக்காகக் கண்ணீர் சிந்தி அழுதீர். ஆனால் அவர்களுக்காக ஒருசந்தியாயிருந்தீரா? அவர்களுக்காக இராக்கண் விழித்திருந்தீரா? கட்டாந்தரையில் படுத்திருந்தீரா? அவர்களுக்காக கசையால் உம்மை அடித்துக் கொண்டீரா? இவைகளையெல்லாம் நீர் செய்யாவிட்டால், எல்லாம் இன்னம் செய்யவில்லை என்று எண்ணிக்கொள்ளும்" என்றார்.

வேறொரு சமயத்தில் மற்றொரு குருவானவர் அவரிடத்தில் கேட்ட கேள்வியாவது: "சர்வேசுரன் இந்த நேரத்தில் உம்மை நோக்கி, நீர் உடனே மோக்ஷத்துக்கு நேராய்ப் போகிறீரா அல்லது பாவிகளை மனந்திருப்பும்படி இவ்வுலகத்தில் அநேக வருஷம் இருக்க ஆசைப்படுகி



றீரா என்று கேட்டால் எதைத் தெரிந்துகொள்வீர்."

—"என் சிநேகிதனே! இவ்வுலகத்திலேயேயிருப்பேன்."

—நிசந்தானா? அதெப்படி? மோக்ஷத்தில் அர்ச்சியசிஷ்டவர்கள் எவ்வளவோ சந்தோஷத்தை அநுபவிக்கிறார்கள்! அவர்களுக்குச் சோதனையில்லை, வருத்தமில்லை, துன்பமில்லை.

—அர்ச்சியசிஷ்டவர்களுக்கு மோக்ஷத்தில் வருத்தமில்லையென்பது நிசந்தான். ஆனால் அவர்கள் அங்கே நல்ல ஆண்டவருக்காக உழைக்கமுடியாதே. நாம் இந்த உலகத்தில் பாவிகளை இரட்சிக்கும்படி பாடுபடலாம்; அவர்களால் அது கூடாது.

—அப்படியானால் உலகம் முடியுமட்டும் உயிரோடிருக்க உமக்கு இஷ்டமா?

—சர்வேசுரனுக்கு அது சித்தமானால் எனக்கு இஷ்டந்தான்.

—அப்படியானால் உமக்கு வேண்டிய நேரமிருக்கும். இப்போது எழுந்திருக்கிறதுபோல அவ்வளவு சீக்கிரம் எழுந்திருக்க அவசரமிராது.

—அப்படியல்ல, என் சிநேகிதனே! நடுச்சாமத்தில் எழுந்திருப்பேன். கஷ்டப்படுவதற்கு

நான் பயப்படுகிறதில்லை. சர்வேசுரனுடைய நீதி ஆசனத்துக்கு முன்னால் கண்டிப்பான கணக்குக் கொடுக்கவேணுமென்கிற நினைவுமாத்திரம் எனக்குப் பயத்தை வருந்துவிக்கிறது.

பாவிகளுக்குப் பிறகு கூரோதார்ஸ் ஏழைகளை அதிகமாய் நேசித்துவந்தார். அவரைத் தேடி பிச்சைக்கு வந்தவர்களுக்கு தர்மம் கொடுப்பது போதுமென்றிராமல், ஏழைகளை இவரே தேடிப் போய் பிச்சை கொடுப்பார். முன்னே நல்ல அந்தஸ்திலுள்ளவர்கள் தரித்திரர்களானால் அவர்களுக்குத்தான் அதிக உபகாரம் செய்வார். ஏனென்றால் இப்பேர்ப்பட்டவர்கள் யாசகம் கேட்க வெட்கப்படுவார்கள். கடன் கேட்கவும் துணியமாட்டார்கள். ஒருக்காலும் ஏழைகளை நிந்தித்துத் துரத்தாதேயுங்கள். அவர்களுக்குக் கொடுக்க நம்மிடம் ஒன்றும் இல்லாவிட்டால், வேறொரு தர்மவாளன் அவர்களுக்குக்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளவேணுமென்று அவர் சொல்வார்.

ஏழைகளுக்கு இல்லையென்று சொல்லாதபடி பலதடவை தமக்குச் சொந்தமான ஜாமான்களை முதலாய் விற்றுத் தர்மங்கொடுப்பார். இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப்பெருகும் பெருஞ்செல்வம் என்கிறதுபோல, இவர் தர்மம் கொடுக்



கக் கொடுக்க, இவருடைய பணம் குறையாமல் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. சில சமயங்களில் புதுமையாய்ப் பணங் கிடைத்ததென்பது நிச்சயம். அப்படியே இரண்டொரு தடவை அவருடைய வெறும் பையில் திடீரென பணம் வந்துகிடந்தது.

இதுதவிர, இங்கிலாந்து, பெல்ஜியம், ஜெர்மனி தேசங்களினின்று அநேகர் இவருக்கு வேண்டிய தர்மப்பணம் அனுப்புவார்கள். அதைக்கொண்டு ஏழை எளியவர்களுடைய இடுக்கண்களைத் தணித்தார், தர்மசாலைகள் கட்டினார், அநேக பூசைகள் நடக்கும்படி ஏற்பாடு செய்தார், புதிய கோவில்களைக் கட்டினார்.

ஓர் புதிய கோவிலைக் கட்டத்துவக்கின பங்கு சுவாமியிடத்தில் கோவிலை முடிக்கக் கையில் பணமில்லை. அவர் கூரோதார்விடம் வந்து: சுவாமி, நான் கட்டுகிற கோவிலை அரைகுறையாய் விட்டுவிடாதபடி உங்களுடைய இரகசியத்தை எனக்குக் கற்றுக்கொடுங்கள், என்றார். சிநேகிதரே, என்னுடைய இரகசியம் மகா சுளுவானது.

எல்லாம் கொடுத்துவிட்டு, கையில் ஒன்றும் வைத்துக்கொள்ளுகிறதில்லை. கொடுங்கள் கொடுக்கப்படும் என்பது தேவவாக்கியமல்லவா?

கூரோதார்ஸின் சீவிய காலமுழுவதும், தாழ்ச்சி, தாரித்திரம், தபசு என்கிற மூன்று புண்ணியங்களை அவர் அனுசரித்து வந்ததாகக் காணலாம். "பாவிகளுக்குப் பிரயோஜனமாயிருக்கும்படி சர்வேசுரன் என்னை ஏன் தெரிந்துகொண்டாரென்றால், நான்தான் இந்த மேற்றிராசனத்திலுள்ள பங்கு சுவாமிமார்களுக்குள் எல்லாம் கடை கெட்டவன், அறிவில் குறையுள்ளவன். என்னைப் பார்க்கிலும் அறிவில்லாத மற்றொருவர் இருந்திருப்பாரேயாகில் சர்வேசுரன் அவரைத் தெரிந்திருப்பார்" என்று தாழ்ச்சியினால் சொல்லுவார்.

தபசு என்கிற பாதையில் முதல் வைக்கிற அடி கஷ்டமாயிருக்கும். ஒரு தடவை தபசின் ருசிபார்த்த பிற்பாடு, அதில்லாமல் இருக்க முடியாது. பாத்திரத்தின் கடைசித்துளிபரியந்தம் குடிக்கவேணும். நம்மை முழுவதும் சுவாமி கையில் ஒப்படைத்துவிட்டு நமக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ள ஒண்ணாது.

அவருடைய சரீரத்தை கசையினால் அடித்தும், சங்கிலியினால் வதைத்தும், ஒருசந்தி உபவாசத்தினால் தண்டித்தும் வந்தார். அவருடைய ஐம்புலன்களுக்குப் பிரியமானதொன்றும் ஒரு போதாகிலும் கொடுத்தவரல்ல.



தாகத்தினால் நாக்கு வறண்டு போயிருக்கும்போது தாகசாந்தி செய்கிறதில்லையென்றும், கொசுகு அல்லது செள்ளு கடிக்கும்போது ஒன்றுஞ் செய்யாமலிருக்கிறதென்றும், ஒருபோதும் முறையிடுகிறதில்லையென்றும், முழங்காலிலிருக்கும்போது சாய்ந்துகொள்ளக்கூடாதென்றும், பிரதிக்கினை செய்திருந்தார்.

குளிரினால் அவர் பட்ட வருத்தம் கொஞ்சமல்ல. ஆயினும் உஷ்ணமான போர்வை போர்த்திக்கொள்ளமாட்டார்.

அவருடைய சிநேகிதர் ஒருவருக்குப் புன்சிரிப்புடன் சொன்னதாவது: சில சமயங்களில் பாவசங்கீர்த்தனம் கொடுத்து முடிந்தவுடனே, என்னுடைய கால் எங்கேயிருக்கிறதென்று தொட்டுப்பார்த்துத் தேடவேண்டியிருக்கிறது. அப்போது என்னால் நிற்கமுடியாது. கோவிலை விட்டு அறை வீட்டுக்குப் போகும்போது தட்டுத்தடுமாறி தள்ளாடிக்கொண்டு போக நேரிடும். சரி! சரி! மோக்ஷத்தில் நன்றாய் இளைப்பாறலாம். துன்பமெல்லாம் இன்பமாய் மாறிவிடும்.

அதே சிநேகிதர்தான் மற்றொருவிசை அவரைப் பார்த்து நீங்கள் இவ்வளவு துன்பதுரிதங்

கள் அநுபவிக்கிறதற்குக் காரணமென்ன? சிலவேளை சர்வேசுரனிடத்தில் இதைக் கேட்டீர்களோ? என்க, "அவர் சொல்லுவார்: சில வருஷங்களுக்கு முன்னே ஆண்டவரோடு நான் செய்த உடன்படிக்கையாவது: என் பங்கு ஜனங்களை உத்தம கிறீஸ்துவர்களாக்கினால் தேவதிருவுளம் அனுப்பும் சிலுவைகளையெல்லாம் நல்ல மனதுடன் என் மரண பரியந்தம் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆண்டவர் அவருடைய வேண்டுகோளைப் பிறக்கணிக்கவில்லை.

நம்முடைய மனதை எவ்வாறு ஒறுக்கவேணுமென்று காட்டும்படி அவர் சொன்ன புத்திமதியாவது: நமக்குச் சொந்தமானது நம்முடைய சுவாதீனம் ஒன்றுதான். நாம் அதை சர்வேசுரனுக்குப் பலியாய்க் கொடுக்கும்படியாகவே நமக்களித்திருக்கிறார். மனப் பரித்தியாகம் அதிக கஷ்டமென்பது நிச்சயம். ஒரு தடவை மனப் பரித்தியாகஞ் செய்கிறது முப்பது நாள் ஒரு சந்தியாயிருக்கிறதைப்பார்க்கிலும் சர்வேசுரனுக்கு அதிகப் பிரியமாயிருக்கிறது.

நம்முடைய மனதை ஒறுக்கும் ஒவ்வொரு தடவையும் நாம் அடைகிற பலன் எம்மாத்திரமென்றும் சர்வேசுரன் ஒருவர் மாத்திரம் சரியாய் அறிவார். சந்நியாசிகள் ஏன் அத்தனை



பேறுபலனடைகிறார்கள்? ஏனென்றால் இடைபறாது அவர்கள் மனப் பரித்தியாகஞ் செய்கிறார்கள். அர்ச். சின்னப்பர் சொன்னதுபோல அவர்கள் எந்நாளும் சாகிறார்கள். சில சமயங்களில் எனக்கு வருகிற நினைவு என்னவென்றால், தன்னுடைய எஜமாட்டிக்கு சுத்த கருத்துடன் கீழ்ப்படிகிற வேலைக்காரி முதலாய், மடத்தில் தன் ஒழுங்குகளை அநுசரிக்கிற கன்னியாஸ்திரியைப்போல பேறுபலன்கள் அடையக்கூடும்.

இந்த உலகத்திலே நம்முடைய மனதை ஒறுக்கிறதற்கு எத்தனையோ சமயங்கள் நாடோறும் நேரிடுகின்றன. அப்படியே சில நிமிஷம் பிந்திப் படுக்கப்போகிறது அல்லது சில நிமிஷம் முந்தி காலையில் எழுந்திருக்கிறது, ஒருவனோடு பேச அதிக ஆசையிருக்கும்போது அந்த ஆசையை அடக்குவது இதுகளெல்லாம் மெய்யான மனத்தபசு.

உலகவாசிகளுக்குள் முதலாய் தங்கள் மனதை முழுவதும் சுவாமிக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு, தங்களுக்கே மரித்தவர்களாய் இடைவிடாமல் தங்களை ஒறுத்துவந்த சில புண்ணிய ஆத்துமாக்களை நானறிவேன். அர்ச்சியசிஷ்ட

வர்களாகச் செய்வது மனப்பர்த்தியாகமன்றி வேறல்ல. நாமும் நம்மைத்தானே வெறுத்து, நமது சிலுவையைச் சுமந்துகொண்டு சேசுவைப் பின்செல்லுவோமேயாகில், அதிசீக்கிரம் அர்ச்சிய சிஷ்டதனத்தின் உன்னத படியில் வந்து சேருவோமென்பது நிச்சயமாமே.

## 16-ம் அதிகாரம்.

### அவருடைய புத்தி பிரசங்கங்கள்.

ஒரு தடவை ஒருவன் வீம்புக்காக கூரேதாரைப் பார்த்து உமக்கு ஞானசாஸ்திரம் கற்றுக்கொடுத்த உபாத்தியாயர் யார் என்று கேட்டான். அதற்கு அவர் சாந்தத்துடன் "அர்ச். இராயப்பருக்குக் கற்றுக்கொடுத்தவர் தான் எனக்கும் கற்றுக்கொடுத்தார்" என்றார்.

பிரசங்கிக்கும்போதும், புத்திபோதகங்கள் சொல்லும்போதும், ஒருபோதும் கூரேதார்ஸ் ஞான சாஸ்திரத்துக்கு விருத்தமாக ஒன்றுஞ் சொன்னவரல்ல. உத்தம உபாத்தியாயரான சேசுநாதரிடமிருந்து தானே அவர் சாஸ்திரம் கற்றிருந்தபடியால் அவர் தவறிப்போவது எப்படி? பிரிய சிஷ்ஷனை அர்ச். அருளப்பர் எப்படி திருத்தமில்லாமல் கிரீக் பாஷை யெழுதினரோ, அப்படியே இவரும் பிராஞ்சுப்பாஷையைப் பேசினர். அவனைப் போலவே இவரும் "எனது அருமைக் குழந்தைகளே" என்று அடிக்கடி சொல்லுவார். விசுவாசம் தான் அவ

ருடைய சாஸ்திரம். சேசுநாதர்சுவாமிதான் அவருடைய புஸ்தகம். இந்த சாஸ்திரத்தினின்றும், இப்புஸ்தகத்தினின்றும் கற்றறிந்ததை மாத்திரம் பிரசங்கித்தார்.

பிரசங்கிக்கும்போது எவ்வளவு மகத்துவம் பொருந்திய கனவான்கள் வந்திருந்தபோதிலும் எவ்வளவு கூட்டம் ஜனங்கள் கூடியிருந்தபோதிலும், அச்சமின்றி, நடுக்கமின்றி தேவவார்த்தையைப் பிரசங்கிப்பார். இராஜாக்களும், கர்தினல்மார்களும், அர்ச். பாப்பானவருமே வந்திருந்தபோதிலும் வழக்கமாய்ச் சொல்லுகிறதற்குமேல் கூட்டியிருக்கவுமாட்டார், குறைத்திருக்கவுமாட்டார். ஏனென்றால் அவர் ஆத்துமாக்களை இரட்சிக்கும்படியாகவும், சர்வேசுரனுடைய தோத்திரத்திற்காகவும் மாத்திரம் பிரசங்கித்தார்.

கூரேதார்ஸ் சுலுவான நடையில் எல்லாரும் கண்டுபிடிக்கும்படி பிரசங்கிப்பார். இயற்கைப் பொருட்களினின்று உவமானங்கள் எடுத்துக் காட்டுவது அவருக்கு அதிகப்பிரியம்.

கூரேதார்ஸின் புத்தி போதகங்களும், பிரசங்கங்களும் மெய்யாகவே ஓர் விலையேறப்பெற்ற பொக்கிஷமாயிருக்கிறபடியால், இந்த அதிகாரத்தில் அவைகளைச் சற்று விஸ்தார சவிஸ்தாரமாயெடுத்துரைப்போம்.



“ஜெபமானது உலகத்துக்கடுத்த கவலை காரியங்களினின்று நம்முடைய ஆத்துமத்தை அகற்றி அதை வானமட்டும் எழச்செய்கிறது. ஜெபம் செய்யச்செய்ய, ஜெபத்தின்மேயில் ஆசை மென்மேலும் அதிகரிக்கிறது. எப்படி ஒரு மீன் தண்ணீரின் மட்டத்தில் நீந்தினபிற்பாடு கீழே அமிழ்ந்துகிறதோ அதுபோல ஜெபம் செய்கிற ஆத்துமமும் சர்வேசுரனிடத்தில் மென்மேலும் அமிழ்ந்தி மறைந்துபோகிறது. எப்படி மச்சமானது அலை வரும்போது வாயைத்திறக்கிறதோ அதுபோலவே ஜெபிக்கும்போது நம்முடைய இருதயத்தை சேசுநாதருக்குத் திறந்து காட்டவேண்டும்.

சிறு பிள்ளையோடு தகப்பன் பேசும்போது எப்படி பட்சத்துடன் குனிந்து பேசுகிறாரோ அப்படியே ஆண்டவர் நம்மோடு பேசும்போது தம்மைத் தாழ்த்தித் தமது இருதயத்தைத் திறந்து காட்டி தம்மோடு நம்மை அணைக்கிறார்.

அதிகாலையில் எழுந்திருக்கும்போது நாம் தொட்டிலில் கிடக்கிற குழந்தையைப்போல செய்யவேண்டும். குழந்தை கண்விழித்தவுடனே என்ன செய்கிறது? அம்மா எங்கே

யிருக்கிறதென்று பார்க்கும். கண்டால் சிரிக்கும், காணாவிட்டால் அழும். அதுபோல நாம் எழுந்திருக்கும்போது நம்முடைய முதல் எண்ணம் சுவாமிபேரிலிருக்கவேண்டும்.

நம்முடைய ஜீவியம் குளிர்காலத்துக்கு ஒப்பாயிருக்கிறது. குளிர்காலத்தில் இடையர்கள் என்ன செய்கிறார்கள்? நெருப்பு மூட்டி குளிர் காய்வார்களல்லவா. நெருப்பில்லாவிட்டால் அங்குமிங்கும் ஓடிப்போய் விறகு பொறுக்கிக் கொண்டுவந்து நெருப்பு கொளுத்துவார்கள். அதுபோல நாமும் நம்முடைய இருதயத்தில் ஜெபத்தைக்கொண்டும் நற்கிருத்தியங்களைக் கொண்டும், தேவசிநேக அக்கினியை மூட்டக் கடவோம். தேவசிநேகமில்லாத இருதயம் மிகவும் எளிய இருதயம். அந்த இருதயம் பூவும் கனியும் கொடாத பிரயோஜனமற்ற மரத்துக்கு ஒப்பானது. தேவசிநேகம் நிறைந்த இருதயம் ஐசுவரியம் நிறைந்த இருதயம்.

தூய வெண்மையும், அழகுசோபனமும் நிறையப்பெற்ற ஓர் மாடப்புறா தண்ணீரினின்று எழுந்து தன் செட்டைகளை பூமியின் முகமாய் அடிக்கிறதுபோல, தூய இஸ்பிரீத்து சாந்து தேவ இலக்ஷணங்களாகிய கரை காணா சமுத்திரத்தினின்று புறப்பட்டு பரிசுத்த ஆத்



துமங்களின்மேல் பறந்து தம்முடைய சுகந்த சிநேகத்தினால் நிரப்புகிறார்.

ரோஜாமலர் மஞ்சத்தின்மேல் துஞ்சுவது போல் இஸ்பிரீத்துசாந்து தூய ஆத்துமாக்களிடத்தில் தங்கியிருக்கிறார்.

ஞானஸ்நானத்தில் அடைந்த பரிசுத்ததனத்தை இழக்காதவன், தகப்பனுக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடக்கிறவனுக்கு சமானமானவன்.

இறக்கைகள் பறக்கிறதற்கு எவ்வாறு பட்சிகளுக்கு உதவியாயிருக்கிறதோ அப்படியே பரிசுத்த ஆத்துமாக்களுக்கு சிநேகத்தின் இறக்கை மேலே யேற உதவியாயிருக்கிறது. பரிசுத்த ஆத்துமங்களை கயிறினால் கட்டப்பட்டிருக்கிற பட்சிகளுக்கு இணையிடலாம். ஐயோ பரிதாபத்துக்குரிய பட்சி! கயிறு எப்போ அறுபடுமென்று காத்துக்கொண்டிருக்கிறது. அறுபட்டவுடனே மேலே பறந்தோடுகிறது.

மேலும் நல்ல கிறீஸ்துவர்கள், பெரிய சிறகுகளும் சிறிய பாதங்களுமுடைய பட்சிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பட்சிகள் நிலத்தில் நடந்தால் சுளுவில் அகப்பட்டுக் கொள்ளுமென்கிறபடியால் சாதாரணமாய் பூமியில் தங்காது. அதனுடைய கூடுகள் மலையின் உச்சியிலும், சிகரங்களிலுமிருக்கும். அது

போல நல்ல கிறிஸ்துவர்களுடைய எண்ணமெல்லாம் உன்னத காரியங்கள்மட்டி லிருக்கவேண்டும். இலௌகீக காரியங்களை நாடினால் பசாசின் கண்ணியில் அகப்பட்டுக்கொள்ளுவோம்.

பரிசுத்த ஆத்துமம் அழகான விலையேறப்பெற்ற ஆணிமுத்துக்குச் சமானம். கடலின் பாறையில் கிடக்கும் சிப்பிக்குள் அது இருக்கும் வரையில் ஒருவரும் அதை மதிக்கமாட்டார்கள். ஆனால் சிப்பியினின்று எடுத்து, துடைத்து, சூரிய பிரகாசத்தில் வைத்தால் அந்த முத்து துலங்கும். அதுபோலவே இவ்வுலகத்திலுள்ள அநேக தூய பரிசுத்த ஆத்துமங்கள் உலகின்கண் மறைந்துபோயிருக்கின்றன. ஒருநாள் வரும். அப்போது அந்த ஆத்துமம் நித்தியத்தின் பிரகாச சுடரினால் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் வானலோக தூதர்களுக்கும் மத்தியில் தேஜோமயமாய்ப் பிரகாசிக்கும்.

பரிசுத்த ஆத்துமம் கமகமவென்று பரிமளிக்கும் ரோஜா புஷ்பம் என்கலாம். மூன்று தேவ ஆட்களும் பரலோகத்தினின்று இறங்கி வந்து அந்த புஷ்பத்தின் சுகந்தத்தை நுகர்கிறார்கள்.

நெருப்பில் விழுந்த குழந்தையை யெடுக்க ஓடிவருகிற தாயைப் பார்க்கிலும் நல்ல ஆண்ட-



வர் மனந்திரும்பிய பாவிக்கு மன்னிப்புக் கொடுக்கத் தீவிரிக்கிறார்.

தாயானவள் கொலைக்களத்தில் தன் பெற்ற பிள்ளையைத் தானே கத்தியினால் கொல்லவேண்டுமானால் எங்ஙனம் அங்கலாய்ப்பாளோ, அப்படியே நல்ல ஆண்டவர் சபிக்கப்பட்ட பாவியை நித்திய நரகத்துக்கு தள்ளும்போது அங்கலாய்க்கிறார்.

உலக முடிவில் நீதிமான்கள் மோக்ஷ பரிமளம் வீச, இவ்வுலகத்திற்கு வந்து தங்களுடைய சரீரத்தை மீண்டும் எடுத்துக்கொண்டு, நித்திய காலம் மோட்ச பேரின்ப பாக்கியத்தை அநுபவிக்கும்படி பரலோகத்துக்கு ஏறிப்போகும்போது, ஆ! அவர்கள் அநுபவிக்கும் பாக்கியம் எப்பேர்க்கொத்த பாக்கியமாயிருக்கவேண்டும்! அவர்களுடைய மகிமையடைந்த சரீரங்கள் மோட்சத்தில் அநவரதகாலம் பிரகாசம் பொருந்திய வைரக்கற்களைப்போல துலங்கும்.

தாயானவள் சில மாசக் குழந்தையிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ளுகிறாளோ அப்படியே குருவானவரும் உன் மட்டிலும் நடந்துகொள்ளுகிறார். தாயானவள் பிள்ளைக்கு வேண்டிய பாலையும் மற்ற உணவுகளையும் ஊட்டுகிறாள்.

குழந்தை செய்யவேண்டியது வாயைத் திறக்க வேண்டியது ஒன்று மாத்திரந்தான். தாய் குழந்தையைப் பார்த்து, "என் கண்மணியே வாயைத் திற" என்கிறாள். குருவானவர் உனக்குச் சொல்லுகிறதென்ன? இதோ, புசி. இது சேசுநாதருடைய திருச் சரீரம், இது உன்னைக் காப்பாற்றி நித்திய ஜீவியத்துக்கு இட்டுக்கொண்டுபோகக்கடவதாக. குழந்தை தாயைப் பார்க்கும்போது அவள் பக்கமாய்த் தாவி ஓடுகிறது. யாராவது அதைப் பிடித்துக்கொண்டால் சண்டைபோட்டுக்கொண்டு தாயின் பக்கமாயிருக்கும். தாயின் கிட்ட வந்தவுடனே, மடியைப் பிடித்துக்கொண்டு, வாயைத் திறக்கும். அதன் பிறகு தாயைப் பார்த்து முத்தங்கொடுக்கச் சொல்லும். அதுபோலவே குருவானவரைக் கண்டவுடன் உன் ஆத்துமம் அவர் பாரிசம் தாவுகிறது. ஆனால் உன் சரீரத்தின் பாசங்களும், கட்டுகளும் உன் ஆத்தும குருவானவரிடத்தில் போகாதபடி தடை செய்கிறது.

"ஓ! சர்வேசுரனைச் சிநேகிக்கிறது எவ்வளவோ மேலான காரியம்! மோட்சத்துக்குப் போகும்வரையில் தேவசிநேகம் இன்னதென்று சரிவர அறியமாட்டோம். ஜெபத்தினால் சற்றே அறியக்கூடும். ஏனென்றால் ஜெபம் நம்முடைய



ஆத்துமத்தை மோட்சம் வரையில் உயர்த்துகிறது.

"நம்மோடு புழங்குகிற மனிதர்களுடைய குறைகுணங்களை அறிய அறிய அவர்கள் மட்டில் நமக்குள்ள சிநேகம் குறையும். ஆனால் சர்வேசுரன் மட்டில் அது முழு விரோதம். அவரை எவ்வளவுக்கதிகம் அறிகிறோமோ அவ்வளவுக்கதிகம் சிநேகிப்போம். மனுஷன் உண்டாக்கப்பட்டதற்குக் காரணம் சிநேகம். இதனால்தான் அவன் சிநேகிக்கும்படி இப்படி ஆசைப்படுகிறான்.

மனுஷன் எப்படிக்கொத்த உயர்ந்த பதவியிலிருக்கிறானென்றால், உலகத்திலுள்ள எதுவும் அவனுடைய இருதயத்தை நிரப்பக்கூடாது. சர்வேசுரன் ஒருவர் மாத்திரம் அவனுடைய இருதயத்தை நிரப்பக்கூடியவர். தண்ணீரினின்று ஓர் மீனையெடுத்துக் கரையில் போடு. அது சீக்கிரம் செத்துப்போகும். சர்வேசுரனில்லாத ஆத்துமம் தண்ணீரினின்று எடுத்தெறியப்பட்ட மீனுக்குச் சமானம். அந்த ஆத்துமம் சீக்கிரம் நாசமடையும்.

இந்த ஜீவியம் தண்ணீரைக் கடக்கப் போட்டிருக்கும் பாலத்துக்கு இணையிடலாம். நாம் இந்த உலகத்திலிருக்கிறோம். ஆனால் நாம் இந்த

உலகத்துக்குச் சொந்தமானவர்களல்ல. ஏனென்றால் நாம் தினந்தோறும் பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவே! என்று சொல்லுகிறோம். மோட்சத்திலிருக்கும் நம்முடைய தகப்பனார் வீட்டில் போய் நம்முடைய சம்பாவனையைப் பெறும் வரையில் சற்றுப் பொறுமையாயிருக்கவேண்டும். நல்ல கிறீஸ்துவர்களுக்குத் துன்பத்துக்குமேல் துன்பமும், சிறுமைக்குமேல் சிறுமையும் வருகிறது. இது நல்ல அடையாளம். நல்ல ஆண்டவரைச் சிநேகிக்காதவர்களும், அந்தி சந்தி ஜெபம் பண்ணாதவர்களும், கோவிலுக்குப் போய் தேவதிரவிய அநுமானங்களைப் பெறாதவர்களும், இவ்வுலக பாக்கியங்களை அநுபவிக்கக்கூடும். அது கெட்ட அடையாளம்; ஏனென்றால் அப்பேர்ப்பட்டவர்கள் செய்த அற்ப சொற்ப நன்மைக்கு இவ்வுலோகத்திலேயே சம்பாவனை பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

சர்வேசுரன் தம்மை நேசிக்கிறவர்களைத் தண்டிக்கிறாரென்று நாம் சில தடவை சொல்லுகிறோம். அது அப்படியல்ல. சர்வேசுரனைச் சிநேகிக்கிறவர்களுக்குத் துன்பங்கள் தண்டனையல்ல, பெரிய நன்கொடைகள். நாம் வருத்தத்தைப் பார்க்கக்கூடாது. சம்பாவனையைப் பார்க்கவே



ண்டும். வியாபாரி தான் படும் கஷ்டத்தைச் சட்டைபண்ணாமல், தனக்கு வர இருக்கும் இலாபத்தைப் பார்க்கிறான். நித்தியத்துக்கு முன்னால் இருபது வருஷம் முப்பது வருஷம் என்ன? ஒன்றுமில்லை. நாம் துன்பதுரிதங்கள் கஷ்ட நஷ்டங்கள் என்று கத்துகிறோமே, அவைகள் என்ன? சில கண்டிப்பான வார்த்தைகள், ஓர் நிந்தை, பழிப்பான சில சொற்கள், ஓர் நஷ்டம், இதுதான். இவைகள் உன்னைக் கொல்லமாட்டாது.

“அற்ப நீச மனுஷர்களாகிய நாம் பரலோக பூலோக ஆண்டவருக்குச் சந்தோஷம் வருத்துவிக்கிறது எவ்வளவோ பாக்கியமான காரியம்!

“ஒருபக்கத்தில் மனுஷன் உன்னத மகத்துவம் பொருந்தியவன், மற்றொரு பக்கத்தில் அவன் கடைகெட்ட நீசன். அவனுடைய அழியாத ஆத்துமத்தைப்பார்க்கும்போது அவனைப் பார்க்கிலும் மேலானது ஒன்றுமில்லை. அவனுடைய மண்பாண்டத்துக்கு ஒப்பான சரீரத்தைப் பார்க்கும்போது அவனைப்பார்க்கிலும் தாழ்ந்தது ஒன்றுமில்லை.

நாம் சர்வேசுரனுடைய வேலைப்பாடுகள்—அவர் நம்மை அளவுகடந்த விதமாய்ச் சிநேகிப்பதற்குக் காரணம் இதுவே.—நாம் சர்வேசுரனு

டைய சிருஷ்டிகள் என்று அறிவது எளிது. ஆனால் அவரைச் சிலுவையிலறைந்தது நாம் தாமென்று ஒத்துக்கொள்ளுவது புத்திக்கெட்டாததாயிருக்கிறது.

நமது இரட்சகர் நம்மை இரட்சிக்கும்படி வேண்டியதற்கு மீசுரமாய்ப் பிராயச் சித்தம் செய்திருக்கிறார். அவருடைய பரமபிதாவின் நீதிக்கும் போதுமாயிருந்தது, அவருடைய சிநேகத்துக்கு போதாமலிருந்ததே இதற்குக் காரணம்.

“சுவாமியுடைய பாடுகளின்றி, சகல மனுஷர்களுடைய பரிகாரமெல்லாம் சேர்ந்தாலும் ஒரு அற்பப் பொய்யை பரிகரிக்க முடியாது.

“உலகவாசிகள் மோக்ஷத்தையும் நரகத்தையும் அடிக்கடி சிந்திக்கிறதில்லை. மோக்ஷத்தை அடிக்கடி நினைவுகூர்வார்களேயாகில் இப்பிரபஞ்சத்தைத் உபேக்ஷித்து, பரலோக சாம்பிராச்சியத்தை அடைய ஆசித்து, மோக்ஷத்தின்பேரில் ஏக்கமாயிருப்பார்கள். நரகத்தை அடிக்கடி நினைவுகூர்வார்களேயாகில், சகல வேதனைகள் நிறைந்த அந்த ஸ்தலத்துக்குப் போகாதபடி முயற்சியெடுத்துக்கொள்ளுவார்கள்.

மோக்ஷத்தில் சர்வேசுரனுடைய ஆவி நம்மைப் போஷிக்கும். கைதேர்ந்த சிற்பி, கற்களின்



தாரதம்மியம் பார்த்து வைக்கவேண்டிய இடத்தில் எப்படி வைப்பானோ, அப்படியே பரம சிற்பியாகிய ஆண்டவர் மோக்ஷ அரண்மனையில் நமக்குரிய இடத்தில் நம்மை வைப்பார்.

“விசுவாசக்கண்ணை யிழந்துபோன அவிசுவாசிகள் நரகத்துக்குள் புதைக்கப்பட்ட பிறகு தான் கண்ணைத் திறந்துபார்ப்பார்கள். மீன்கள் எங்ஙனம் தண்ணீரில் அமிழ்ந்திக் கிடக்கின்றனவோ, அங்ஙனமே நரகவாசிகள் தேவ கோபாக்கினையில் அமிழ்ந்திக் கிடப்பார்கள்.

“பாவிகளைச் சபிப்பது சர்வேசுரனல்ல. அவர்களுடைய பாவங்களே அவர்களைச் சபித்து நரகத்துக்குத் தள்ளும். நரகவாசிகள் கடவுள் மேல் குற்றஞ் சாட்டாமல், “எங்களுடைய குற்றத்தினால், தேவனை யிழந்தோம், ஆத்துமத்தை யிழந்தோம், மோக்ஷத்தையிழந்தோம்” என்று சந்ததம் கதறுகிறார்கள்.

“நரகத்தில் கிடக்கிற ஓர் சபிக்கப்பட்ட ஆத்துமம், ‘என் ஆண்டவரே! நான் உம்மைச் சிநேகிக்கிறேன்’ என்று சொல்லக்கூடுமானால், அந்த ஆத்துமம் இனிமேல் நரகத்திலிருப்பது கூடாத காரியம். ஆனால்! ஐயோ நிர்ப்பாக்கியமே! நரகவாசிகளிடத்தில் சிநேகத்தின்

றாறு வற்றி வறண்டு உலர்ந்துபோய்க் கிடக்கிறது. அந்த ஆத்துமாக்களிடத்தில் பாக்கியமில்லை, சமாதானமில்லை. மறுமையில் அவர்களிடத்தில் சிநேகமில்லை.

"சர்வேசுரனுடைய நன்மைத்தனம் நரக அக்கினியைக் கொளுத்திவிட்டு உக்கிரமாய் எரியச்செய்கிறது. நரகவாசிகள் சொல்லுகிறதென்ன? ஓ! ஆண்டவர் எங்களைக் கொஞ்சமாய்ச் சிநேகித்திருந்தால் நாங்கள் இத்தனை நிர்ப்பாக்கியம் அநுபவிக்கமாட்டோம். நரகவேதனையைப் பொறுத்துக்கொள்ளுவோம். ஆனால் உலகத்திலிருக்கும்போது வாக்குக்கெட்டாத விதமாய் அவரால் சிநேகிக்கப்பட்டதே நரகவேதனையைத் தாங்கொண்ணாச்செய்கிறது.

"ஒரு பெரிய பாவி சாகக்கிடக்கும்போது அவனுடைய சிநேகிதர்கள் அவனைப்பார்த்து உன்னுடைய கல்லறையின்மேல் என்ன எழுதவேணுமென்று கேட்டார்கள். அதற்கு அவன் சொன்ன மறுமொழியாவது: "இதோ, இங்கே ஓர் பைத்தியகாரன் கிடக்கிறான். இவன் இவ்வுலகத்துக்கு வந்த காரணம் என்னவென்று அறியாமல் இவ்வுலகத்தை விட்டுத் தொலைந்தான்" இவனைப்போல தங்களுடைய கதி இன்னதென்று கிஞ்சித்தும் யோசியாத பைத்



தியகாரர்கள் அனந்தம்பேர் இருக்கிறார்கள். அவர்களைப்போல நாம் நடக்கவேண்டாம்.

"நாம் இவ்வுலகத்திலே எவ்வளவோ நேரம் விருதாவில் செலவழிக்கிறோம். நாம் வீணில் செலவழிக்கிற நேரத்தில் அரைமணி நேரம் சர்வேசுரன் நரகவாசிகளுக்குக் கொடுத்தால் நரகத்தில் ஒரு ஆத்துமமுமிருக்கமாட்டாது.

"நாம் சாகும்போது பூமி நமக்குக் கொடுத்ததை நாம் மீண்டும் பூமிக்குக் கொடுத்துவிடுகிறோம். அதென்ன? ஒரு பிடி மண்ணு. மண்பாண்டத்துக்கு ஒப்பான நமது சரீரம் இடிந்து தகர்ந்து தூளாய்ப்போனால் ஒரு பிடி மண்ணாய்ப் போகிறது. ஓ! மனுஷா இதுதான் உன் பவிஷு".

"நாம் இந்த உலகத்தில் இடைவிடாமல் வருந்தி உழைக்கவேணும். மறு உலகத்தில் நித்தியகாலம் இளைப்பாறலாம்.

"பாவஞ் செய்யும்போது நாம் சேசுநாதரை சிலுவையில் அறைகிறோம். பாவசங்கீர்த்தனஞ் செய்யும்போது நாம் அவரைச் சிலுவையை விட்டு இறக்கிறோம். நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்கிறவன் பசாசை சங்கிலியினால் கட்டுகிறான்.

"பாவசங்கீர்த்தனத்தில் மறைக்கிற பாவம் ஒருநாள் சகல ஜனங்களுக்குமுன்னால் வெளியாகவும், நமது பாவத்தை ஒருவரும் அறியாதபடி ஆசைப்படுவோமேயாகில் இப்போது தானே குருவானவரிடம் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லவேண்டும்.

"தன்னுடைய சொந்த நிலத்தைத் தரிசாய் விட்டு விட்டு அயலான் நிலத்தைக் கொத்தி உழுது பயிரிடுகிறவன் மடையனல்லவா? அப்பேர்ப்பட்ட கசமடையர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் அயலானுடைய குற்றங்குறைகளை நோண்டிக்கொண்டு தங்களை முற்றிலும் மறந்து விடுகிறார்கள். சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் நிற்கும்போது சுவாமி யாருடைய கணக்கை நம்மிடத்தில் கேட்பார்? நம்முடைய கணக்கையன்றி புறத்தியானுடைய கணக்கை நம்மிடத்தில் கேட்கமாட்டார். அடிக்கடி நம்முடைய கைகள் சுத்தமாயிருக்கிறதா இல்லையாவென்று பார்க்கிறோமல்லவா. அதுபோல நம்முடைய ஆத்துமம் சுத்தமாயிருக்கிறதாவென்று உற்றுப்பார்க்கவேண்டும்.

"நம்மோடு எப்போதும் இரண்டு காரியதரிசிகள் கூடவேயிருக்கிறார்கள். அவர்கள் யாரென்றால், நம்முடைய காவல் சம்மனசும், பசாசும்



தான். நமது ஜென்ம விரோதி நாம் செய்கிற சகல பாவங்களையும், கரிசனமாய்ப் பார்த்துக்கொண்டு நுணுநுணுக்கமாய்க் குறித்துக்கொள்ளுகிறது. சர்வேசுரனுடைய நீதி சிம்மாசனத்துக்கு முன்னால் நமக்கு விரோதமாய் எழுந்து நிற்கும். நம்முடைய நல்ல காவல் சம்மனசு நாம் செய்கிற சகல நற்கிரியைகளையும் குறித்துக்கொள்ளுகிறார். அவர் தீர்வைநாளில் நமக்குப் பரிந்துபேசுவார். ஆனால் நாம் புண்ணியத்தைச் செய்யாமல் பாவத்தை மாத்திரம் செய்திருந்தால், அவர் எப்படி நமது பாரிசமாய்ப் பரிந்து பேசக்கூடும்?

"சிலர் வெளிக்கு நல்ல கிறீஸ்தர்களைப்போல நடிக்கிறார்கள். உள்ளே பார்த்தாலோ பாவ அசுத்தத்தைத்தவிர வேறொன்றுமில்லை. அப்பேர்ப்பட்டவர்கள் கண்ணுக்கு அழகாயும் உள்ளே வெட்டிப்பார்த்தால் புழு அரித்து ஒன்றுக்கும் உதவாத பழங்களுக்கு ஒப்பானவர்கள்.

"சில தினங்களுக்குமுன்னே, தேவநற்கருணையில் மெய்யாகவே சேசுநாதர் இருக்கிறார் என்னும் வேதசத்தியத்தை அங்கீகரியாத இரண்டு பதித பாதிரிமார் இங்கே வந்திருந்தார்கள். நான் அவர்களை நோக்கி: தேவநற்கருணை தானாய்ப் பறந்துபோய் ஒருவன் நாக்கில் தங்கக்

கூடுமா" என்று கேட்டேன். அவர்கள்: அது முடியாத காரியம். அப்படி நடந்ததானால் அது வெறும் உருட்டியல்லவென்று சொன்னார்கள்.

"சரி, உங்களைப்போலவே, மற்றொருவன் சற்பிரசாத ஆண்டவரை நம்பாமலிருந்தான். ஆனால் அவன் விசுவாசவரம் கிடைக்கும்படி தேவமாதாவைப் பார்த்து வேண்டிக்கொண்டான். இப்போது நான் சொல்லப்போகிறதைக் கவனமாய்க் கேளுங்கள். அந்தக் காரியம் எங்கேயோ, யாரிடமோ நடந்ததென்று நான் சொல்லவில்லை. அது இங்கேயே எனக்குத்தானே சம்பவித்தது. நான் சற்பிரசாத ஒஸ்தியைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும்போது அது தானே புறாமைபாய்ப் பறந்து, தேவதாயாரிடம் விசுவாசவரம் கேட்டவனுடைய நாக்கில் போய்த் தங்கினது."

ஆத்துமம். ஓ! ஆத்துமத்தின் அழகை என்னென்று சொல்ல! நமதாண்டவர் அர்ச். கத்தரீனம்மாளுக்கு ஆத்துமத்தின் சாயலைப் பார்க்கும்படி செய்தபோது, அவள் ஆனந்தப்பிரவாகத்தில் அமிழ்ந்தினவளாய்: "ஆண்டவரே! ஒரே ஒரு சர்வேசுரன் மாத்திரம் உண்டென்று அறியாவிட்டால், இதை நான் ஓர் தெய்வமென எண்ணியிருப்பேன்" என்று கூவிச்சொன்னாள்.



தண்ணீரின்மேல் சூரியனுடைய சாயல் பிரதிபிம்பிக்கிறதுபோல் பரிசுத்த ஆத்துமத்தில் சர்வேசுரனுடைய சாயல் பிரதிபிம்பித்திருக்கிறது. அர்ச்சியசிஷ்ட தம திரித்துவத்தின் மூன்று ஆட்களும் அந்த ஆத்துமத்தை நேசிக்கிறார்கள். பிதா தமது கைவேலையைக்கண்டு களிகூருகிறார். சுதன் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் கிரயத்தைக் கண்ணோக்குகிறார். இஸ்பிரீத்துசாந்து இது என் தேவாலயம் என்கிறார்.

"நாம் சர்வேசுரனுடைய பிள்ளையாயிருப்பது எவ்வளவோ மேலான மகத்துவம்! இந்த உயர்ந்த பட்டத்தை நாம் சரிவர உய்த்துணர்வோமேயாகில் பாவஞ் செய்யமாட்டோமென்பது சத்தியம். நம்முடைய ஆத்துமத்துக்குப் போஜனமாக நம்முடைய பரம தகப்பன் நமக்குக் கொடுக்கிறதென்ன? தம்மைத் தாமே அன்பின் தேவதிரவிய அநுமானத்தில் கொடுக்கிறார். வனமாகிய இப்பூவுலகில் நமக்கு இந்த தேவபோஜனம் மகா அவசரம். பந்தியில் நானாவித ருசிகரமான பதார்த்தங்கள் ஏராளமாய்ப் பரப்பியிருந்தும், புசிக்க சோம்பல்பட்டுப் பட்டினியாய்க் கிடக்கிறவன் மதியீனனல்லவா. ஆத்துமத்தின் போஜனமாகிய சம்மனசுக்களின் அப்-

பக்ஷைப் புரியாதவர்கள், அவர்களைப் பார்க்கிலும் மதிகெட்ட மடையர்கள்.

ஜெபம். "பிள்ளைகளே, நமது பொக்கிஷம் இவ்வுலகத்திலில்லை மறு உலகத்திலிருக்கிறது. நம்முடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே நமது நினைவு இருக்கவேண்டும். ஜெபிப்பதும் சிநேகிப்பதுமே மனுஷன் இவ்வுலகத்திலடையக்கூடிய பெரும் பாக்கியம்.

"சர்வேசுரனோடு ஒன்றிப்பதுதான் ஜெபம். நமது இருதயம் பரிசுத்தமாயிருந்து சர்வேசுரனோடு ஐக்கியப்பட்டிருக்கும்போது நம்மிடத்தில் தேவபரிமளம் வீசுகிறது; தேவ ஒளி பிரகாசிக்கிறது. இரண்டு உருகின மெழுகுருண்டுகளைச் சேர்த்தால் எப்படி ஒன்றித்துப்போகிறதோ, அப்படியே நாம் சர்வேசுரனோடு ஒன்றிக்கிறோம். இதைப்போல அழகான ஒன்றிப்பை எண்ணவும் கருதவும் முடியாது."

# 17-ம் அதிகாரம்.

## அவருடைய புத்தி பிரசங்கங்கள்.

(தொடர்ச்சி.)

குருத்துவம்: எனதன்பான பிள்ளைகளே! இந்தத் தேவதிரவிய அநுமானத்தை நீங்கள் பெறுதிருந்தபோதிலும், இதற்கும் உங்களுக்கும், கிட்டின சம்பந்தமிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. குருவானவர் சர்வேசுரனுடைய ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டவர். அவர் சர்வேசுரனுடைய இடத்திலிருந்துகொண்டு அவருக்குரிய அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறவர். குருவானவரைப்பார்த்து ஆண்டவர் என்ன சொல்லுகிறார்? "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய் சகல ஜாதி ஜனங்களுக்கும் உபதேசியுங்கள்."

குருவானவர் பாவப்பொறுத்தல் அளிக்கும்போது "சர்வேசுரன் உன் பாவத்தை மன்னிக்கிறார்" என்று சொல்லுகிறாரா? இல்லை. 'நான்

மன்னிக்கிறேன்' என்கிறார்.—திவ்ய பலிப்பூசையில் எழுந்தேற்றம் பண்ணும்போது "இது சேசுநாதருடைய சரீரம்" என்று சொல்லுகிறாரா? இல்லை. 'இது என் சரீரம்' என்கிறார்.

நமக்கு வருகிற நன்மை வரங்களெல்லாம் மரியாயின் வழியாய் வருகிறதென்று அர்ச். பெர்நர்து சொல்லும்வண்ணம், சகலமும் நமக்கு குருவானவர் வழியாய் வருகிறதென்று சொன்னால் பொய்யாகமாட்டாது. ஆம். மெய்யாகவே, சகல பாக்கியங்களும், வரங்களும், மோக்ஷப்பிரசாதங்களும் குருவின் வழியாகவே நமக்கு வருகின்றது.

"குருத்துவமில்லாவிட்டால் நமது அருமை மீட்பர் நமது மத்தியில் இடைவிடாமலிருப்பாரா? இல்லை. தேவநற்கருணைப் பெட்டியில் அவரை வைத்தது யார்? குருவானவர். நீ இவ்வுலகத்தில் பிறந்தவுடன் உனக்கு ஞானசீவியத்தைக் கொடுத்தவர் யார்? குருவானவர். உன்னுடைய ஆத்துமத்தை சம்மனசுக்களின் அப்பத்தைக்கொண்டு போஷிப்பவர் யார்? குருவானவர். உன்னுடைய ஆத்துமம் சாவான பாவத்தினால் செத்துப் பிணமாய்க் கிடக்கும்போது மீண்டும் அதற்கு ஞான உயிரைக் கொடுப்பது யார்? குருவானவர். கடைசியாய் உன்



அந்திய வேளையில் உனக்கு ஆறுதல் சொல்லி, உன் மனதைத் தேற்றி, உன் பாவக்கறைகளை தேவ செம்மறிப்புருவையின் விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தினால் கழுவி, வழித்துணை ஆகாரம் கொடுத்து, தேவ சமுகத்தின் சிம்மாசனத்துக்கு முன் போய் நிற்கும்படி உன்னை ஆயத்தம் பண்ணுகிறவர் யார்? குருவானவர். நீ செத்து உத்தரிக்கிற ஸ்தல நெருப்பில் அகோர வேதனை அநுபவிக்கும்போது அந்த உக்கிரம! அக்கினியை திவ்ய பலிப்பூசையின் அளவிறந்த பலனைக்கொண்டு தணிப்பவர் யார்? குருவானவரன்றி வேறொருவருமல்ல. என் அருமைப் பிள்ளைகளே! எப்பக்கமிருந்து உங்களுக்கு யாதொரு ஆத்தும நன்மை வருகிறதோ அப்பக்கம் குருவானவரையும் பார்ப்பீர்கள்.

"நீ உன்னுடைய பாவங்களை சம்மனசுக்களிடமாகிலும், தேவதாயாரிடமென்கிலும் சங்கீர்த்தனம் செய்தால் அவர்கள் உனக்குப் பாவப்பொறுத்தல் அளிப்பார்களா? இல்லை. அல்லது அவர்கள் சற்பிரசாதநாதரை உனக்குக் கொடுக்கக்கூடுமா? கூடாது. அமல தாயாருக்கு முதலாய் தமது திருக்குமாரனை மோக்ஷத்திலிருந்து ஒஸ்தியில் எழுந்தருளிவரச் செய்ய ஏலாது. இருநூறு சம்மனசுக்கள் உன்னைச்

கூட இருந்தாலும் உன் பாவத்தை மன்னிக்க அவர்களுக்கு வல்லமையில்லை. ஆனால் ஓர் ஏழைக் குருவானவர் உன்னைப்பார்த்து: "சமாதானத்தோடு போ, உன் பாவங்களை நான் மன்னிக்கிறேன்" என்று சொல்லக்கூடும்.

"என் அருமைப் பிள்ளைகளே! அப்படியானால் குருவின் மகத்துவம் எவ்வளவு மேலானது! குருத்துவம் இன்னதென்று மோக்ஷத்தில் மாத்திரம் சரிவர அறிவோம்.—இவ்வுலகில் அறிவோமேயாகில், பயத்தினாலல்ல, சிநேகத்தினால் உயிர்விடுவோம்.

குருவானவரில்லாவிடின், தேவ வரங்கள் நமக்கு என்ன ஆதாயத்தை விளைவிக்கும்? ஓர் வீடு நிறைய தங்கம் கொட்டிக்கிடந்தபோதிலும், அவ்வீட்டின் கதவைத் திறந்துகொடுப்பார் ஒருவருமில்லாவிட்டால், அதனால் உனக்கு யாதொரு பிரயோஜனமில்லையல்லவா? மோக்ஷ பொக்கிஷசாலையின் திறவுகோலை வைத்திருக்கிறவர் குருவானவர். அவர்தான் பரலோக இராஜனுடைய காருபாரி. அவர்தான் அவருடைய விசாரணைக்காரர்.

குருவானவரில்லாவிட்டால் நமது அருமை இரட்சகர் தம்முடைய திருப்பாடுகளினாலும், மரணத்தினாலும் சேகரித்து வைத்திருக்கிற



கனகாணுத வரப்பிரசாதப் பிரவாகத்தை நமதாத்துமத்தில் பொழியச் செய்பவர் யார்? ஒருவருமில்லை. பிரியமான பிள்ளைகளே! அஞ்ஞானிகள் ஏன் அந்தகாரத்தில் சீவிக்கிறார்கள்? அவர்கள் மத்தியில் சத்தியமறைக் குருக்கள் இல்லாதபடியினால், இரட்சணியத்தின் பலனை அவர்களுக்குக் கொடுப்பவர் ஒருவருமில்லை.

"குருவானவர் தமக்காகக் குருவானவராயிருக்கிறதில்லை. தாம் தாமே தம்முடைய பாவங்களைப் பொறுத்துக்கொள்ளுகிறாரா? தாமே தமக்கு மற்றத் தேவதிரவிய அநுமானங்களைக் கொடுத்துக்கொள்ளுகிறாரா? பரிச்சேதமில்லை. பிரியமான பிள்ளைகளே! குருவானவர் குருவாயிருக்கிறது உங்களுக்காகவே.

"சர்வேசுரனுக்கு இரண்டாவது குருவானவர்.—ஒரு பங்கில் இருபது வருஷமாக ஒரு பங்கு சுவாமியும் போகாமலிருக்கட்டும். அதன்பிறகு அவ்வூர் ஜனங்களின் கேவலீஸ்திதி என்னவென்று விளங்கும்.—அவர்கள் அஞ்ஞானிகளைப்பார்க்கிலும் கேடுகெட்டவர்களாவார்கள்.

"இந்த ஊரில் நானும் என்னோடுகூட இருக்கிற சுவாமியும் இவ்வூரை விட்டுப் போய்விட்டால் நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? நாங்கள்

ன் கோயிலுக்குப் போகவேணும், கோவிலில் பூசையில்லை, தேவநற்கருணையில்லை, வீட்டிலிருந்துகொண்டே ஜெபஞ் செய்துகொள்ளுவோம் என்பீர்கள். வேத விரோதிகள் சத்திய வேதத்தை அழிக்கிறதற்கு சாதாரணமாய் எடுக்கிற உபாயமென்ன? முதல் முதல் குருக்களை எதிர்ப்பார்கள். ஏனென்றால் குருவின்றி பலியில்லை.—பலியின்றி வேதமில்லை.

“கோவில் மணி உன்னைக் கோயிலுக்கு அழைக்கும்போது யாராகிலும் உன்னைப்பார்த்து” எங்கே போகிறாய்? என்று கேட்டால் “நான் என்னுடைய ஆத்துமத்துக்குப் போஜனம் கொடுக்கப்போகிறேன்” என்று சொல்லு.

தேவநற்கருணைப் பெட்டியைக் காண்பித்து “அது என்னவென்று கேட்டால், என் ஆத்துமத்தின் உக்கிராணம் அதுதான் என்று மறுமொழி சொல்லு. அந்த போஜன சாலையின் திறவுகோல் யாரிடமிருக்கிறது? போஜனம் சேகரிக்கிறது யார்? பந்தி பரிமாறுகிறது யார்? பிரியமான பிள்ளைகளே! குருவானவர் அன்றி வேறொருவருமல்ல. நாம் நம்முடைய இரட்சகரின் திருச்சரீரத்தையே புசிக்கிறோம். அவருடைய விலைமதியாத திரு உதிரத்தையே நாம் பானிக்கிறோம். ஆ! என் தேவனே!



என் சர்வேசுரா! எம்மாத்திரம் எங்களைச் சிநேகித்தீர்!!”

குருவானவருடைய வரம்பற்ற வல்லமையைப் பாருங்கள். அவர் உச்சரிக்கிற வார்த்தையினால் அப்பம் சர்வேசுரனுடைய சரீரமாக மாறுகிறது. உலகத்தைச் சிருஷ்டிக்கிறதைக் காட்டிலும் இது மேலான வல்லமையல்லவா.—

யாரோ ஒருவன் மற்றொருவனைப் பார்த்து அர்ச். பிலோமினம்மாள் கூறோதார்ஸ்க்குக் கீழ்ப்படிகிறார்களாமே, இது நிசந்தானோவென்று கேட்டானாம். திவ்விய பூசைநேரத்தில் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த ஆண்டவரே அவருக்குக் கீழ்ப்படியும்போது, இது ஆச்சரியமல்ல.

நான் ஒரு குருவானவரையும் ஒரு சம்மனசையும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் கண்டால், முதல் முதல் குருவானவருக்கு ஆசாரம் செய்த பிறகு மாத்திரம் சம்மனசானவருக்கு ஆசாரம் செய்வேன். இதற்குக் காரணமென்னவென்றால், சம்மனசானவர் சர்வேசுரனுடைய சிநேகிதர்.—ஆனால் குருவானவர் அவருடைய பிரதிநிதி.—பக்தி விசுவாசம் நிறைந்த அர்ச். தெரேசம்மாள் குருவானவர் நடந்த அடித்தடங்களை முத்தி செய்வாள்.

"கர்த்தர் கல்லறையை விட்டு உயிர்த்து தமது பிரிய அப்போஸ்தலர்களுக்குத் தம்மைக் காண்பித்தபோது திரும்பவும் அவரைக் கண்டதினால் அவர்களடைந்த சந்தோஷத்துக்குக் கங்கு கரையில்லை. குருவானவர் தமது கரங்களில் சற்பிரசாத ஆண்டவரை யேந்திக்கொண்டிருக்கும்போது அப்பேர்ப்பட்ட சந்தோஷத்தை அநுபவிக்கவேண்டும்.

திருப்பண்டங்களைத் தொட்ட வஸ்துக்களை நாம் பூச்சியமாய் வைத்துக்கொள்ளுகிறோம். பெரிதாய் மதிக்கிறோம். அப்படியானால் திரு இரத்தத்தையும், திருச் சரீரத்தையும், தொடுகிற விரல்கள் இவைகளைப் பார்க்கிலும் அதிக பூஜிதமானவைகளல்லவா? குருத்துவம் சேசுவின் திரு இருதயத்தின் மட்டற்ற சிநேகமேயன்றி வேறல்ல.

குருவானவரைப் பார்க்கும்போது, திவ்விய குருவாகிய சேசுக்கிறீஸ்துநாதரை நினைவுகூர்ந்துகொள்."

இஸ்பிரீத்துசாந்து: என் அருமைப்பிள்ளைகளே! பிதாவாகிய சர்வேசுரன் நம்முடைய சிருஷ்டிகர். சுதனாகிய சர்வேசுரன் நம்முடைய இரட்சகர். இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் நம்மை அர்ச்சிக்கிறவர். மூன்றாம் ஆளா-



கிய இஸ்பிரீத்து நமக்குப் புத்தித்தெளிவையும் ஞான வெளிச்சத்தையும் மனத்திடாரிக்கத்தையும் கொடுக்கிறார். மோட்ச பாதையைக் காட்டுவதற்கு அவர்தான் உத்தம வழிகாட்டி.

"மனுஷன் தன்னிலே ஒன்றுமில்லை. ஆனால் அவன் திவ்விய இஸ்பிரீத்துவினால் நிரப்பப்பட்டிருக்கிறபோது அவன் உன்னத பதவிக்கு உயர்த்தப்படுகிறான். அர்ச்சியசிஷ்டவர்கள் பிரபஞ்சகாரியங்களையெல்லாம் வெறுத்துத் தள்ளி தங்களைத்தானே இடைவிடாமல் பரித்தியாகம் பண்ணினதற்குக் காரணமென்ன? அவர்கள் இஸ்பிரீத்துசாந்துவினால் நடத்தப்பட்டதே அதற்குக் காரணம். இஸ்பிரீத்துசாந்துவினால் நடத்தப்படுகிறவர்கள் தவறுகிறது கூடாதகாரியம்.

எது நன்மை எது தீமை, எது உண்மை எது பொய்யென்று திட்டமாய் அறியச்செய்பவர் இஸ்பிரீத்துசாந்துவானவரே. பூதக்கண்ணாடி எப்படி சிறிய பொருள்களை ஸ்தூலித்துக் காட்டுகிறதோ, அப்படியே திவ்ய இஸ்பிரீத்துவும் நன்மை தின்மையின் தாரதம்மியத்தைக் காண்பிக்கிறார். அவர் நமக்குக் கொடுக்கிற தேவ பிரகாசத்தினால் சர்வேசுரனுக்காகச் செய்கிற அற்பக்காரியமும் சர்வேசுரனுடைய சந்நிதானத்

தில் அதிகப் பேறுபலனுள்ளதென்றும், ஓர் அற்பப் பாவமுதலாய் சர்வேசுரனுக்கு அதிக அருவருப்பு விளைவிக்கிறதென்றும் கண்டுகொள்ளுகிறோம். கடியாரம் செய்கிறவன் பூதக்கண்ணாடியின் உதவியினால் சின்னஞ்சிறிய சக்கரங்களை வெகு அலாம்பரமாய்ப் பார்க்கிறதுபோல தேவ இஸ்பிரீத்துவின் ஒளியினால் நம்முடைய சீவியத்தின் அற்பசொற்பக் குற்றங்களையெல்லாம் பரிஷ்காரமாய் அறிந்துகொள்ளுகிறோம்.

"பரிசுத்த தேவதாயார் பாவத்தின் நிழலை முதலாய் என் காணவில்லை. ஏனென்றால் இஸ்பிரீத்து சாந்துவினால் அவள் நிரப்பப்பட்டவளாயிருந்தாள்.

"அகங்காரியிடத்தில் தேவ இஸ்பிரீத்து இல்லை. உலகமே சதமென்று எண்ணித் திரிகிறவனிடத்திலும் அவர் இல்லை.

"நரகவாசிகளைப் பார்த்து" ஏன் நீங்கள் நரகத்துக்குப் போனீர்கள் என்று கேட்டால், அவர்கள் என்ன மறுமொழி சொல்லுவார்கள்? நாங்கள் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலுக்குச் செவிகொடுக்கவில்லை. நாங்கள் நரகத்துக்கு வந்ததற்குக் காரணம் அதுதான். "மோட்ச முத்தர்களைப் பார்த்து" நீங்கள் எப்படி மோட்சத்துக்கு வந்தீர்கள் என்று கேட்டால், அவர்



கள் என்ன மறுமொழி சொல்லுவார்கள்? நாங்கள் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலுக்கு செவிகொடுத்தோம். அதுதான். நாங்கள் மோட்சகரை சேருவதற்குக் காரணம்.

"இஸ்பிரீத்துசாந்துவானவர் நம்முடைய ஆத்துமத்தில் இல்லாவிட்டால் நமதாத்துமம் ஜில் என்று குளிர்ந்துபோகிறது. அவரிருந்தால் தேவ சிநேக அக்கினி கிளம்பி இருதயம் உஷ்ணமாயிருக்கும். ஆகையால் நமது பத்தி எப்போ குறைகிறதென்று கண்டோமோ உடனே இஸ்பிரீத்துசாந்துவைக் குறித்து ஓர் நவநாள் செய்யவேண்டும்.

பிரியமான பிள்ளைகளே! இஸ்பிரீத்துசாந்து நம்மை மோட்சத்துக்கு இட்டுக்கொண்டுபோகிற வழிகாட்டி. வேகமாய்ப் பறந்தோடும் குதிரை பூட்டிய அழகான ஓர் வண்டியில் உன்னை யேற்றிக்கொண்டு பாரீஸ் நகரத்துக்கு இட்டுக்கொண்டுபோக ஒருவன் தயாராயிருக்கிறானென்று வைத்துக்கொள்ளுவோம். நீ செய்யவேண்டியதெல்லாம், சரி, நான் வருகிறேன், என்று வண்டிக்குள் ஏறவேண்டியது மாத்திரம் வேறொன்றுமில்லை. இது கஷ்டமா? இல்லை. இப்படிப்போல இஸ்பிரீத்துசாந்து நம்மை மோட்சத்துக்கு இட்டுக்கொண்டுபோக ஆசைப்

படுகிறார். நாம் செய்யவேண்டியதெல்லாம் கூடி- “ சரி, நான் உம்மோடு வருகிறேன். என்னைக் கூட்டிக்கொண்டுபோங்கள் ” என்று சொல்லி அவருடைய வழிதல் பிரகாரம் நடக்கவேண்டும்.

“ இரண்டு வயசுக் குழந்தையைத் தாயானவள் எப்படித் தன் கையைக்கொடுத்து நடக்கும்படி செய்கிறாளோ அப்படியே பரிசுத்த இஸ்பிரீத்துவும் நம்மை நடத்துகிறார். அவரில்லாமல் தேவதிரவிய அநுமானங்களின் பலன் ஒன்றுமில்லை. இதற்காகவே நம்முடைய திவ்விய இரட்சகர் தாம் மரிக்கிறதற்கு முந்தினநாள் அப்போஸ்தலரைப் பார்த்து: “ நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கின்றது. எனெனில் நான் போகாதிருந்தால் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரமாட்டார். நான் போவேனாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன் ” என்றார்.

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே, தேவரீர் எழுந்தருளி வாரும், பரலோகத்திலே நின்று உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும் என்று அடிக்கடி வேண்டிக்கொள்வோமாக.

சிலுவை :—நம்முடைய பங்குக்கருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு வாலிபப்பையனி



ருந்தான். அவனுக்கு சர்வாங்கமும் சிரங்கு புறப்பட்டிருந்தபடியால் சொல்லொண்ணாத வாதனை அனுபவித்துக்கொண்டு படுத்த கிடையிலே கிடந்தான். நான் அவனைப் பார்க்கப் போயிருந்தபோது “ குழந்தாய்! நீ வெகுவாய் வருத்தப்படுகிறாயல்லவா ? ” என்று வினவ, அந்தச் சிறு பையன் சொல்வான் : “ இல்லை சுவாமி. நேற்று நான் பட்ட வருத்தம் கடந்து போயிற்று. இன்றைக்கு நான் படுகிற வருத்தம் நாளைக்குக் கடந்துபோய்விடும். ” சீக்கிரம் சொஸ்தப்படுவதற்கு நீ ஆசைப்படுகிறாயல்லவா வென்று நான் கேட்டேன். அதற்கு அவன் “ இல்லை சுவாமி. நான் வியாதிப்படுமுன்னே துஷ்டப்பயலாயிருந்தேன். சுகமானால் சிலவேளை திரும்பவும் துஷ்டத்தனம் செய்யக் கூடும். இப்போதிருக்கிற ஸ்திதியே எனக்கு நலம் ” என்று பதிலுரைத்தான்.

இச்சிறுவனுடைய நடத்தை எத்தனையோ பேரை வெட்கத்துக்கு உள்ளாக்குகிறது! நமது நல்ல ஆண்டவர் நமக்குச் சிலுவை அனுப்பினால் முறையிடுகிறோம், முணுமுணுக்கிறோம், கோபப்படுகிறோம். இரத்தினகசித மெத்தையில் உல்லாசமாய்ப் படுத்துக்கொண்டு நேரே மோட்சத்துக்குப்போக முடியாது. மோட்சத்

தின் பாடுகள், சிலுவை, வருத்தம், சோதனை, துன்பம், இவைகளெல்லாம் நம்மை மோட்சத்துக்கு இட்டுக்கொண்டுபோகிற சிலுவைகள். என் அன்பான பிள்ளைகளே! இந்தச் சிலுவைகளெல்லாம் சீக்கிரம் முடிந்துபோகும். நமக்கு முன்னே பரகதியில் வந்து சேர்ந்திருக்கிற அர்ச்சியசிஷ்டவர்களைப் பாருங்கள். பட்ட வருத்தங்களுக்கெல்லாம் இப்போது அவர்கள் நித்திய பேரின்ப பாக்கியத்தை அனுபவிக்கிறார்கள்.

“நாம் ஒவ்வொருவரும் சர்வேசுரனுக்காக இரத்தத்தைச் சிந்தி வேத சாட்சிகளாய் மரிக்கவேணுமென்று அவர் நம்மைக் கட்டாயப்படுத்துகிறதில்லை. ஆனால் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய மனதை ஒறுத்து இருதயத்தைப் பலியாக ஒப்புக்கொடுக்க வேணுமென்று அவர் ஆசைப்படுகிறார். அதற்கு நாம் செய்ய வேண்டியதென்ன? நமக்கு முன்னே சிலுவையைத் தூக்கிக்கொண்டுபோனவரைப் பின்பற்றக் கடவோம்.

“நெப்போலியனுடைய போர்வீரர்கள் செய்ததை நாமும் செய்யவேண்டும். எதிராளிக்கு முன்னாலிருந்த ஓர் பாலத்தை இவர்கள் கடக்கவேண்டியிருந்தது. ஒருவனும் அங்



கே போகத் துணியவில்லை. உடனே இரணசூரனான நெப்போலியன் கொடியைத் தன்கையில் பிடித்துக்கொண்டு முதல் முதல் பாலத்தை நோக்கிச் சென்றான். அந்தக்ஷணமே அவனுடைய போர்வீரர்களனைவரும் தைரியங்கொண்டு அவனைப் பின்தொடர்ந்தார்கள். அதுபோலவே நம்முடைய தளகர்த்தராகிய கிறீஸ்துநாதர் நமக்குமுன்னே சிலுவையாகிய வெற்றிக்கொடியைப் பிடித்துக்கொண்டு போயிருக்கிறார். அவரைப் பின்தொடர்வதற்கு நாம் தாமதிக்கலாமா?

ஓர் போர்வீரன் எனக்குச் சொன்னதாவது: சுவாமி, ஒருதடவை சுமார் அரைமணிநேரம் இரணகளத்தில் பிணங்களின்மேல் நடந்துபோனேன்—கால்வைக்க வேறிடம் கிடையாது.—தரையெல்லாம் இரத்தமாயிருந்தது. அருமைப் பிள்ளைகளே! நம்முடைய ஜீவியமாகிய பிரயாணத்தில் நாமும் துன்பதுரிதங்கள்மேல் இடறிவிடாமல் நடந்துபோனால்மாத்திரம் மோக்ஷ வீட்டில் ஜெயசீலராய்ப் போய்ச்சேரலாம்.

“சிலுவையானது பூமிக்கும் மோக்ஷத்துக்கும் நடுவே சார்த்தப்பட்டிருக்கிற ஏணி. ஆகையால் பரலோக இராச்சியத்துக்குப்போக வேண்டுமானால் இந்த ஏணிமேல் ஏறிப்போக வேண்டும்.

"நாம் துன்பம் அனுபவிக்கும்போது சர்வேசுரன் நம்மைப் பார்க்கிறார் என்கிற எண்ணம் எவ்வளவோ ஆறுதலுக்குரியது! இரவில் நித்திரை செய்யப்போகையில் நாம் நம்மைப்பார்த்து: "என் ஆத்துமமே! இன்றைக்கு இரண்டு மூன்று மணி நேரம் நேசநாதருடைய பாவனையாக சிலுவை சுமந்தாய். அவரைப்போல் அவமானப்பட்டாய் — இதற்கெல்லாம் உனக்கு நித்திய சம்பாவனை உண்டென்று சொல்லக்கூடுமானால் எவ்வளவோ மனோரஞ்சிதமாயிருக்கும்—சிலுவையிலேயே ஜீவிய முழுதும் ஜீவித்தவன் மரிக்கும்வேளையில் அனுபவிக்கும் மனோகரத்தை வார்த்தையினால் வரையறுத்துச்சொல்ல முடியாது. "என் அருமைப் பிள்ளைகளே! நாம் உயிரோடிருக்கும் வரையில் வேறும் வேண்டாம் துன்பம் அனுபவித்துத்தீர வேண்டும். சிலர் நல்ல கள்ளனைப் போலவும், வேறு சிலர் கெட்ட கள்ளனைப் போலவும் துன்பத்தைக் கைமேற்றுக்கொள்ளுகிறார்கள். இருதிறத்தாரும் வருத்தம் அனுபவிக்கிறார்களென்பது நிச்சயம். ஆனால் அவர்களிருவருக்கும் எத்தனை பாரதூர வித்தியாசம்! நல்ல கள்ளன் நமதன்பான இரட்சகருடைய வாயிலிருந்து "இன்றைக்கு என்னோடு பரகதியிலிருப்பாய்" என்



கிற ஆறுதலான வார்த்தைகளைக் கேட்கப் பாக்கியம் பெற்றான். மற்றவனோ, தேவதூஷணம் கக்கி; அவநம்பிக்கைப்பட்டு, தன்னைத்தானே சபித்துக்கொண்டு அவலமாய்ச் செத்தான்.

"துன்ப துரிதங்களை அநுபவிக்கிறது இரண்டு விதம். சிநேகத்துடன் அநுபவிக்கிறது ஒன்று. சிநேகமில்லாமல் அநுபவிக்கிறது மற்றொன்று. அர்ச்சியசிஷ்டவர்கள் என்ன காரணத்தினால், பொறுமையோடும், சந்தோஷத்தோடும், நிலைமையோடும் சகல இக்கட்டு வருத்தங்களை அநுபவித்தார்கள்—? ஏனென்றால் அவர்கள் சிநேகித்தார்கள். நாம் என்ன முகாந்தரத்தினால் பொறுமைதப்பி, சஞ்சலத்துடன் சிலுவைகளை பெற்றுக்கொள்ளுகிறோம். ஏனென்றால் நாம் சிநேகிக்கிறதில்லை. சர்வேசுரனைச் சிநேகிக்கிறவன் சிலுவையைச் சிநேகியாமலிருப்பது கூடாத காரியம். தேவசிநேகம் நம்முடைய இருதயத்தில் குடிகொண்டிருக்குமாகில் நமக்காகப் பாடுபட்ட ஆண்டவரைக் குறித்து நாமும் பாடுபடுவோம். ஐயோ! அஞ்ஞானிகளில் எத்தனையோ பேர் நம்மைப் பார்க்கிலும் அதிகம் கஷ்டநஷ்டப்படுகிறார்கள். ஆனால் அப்படி வருத்தப்படுகிறார்களேயல்லாமல் சிலுவையின் ருசியையும், பலனையும் அவர்கள் அடைகிறதில்லை.

"துன்பப்படுகிறதென்றால் மகா வருத்தமா யிருக்கிறதென்று சொல்லுகிறாய். அப்படி யல்ல. அது ஆறுதலும், மதுரமும் நிறைந்த தாயிருக்கிறது. அதற்கு ஒரு காரியம் மகா அவசரம். அதாவது நாம் வருத்தத்தை நேசிக்கவேண்டும். எங்கே நேசமிருக்கிறதோ அங்கே வருத்தமில்லை, வருத்தமிருந்தாலும், வருத்தம் வருத்தமாகத் தோன்றாது.

"என் அருமைப் பிள்ளைகளே! சிலுவையின் பாதையில் முதலில் எடுத்துவைக்கிற அடிதான் அதிக வருத்தமாகக் காணப்படும். சிலுவைக்குப் பயப்படுகிறதே, சிலுவைகளுக்குள் எல்லாம் பெரிய சிலுவை. சிலுவையைத் தூக்க நமக்குத் தைரியமில்லை. அதைவிட்டு விலக வழிதேடுகிறோம். இது மூடத்தனம். ஏனென்றால் நீ எங்கேதான் போனபோதிலும், சிலுவையானது உன்னைக் கட்டிப்பிடித்து அரவணைக்குமென்பது நிச்சயம். அப்படியானால் நாம் ஏன் சிலுவையை நேசிக்கிறதில்லை. சிலுவையைவிட்டு ஓடுகிறவர்களை சிலுவை அதிதுரிதமாய்ப் பின்தொடர்ந்து அதிகப்பாரமாய்த் தாக்குகிறது. நீ புத்திசாலியானால் அர்ச். பெலவேந்திரரைப்போல: சிலுவைக்கு முன் எதிர்கொண்டுபோய் சிலுவையை முத்தி



செய்து சொல்லுவாய்: "ஓ! நல்ல சிலுவையே! வாழ்க. ஓ! பாக்கியம் பெற்ற சிலுவையே! வாழ்க. ஓ! மிகவும் ஆசிக்கத்தக்க சிலுவையே! வாழ்க. இதோ என்னை உன் கரங்களில் ஏற்றுக்கொண்டு, மனுஷர் சமுகத்தினின்று என்னை நீக்கி உன் வழியாய் என்னை இரட்சித்த ஆண்டவர் சமுகம் தூக்கிக்கொண்டு போவாயாக."

"சிலுவை நம்மை ஆண்டவரோடு ஒன்றிக்கச்செய்கிறது, நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது, உலக பாசங்களை அறுத்தெறிகிறது, மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகிறது.

"அர்ச்சியசிஷ்டவர்களைப் பாருங்கள். ஒருவரும் அவர்களை வதைக்காவிட்டால் அவர்களே தங்களை வதைத்துக்கொள்ளுகிறார்கள். ஒரு சந்நியாசியார் ஒருநாள் சர்வேசுரனைப் பார்த்து: "ஆண்டவரே! ஏன் இந்த வீட்டில் என்னை இப்படி எல்லாரும் வதைக்கிறார்கள்" என்று முறையிட்டுச் சொல்ல, சேசுநாதர் அவருக்குக் காண்பித்து: "நான் கல்வாரி மலைமட்டும் ஏறிச் சிலுவையில் அறையப்பட்டேனே— நான் செய்த குற்றம் என்ன?" என்று மறுமொழி சொன்னார். உடனே சந்நியாசியார் தாம் முறையிட்டது தப்பிதமென்று அறிந்து, கண்ணீர்

சிந்தி அழுது சர்வேசுரனிடம் மன்னிப்புக் கேட்டார். அன்று துவக்கி ஒருநாளும் அவன் முறையிடவில்லை.

“நாம் ஒருபோதும் சிலுவையை மறந்துபோகக்கூடாதென்று காட்டும்படி கோவிலின் உச்சியிலும், முச்சந்திகளிலும், உயரமான கட்டுக் கோப்புகளிலும், உலகத்தின் அஷ்டதிக்குகளிலும் சிலுவை நாட்டப்பட்டிருக்கின்றது. சிலுவையில் எல்லாருக்கும் பங்கு இருக்கிறது. சிலுவையில்லாதவன் ஒருவனுமில்லை. சிலுவையை நேசியாதவன் இரட்சண்ணியம் அடைந்தபோதிலும், மோட்ச இராச்சியத்தில் ஓர் சின்ன நக்ஷத்திரத்தைப்போல சற்றே பிரகாசிப்பான். ஆனால் சிலுவையைச் சிநேகித்து சிலுவையை பெற்றுக்கொண்டவர்கள் மகா பிரகாசம் பொருந்திய சூரியனைப்போல பிரகாசிப்பார்கள். சிநேகத்தோடு சிலுவை அநுபவிக்கிறவர்கள் சிலுவையின் பாரத்தைச் சற்றேனும் உணர்கிறதில்லையென்று நான் சொல்லவில்லை: அது எப்படி இருக்கிறதென்றால் ஏராளமான எண்ணெய்யுடன் சற்றுக் காடி கலந்தது போலிருக்கிறது.

“சிலுவையில்லாவிட்டால் நம்முடைய ஆத்துமம் வறண்டுபோகும். சிலுவையிருந்தால் ஆறுதலிருக்கும். அந்த ஆறுதல் மோட்ச



இராச்சியத்தில் அநுபவிக்கப்போகிற பாக்கியத்தின் முன் சுவையாயிருக்கிறது.

“திராட்சப்பழத்தை ஆலையில் போட்டுப் பிழிந்தால் நேர்த்தியான இரசம் புறப்படும். அதுபோல சிலுவை நமதாத்துமத்தை நசுக்கும்போது பரிமளம் வீசும் ஞானரசம் புறப்பட்டு நமதாத்துமத்தைப் பலப்படுத்துகிறது.

“1830-ம் வருஷம் பிரான்சுதேசத்தில் சில இடங்களில் வேதவிரோதிகள் நமது இரட்சண்ணியத்தின் அடையாளமாகிய சிலுவையை முறித்தெறிந்தார்கள். அந்த வருஷம் கூரோதார்ஸ் ஒரு தடவை பிரசங்கிக்கும்போது சொல்வார்: “வேதவிரோதிகள் செய்கிறதெல்லாம்செய்யட்டும்! அவர்களைப் பார்க்கிலும் சிலுவை அதிகப் பலமுள்ளதென்பது சத்தியமல்லவா? எவ்வளவு காலம் அந்த நீசர்கள் சிலுவையை விழத்தாட்டுவார்கள்! தேவகுமாரன் கடைசிநாளில் மேகத்தினின்று இறங்கிவரும்போது கையில் தமது வெற்றிக்கொடியாகிய சிலுவையைப் பிடித்துக்கொண்டிருப்பார். அந்தச் சமயத்தில் எவன் அவர் திருக்கரத்தினின்று சிலுவையைப் பிடுங்கப்போகிறான்?

“1849-ம் வருஷம் பரிசுத்த பிதா 9-ம் பத்திநாதர் உரோமைமா நகரைவிட்டு பரதேசம் போயி

ருக்கும் வேளையில் உரோமையில் நடந்த ஓர் பெரிய புதுமையைக் குறித்து கூரோதார்ஸ் சொன்னதாவது: சேசுநாதர் தமது பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவர் படுகிற வருத்தத்தைத் தாங்கமாட்டாமல், தாமே மோட்சத்திலிருந்து திரும்பவும் இறங்கிவந்து அவருக்கு ஆறுதல் சொன்னார் என்கலாம். சில நாளைக்கு முன் உரோமையில் நடந்த பெரிய புதுமையை நீங்களெல்லாம் கேட்டிருக்கிறீர்களல்லவா? அர்ச். வெரோணிக்கம்மாள் சேசுநாதருடைய திருமுகத்தைத் துடைத்த பரிசுத்த துயிலைக் கோவிலில் வெளியரங்கமாய் ஸ்தாபித்து, கர்தினால்மார்கள் முழங்காலிலிருந்து வேண்டிக்கொண்டிருக்கும்போது, காலா காலத்தினால் மங்கிப் போயிருந்த இரட்சகருடைய திருச்சாயல் மீண்டும் துலாம்பரமாய்க் காணப்பட்டது. சூழநின்றவர்கள் எல்லாரும் இதை கரதலாமலமாய்க் கண்டார்கள். இந்தக் காட்சியினாலும் சேசுநாதருடைய திரு நேத்திரங்களினின்று புறப்பட்ட கண்ணீரினாலும் நமது இரட்சகர் கர்தினால்மார்களைப் பார்த்து: "உங்களுடைய தந்தையும், என் அருமைப் புத்திரனுமாகிய பத்திநாதர் எங்கே?" என்று கேட்டது போலிருந்தது.



"தகப்பன் தன் மகனை இழந்தால் எப்படியோ, புருஷன் பெண்சாதியை இழந்தால் எப்படியோ, அப்படியே சேசுநாதர் தமது பிரதிநிதிக்காகக் கண்ணீர் சிந்துகிறார். அர்ச். பாப்பானவருக்கு ஆறுதலாக ஓர் பெரிய புதுமை நடந்திருக்கிறது. அப்படியானால் நம்முடைய ஞானத்தகப்பன் எவ்வளவோ பரிசுத்தராயிருக்கவேண்டும்! பரிசுத்த பிதாவுக்காகக் கொடுக்கிற காணிக்கை சர்வேசுரனுக்கு அதிகப் பிரியமென்று சொல்லத் தேவையில்லை. சேசுநாதர் தமது பிரதிநிதியைத் தமது கண்விழியைப்போல காப்பாற்றி வருகிறார். அர்ச். பாப்பானவருக்காக வேண்டிக்கொள்ளுகிறது மகா நல்ல காரியம். திருமுகத்துயிலில் காணப்பட்ட கண்ணீர்கள் இதற்குத் திறம்பாத அத்தாட்சி.

சோதனை: "நாம் கண்டு பாவிக்கவேண்டிய மேல்வரிச் சட்டம் சேசுநாதரே. அவருடைய அடிச்சுவடுகளின்மேல் நாம் நடந்துபோகப் பிரயாசப்படவேண்டும். நமக்கு முன்மாதிரிகையாயிருக்கும்படியாகவே அவர் சோதிக்கப்படச் சித்தமானார். "தேவகுமாரன் சோதிக்கப்பட்டிருக்கும்போது அற்ப மனுஷர்களாகிய நாம் சோதனைப் படுகிறது ஆச்சரியமல்லவே.

"அஞ்சா மனத்துணிவுள்ள போர்வீரன் போர் முனையில் நிற்கப் பயப்படமாட்டான். அது போலவே நல்ல கிறீஸ்துவர்கள் சோதனையாகிற யுத்தத்துக்கு அஞ்சவொண்ணாது. போர்ச் சேவகர்கள் கோட்டைத் தாணையத்திலிருக்கும் வரையில் அவர்களுடைய தாரதம்மியம் சரியாய் விளங்காது. ஆனால் யுத்த சன்னத்தனாய் போர்புரியும் வேளையில் எவன் சுத்த வீரன் என்றும், எவன் வீரமற்ற கோழையென்றும் வெட்டென விளங்கும்.

"சோதனைகளுக்குள் எல்லாம் பெரிய சோதனை, சோதனையில்லாமலிருப்பதே. சோதனை காலம் பாக்கியமான காலம். மோக்ஷ இராட்சியமாகிய களஞ்சியத்துக்கு நாம் கொண்டுபோக வேண்டியிருக்கிற தானியங்களைச் சேகரிக்கிற அறுப்புக்காலம்.

"தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்கிறவர்களையும், பாவத்தை விட்டு நல்வழியில் நடக்க ஆசைப்படுகிறவர்களையும், பசாசு அதிகமாய்ச் சோதிக்கும். பாவச் சேற்றில் உழன்று உருண்டு புரளுகிறவர்களை அது அப்படி வருந்தி சோதிக்கிறதில்லை. ஏனென்றால் அப்போர்ப்பட்டவர்கள் பசாசின் ஆதிக்கத்துக்குட்பட்டு அதற்குத் தொண்டுபுரிகிற அடிமைகள்.



"ஒரு தடவை ஒரு அர்ச்சியசிஷ்டவர் ஒரு மடத்துப்பக்கம் போகும்போது கணக்கற்றப் பசாசுக்கள் அங்குள்ள சந்நியாசிகளைச் சோதனையில் உட்படுத்தப் பிரயாசப்படுவதாயும், அந்தப் பிரயாசையெல்லாம் வீணாய்ப் போனதாகவும் கண்டார். அங்கிருந்து ஒரு பெரிய நகரத்துக்குப் போகும்போது அந்த நகர் வாசலில் ஒரே ஒரு பசாசு மாத்திரம் கையைக் கட்டிக் கொண்டு சுகமாய் உட்கார்ந்திருந்தது. இதைக் கண்ணுற்ற அர்ச்சியசிஷ்டவர் பசாசை நோக்கி: "என்ன! இவ்வளவு பெரிய நகரத்துக்கு நீ ஒருத்தன் மாத்திரம் போதுமா? கொஞ்ச சந்நியாசிகளிருக்கிற அந்த மடத்துக்கு ஏன் அத்தனை பேர்?" அப்போது பசாசு சொன்ன மாறுத்தாரமாவது: "இம் மாநகருக்கு நான் ஒருவனே போதும். ஏனென்றால் இங்குள்ளவர்களெல்லாம் போசனப்பிரியம், காமம், குரோதம் என்கிற அக்கினியினால் எரிகிறார்கள். நான் சமயாசமயம் நெருப்பைத் தூண்டிவிடுகிறாப்போல இவர்களைத் தூண்டிவிட வேண்டியது. மற்றதெல்லாம் அவர்களே செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் அந்த சந்நியாசிகளைக் கெடுக்கிறதென்றால் மகா மகா கஷ்டம். ஒரு சேனைப் பசாசு முதலாய் அவர்களைக் கெடுக்கப் போ

தானு. இப்போதிருக்கிறவர்கள் பட்ட பிரயாசமெல்லாம் வீணாய்ப் போயிற்று. அவர்களுக்கு உதவியாக இன்னம் அநேகம் பசாசுக்கள் அந்த மடத்துக்குப் போய் சந்நியாசிகள் தங்கள் தவத்தை ஒழிக்கவும், சபை ஒழுங்குகளை மீறி நடக்கவும் பிரயத்தனஞ் செய்யப் போகிறார்கள்”

“வழக்கமாய் பசாசு வருத்துவிக்கிற சோதனைகள் இரண்டு. அவைகள் என்னவென்றால், அகங்காரம், மோகம் என்பதாம். மோக பாவத்தில் விழாமலிருப்பதற்கு சுளுவான வழி, ஒருபோதும் சோம்பலாயிராமல் எப்போதும் ஓர் வேலையைச் செய்துகொண்டிருப்பதே. சொகுசாய்ச் சாப்பிட்டு வீணில் நேரத்தைக் கழிக்கிறவர்கள் எளிதில் பெரிய பாவத்தில் விழுவார்கள்.

“சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் நாமிருக்கிறோம், சர்வேசுரன் எப்போதும் எவ்விடத்திலும் நம்மைப் பார்க்கிறார், என்கிற சத்தியங்கள் நம்முடைய இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்குமேயாகில், நாம் பாவத்தைக் கட்டிக்கொள்ளுவது மகா அருமையாயிருக்கும்.

“சோதனை வேளையில் நம்முடைய ஞானஸ்நான வார்த்தைப்பாடுகளைப் புதுப்பிக்கிறது



மகா சுகிர்த வழக்கம். பிரியமான பிள்ளைகளே! நாம் இப்போது சொல்லப்போகிறதைச் சற்றுக் கவனமாய் உற்றுக் கேளுங்கள். சோதனைப் படும்போது, அந்த சோதனைக்கு எதிரான புண்ணியத்தை சர்வேசுரன் நமக்குக் கொடுக்கும்படி, அவரைக் கெஞ்சிக் கேட்கவேணும். அகங்காரம் என்கிற சோதனை உனக்கு அடிக்கடி வருகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அந்த சோதனையை ஜெயிப்பதினால் விளையும் பலனை முன்னிட்டு ஆண்டவர் தாழ்ச்சியென்கிற புண்ணியத்தைத் தரும்படி கேட்க வேண்டும். அசுத்த நினைவுகள் வந்தால் பரிசுத்ததனம் என்கிற புண்ணியத்தைக் கொடுக்கும்படி சுவாமியைப் பார்த்து மன்றாடு. பிறர் மேல் வீண் சந்தேகம் வருகிறதாயிருந்தால் பிறர் சிநேகம் என்கிற புண்ணியத்தை அளிக்கும்படி வேண்டிக்கொள். அல்லது பாவிகள் மனந்திரும்ப வேண்டுமென்கிற கருத்தோடு சோதனையை வெறுத்துத் தள்ளு. இப்படிச் செய்வது பசாசுக்கு மகா எரிச்சலைக் கொடுக்கும். ஏனென்றால் நாம் இவ்வாறு நடந்துகொள்ளும்போது பசாசின் தலையைக் காலில்வைத்து சவட்டுகிறோம்.

“இவ்வுலகத்தில் சோதனையில்லாத இடம் ஒன்றுமில்லை. எந்த ஒதுக்கிடத்துக்குத்தான்

போனபோதிலும் பசாசு நம்மைப் பின்தொடர்ந்து, நம்மைக் கெடுத்து நரகத்துக்கு இழுத்துக்கொண்டுபோக தன்னாலான பிரயாசமெல்லாம் படும் என்பது தேற்றம். அதற்கு வேறுவுவிலில்லை. ஆனால் நமக்கு மனசுண்டானால் சர்வேசுரனுடைய உதவியைக் கொண்டு எவ்விடத்திலும் எப்போதும் பசாசை வெல்லக் கூடும்.

"சர்வேசுரன் எப்போதும் நமது சமீபத்திலிருக்கிறார். நாம் பசாசோடு போராடுகிறதைப்பார்க்கிறார், நமக்குத் தைரியத்தை வருவிக்கிறார். நம்முடைய காவல் சம்மனசானவரும் நமது பக்கத்திலிருந்துகொண்டு நாம் ஜெயிக்கிற ஒவ்வொரு ஜெயத்தையும் நுணுநுணுக்கமாய்க் குறித்துக் கொள்ளுகிறார்.

"பிரியமான பிள்ளைகளே! காலையில் எழுந்திருக்கும்போது நாம் சொல்லவேண்டியதாவது: "என் ஆத்துமமே! மோட்ச இராச்சியத்தைச் சுதந்தரிக்கும்படி இன்றைக்கு உழைக்கவேண்டும். இராத்திரி வரும்போது நாள்முழுவதும் பட்ட பிரயாசமெல்லாம் முடிந்துவிடும்" இரவில் சொல்ல வேண்டியதாவது: நாளைக்கு சிலவேளை உன்னுடைய தொந்தரை யெல்லாம் முடியக்கூடும்.



"சிலருக்கு ஒரு கடும் வார்த்தை சொன்னால் அல்லது ஒரு சின்ன அவமானம் வந்தால் முகம் சோம்பி, பொறுமை யிழந்து, தைரியமற்று, விருதாவில் வருந்துகிறார்கள். பிள்ளைகளே! தைரியத்தை ஒருபோதும் கைசோரவிடவேண்டாம். தாராள குணத்துடன் வீரியமாய்ப் போராடக்கடவோம். மோட்சத்திலிருக்கும்போது நீங்கள் சொல்லுவீர்கள்: ஓ! பாக்கியமான ஞான யுத்தங்களே! உங்களால் நான் மோட்சத்தில் நித்திய கிரீடத்தை அடையப் பாக்கியம் பெற்றேன்.

"மோட்சத்தில், என் அருமைப் பிள்ளைகளே, சர்வேசுரனை நமது கண்ணால் பார்ப்போம். ஆம். நாம் பார்ப்போம். இதை நீங்கள் ஆராய்ந்து யோசித்துப்பார்த்தீர்களா? பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த ஆண்டவரைப் பார்ப்போம். முகமுகமாய்ப் பார்ப்போம். அவர் நம்மைப் பார்ப்பார். நாம் அவரைப் பார்ப்போம். சுமார் கால்மணி நேரமாக சிநேகத்தினால் கண்ணீர் சிந்திக்கொண்டு, "ஆம், நாம் அவரைப் பார்ப்போம், அவரைப் பார்ப்போம்" என்று பலதடவை திரும்பத் திரும்பச் சொன்னார்."

எங்கள் கடன்காரர்களுக்கு நாங்கள் பொறுக்கு
மாப்போலே எங்கள் கடன்களை எங்களுக்குப்
பொறும்.

"நாம் பிறர் குற்றத்தை மன்னித்தால் சர்வேசுரன் நமது குற்றத்தை மன்னிப்பார். இது தான் அவருடைய சட்டம். அர்ச்சியசிஷ்டவர்களிடத்தில் வெறுப்பு அல்லது பழிவாங்கும் குணம் கிடையவே கிடையாது. பழிவாங்கும் குணமுடையவர்கள் அற்பர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் நல்ல கிறீஸ்துவர்களல்ல.

"எவன் புறத்தியானை வெறுக்கிறானோ அவனை சர்வேசுரன் வெறுக்கிறார். வெறுப்பு ஓர் அம்புக்குச் சமானம். அந்த அம்பை எவன் எய்கிறானோ அவனையே அந்த அம்பு தாக்கும். புறத்தியான் பேரில் வர்மமாயிருக்கிறது சர்வேசுரனுக்கு மகா அருவருப்பான காரியம். சிலர் வர்மத்தினால் புறத்தியானோடு பேசமாட்டார்கள். அவனைக் கண்டாலும் ஏதோ ஓர் பூதத்தைக் கண்டதுபோல விலகி ஓடுவார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் மோட்ச பாதையை விலகி நரக பாதையில் நடக்கிறவர்கள். இவர்கள் மனச்சந்தோஷத்தின் மணத்தை முதலாய் அறியமாட்டார்கள். இவர்கள் மகா நிர்ப்பாக்கியர்கள். ஆனால் மன்னிக்கிறவர்கள் மகா பாக்



கியவான்கள். அவர்கள் இப்பூவுலகிலேதானே மோட்ச இராச்சியத்தின் மதுரத்தைச் சுவை பார்க்கத் துவக்குகிறார்கள்.

"ஒரு சந்நியாசியார் தமது சீவிய காலத்தில் அருந்தபம் புரியாத போதிலும், மரணவேளையில் மனக்கலக்கம் யாதொன்றுமின்றி புன்சிரிப்புக்கொண்டிருப்பதைக் கண்ட அவருடைய சிரேஷ்டர் அவரைப் பார்த்துக் கேட்பார்: "சகோதரரே! நீர் சாகப்போகிறீரே, பயம் ஒன்றுமில்லையா?" அதற்கு அவர் சொன்ன பதில்மொழியாவது: "சுவாமி, நான் என்னுடைய சீவிய காலமுழுவதும் மற்றவர்கள் எனக்குச் செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்தேன். ஆகையால் சர்வேசுரனும் என்னுடைய குற்றங் குறைகளை மன்னிப்பாரென்று நம்பிக்கையாயிருக்கிறேன்."

"ஒருவன்மேல் வெறுப்பு அல்லது பகை உன் ஆத்துமத்தில் கிளம்பும்போது அந்தச் சோதனையை ஜெயிப்பதற்கு உத்தமவழி அவனுக்காக வேண்டிக்கொள்ளுவதே. வெறுப்புக்குரியது இரண்டே இரண்டு காரியம். அவைகள் என்னவென்றால், பாவமும், பசாசுமாம்.

"ஒரு பிரபு காட்டின் வழியாய்ப் போகையில் அவனுடைய சொந்தக்காரன் ஒருவனைக்

கொன்ற கொலைபாதகன் குறுக்கிட்டான். இவனைக் கொல்லவேணுமென்று இந்தப்பிரபு வெகு நாளாய்க் காத்துக்கொண்டிருந்தபடியால், இவனைக் கண்டமாத்திரத்தில் உறையிலிருந்த வாளை உருவி வெட்டப்போனான். அப்போது அவன் "ஐயா பிரபுவே, சர்வேசுரனுடைய சிநேகத்தைக் குறித்து என்னைப் பொறுத்தருளும்" என்று கெஞ்சி மன்றாடினான். அவன் சர்வேசுரனுடைய நாமத்தினால் பொறுதி கேட்டபடியினால் பிரபு மனமிரங்கி வாளை உறையில் போட்டுவிட்டு, "நான் உன்னை மன்னிக்கிறேன்" என்றார். மறுநாள் பிரபு கோவிலுக்குப்போய் அங்கிருந்த பெரிய பாடுபட்ட சுரூபத்துக்கு முன்னால் முழந்தாட்படியிட்டு: "ஆண்டவரே! என்னை மன்னியும், ஏனென்றால் நான் என்னுடைய பகையாளியை மன்னித்தேன்" என்று வேண்டிக்கொண்டமாத்திரத்தில், அவனுடைய மன்றாட்டு கேட்கப்பட்டதென்பதற்கு அடையாளமாக சுரூபம் புதுமையாய்த் தலை சாய்த்தது.

"ஆகையால் எனதருமைப் பிள்ளைகளே! பொறுங்கள் பொறுக்கப்படும். சர்வேசுரன் நம்முடைய கணக்கற்ற பாவங்களையெல்லாம் பொறுக்கிறார் அல்லவா? அர்ச்சியசிஷ்டவர்கள்



தங்களைக் கொல்ல நினைத்தவர்களுக்கு முதலாய் மன்னிப்பு அளித்தார்களல்லவா? அப்படியானால் நாம் அற்பசொற்பக் குற்றங்களை மன்னிக்காமலிருப்பது நியாயமா?

"பிள்ளைகளே! ஒருவர் ஒருவர் குற்றத்தைச் சகித்துக்கொள்ளுங்கள். குற்றமில்லாதவர்கள் ஒருவருமில்லை. வீடுகளில் குடும்பங்களில் பள்ளிக்கூடங்களில் மடங்களில் சமாதானம் குடிகொண்டிருக்க வேணுமானால், ஒருவர் மற்றொருவருடைய குற்றங்குறைகளைப் பொறுத்துக்கொள்ளுங்கள்.

## உலக செல்வத்தின் அற்பத்தனம்.

"பிரியமான பிள்ளைகளே! இவ்வுலகத்தில் நிலைமையானது ஒன்றுமில்லை. எல்லாம் கடந்துபோகிறது. பூமியை ஆண்டுவந்த மண்டலேஸ்பரர்களும், சக்கரவர்த்திகளும், மகிமைப்பட்டம் வகித்துவந்த இராஜாக்களும், பிரபுக்களும், குபேரசம்பத்துள்ள துரைகளும் துரைசாணிகளும், எல்லாரும் மறைந்து நித்தியம் என்கிற ஆழமறியாத பாதாளத்தில் விழுகிறார்கள்.

"நாம் பரதேசிகள். இவ்வுலகம் நம்முடைய சுயதேசமல்ல. நம்முடைய மெய்யான சுயராட்சியம் சகல சம்பத்துக்களும் நிறைந்த மோட்ச இராட்சியம். அர்ச்சியசிஷ்டவர்களுடைய நடக்

கையைப் பாருங்கள். அவர்களுடைய எண்ணமும் கருத்தும் சந்ததம் பரலோகத்தை நாடியதாகவேயிருக்கின்றன. அவர்கள் உலகத்தையும், உலகத்தின் சுகசெல்வங்களையும் வெறுத்துத் துவேஷித்துக் காலால் மிதிப்பதற்குக் காரணம் இதுவே.

“திரண்ட ஐஸ்வரியமுள்ள தாய் தந்தையர்களிடம் பிறந்த ஓர் சந்நியாசியிருந்தார். உத்தமராய் நடந்துவந்த இவர் தம்முடைய பெற்றோர் மரித்தவுடனே அவர்களுடைய சொத்துக்களுக்கெல்லாம் சுதந்தரமுடையவரானார். இந்த சமாச்சாரத்தை மடத்துக்குக் கொண்டுவந்தவனை நோக்கி அவர் சொல்லுவார்: “என்னுடைய தாய் தந்தையர் இறந்து எத்தனை நாளாச்சுது! மூன்றுவாரம். சரி. செத்தவன் எவனும் திரவிய சம்பத்துக்களைச் சுதந்தரிக்கலாமா? கூடாது. அப்படியானால் இருபது வருஷத்துக்கு முன்னே இறந்துபோன நான் மூன்றுவாரத்துக்கு முன் இறந்துபோனவர்களுடைய சொத்துக்களைச் சுதந்தரிக்கிறது எப்படி?” என்று சொன்னார். இவர் இவ்வாறு விளம்பினதற்குக் காரணம் என்ன? உலகத்துக்காக ஜீவிக்காமல் மோட்சத்துக்காக மாத்திரம் ஜீவித்ததே இதற்குக் காரணம்.



“எனது அருமைப் பிள்ளைகளே! மோட்சத்துக்கு முன்னால் இந்த உலகம் என்ன? ஒன்றுமில்லை. இந்த உலகத்தில் அநுபவிக்கக்கூடிய சகல பாக்கியங்களும் புகைபோல மறைந்துபோகின்றன. ஆ! மோட்ச பாக்கியத்தை எவ்வாறு விவரித்துச் சொல்லக்கூடும்! மோட்சத்தில் நாம் யாரோடு நித்தியகாலம் பேரின்ப பாக்கியத்தை அநுபவிப்போம்? நம்முடைய நல்ல தகப்பனாகிய சர்வேசுரனோடும், நம்முடைய மூத்த சகோதரராகிய கிறீஸ்துநாதரோடும், நம்முடைய அன்பான தாயாகிய கன்னிமரியாயியோடும், நம்முடைய சிநேகிதர்களாகிய சம்மனசுக்கள் அர்ச்சியசிஷ்டவர்களோடும், வாக்குக்கெட்டாத ஆனந்த சந்தோஷத்தை அநுபவிப்போம். இது எவ்வளவோ ஆறுதலான நினைவு. எனதருமைப் பிள்ளைகளே! இவ்வுலக செல்வத்தின் அற்பத்தனத்தை அறிய வேணுமானால், மோட்சத்தை நினைவுகூறுங்கள்.

### அவர் ஆத்துமாக்களை நடத்தினவிதம்.

முத். கூரேதார்ஸின் ஆலோசனையைக் கேட்கும்படியாக ஆர்ஸ் ஊருக்கு வந்தவர்களின் தொகை இம்மாத்திரமென்று சொல்லுந் தன்மையல்ல. இதுதவிர அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்கும்படியாக அவருக்கு எழுதின

கடிதங்களுக்கும் கணக்கில்லை. அவர் கொடுத்த நல்ல ஆலோசனைகளினாலும், ஆத்துமாக்களை நடத்தின விதத்தினாலும், செய்த நன்மை எம் மாத்திரமென்று வரையறுத்துச்சொல்ல நம்மால் இயலாது."

## 18-ம் அதிகாரம்.

### அவர் செய்த பற்பல புதுமைகள்.

புதுமை செய்யும் வரம் முத். கூரோதார்ஸுக்கு சர்வேசுரனால் அளிக்கப்பட்டிருந்ததென்று இச்சரித்திரத்தில் பற்பல இடங்களில் சொல்லிக்காட்டிய வர்த்தமானங்களைக் கொண்டு கண்கூடாய்க் கண்டு கொள்ளலாம். ஆயினும் சங். மொனேன் எழுதிவைத்த அற்புதங்களில் சிலவற்றையென்கிலும் எடுத்துரையாமலிருப்பது ஓர் பெருங் குறையென்றெண்ணி, அவைகளில் சிலதுகளை இங்கே எடுத்துக் காட்டுகிறோம்.

1. கத்தரீன் என்பவள் தன் கண்ணால் கண்ட காட்சி பின் வருவாறு: தர்ம சாலையை நடத்திவந்த எங்களுக்குள் ஒருத்தி கடுங் காய்ச்சலினால் சாகக் கிடந்தாள். கட்புலனும் செவிப்புலனும் இழந்து, உயிரற்ற பாவையாய் அவஸ்தையாய்க் கிடக்கிற சமயத்தில், அவள் கையில் மந்திரித்த ஓர் மெழுகுவத்தியைக் கொடுத்து, நாங்கள் படுக்கையைச்சுற்றி முழங்

காலிலிருந்து ஆத்துமம் கேவும்போது சொல்லத்தகும் ஜெபத்தைச் சொல்லிக்கொண்டிருந்தோம். இப்படி வேண்டிக்கொண்டிருக்கும்போது, சடுதியில் வியாதிக்காரி கண்ணைத் திறந்து "நான் குணமானேன்" என்று உரத்த சப்தத்துடன் கூவினாள். அவளருகாமையில் மெழுகுவத்தி யெரிவதைக் கண்ணுற்று, இது என்னத்துக்கு என்று கேட்க, "அவஸ்தையாயிருக்கிற ஆத்துமாக்களுக்காகச் சொல்லத்தகும் ஜெபத்தை உனக்காக நம்முடைய பங்கு சுவாமி சொல்லிக்கொண்டிருந்தார்" என்றோம். சாகக்கிடந்தவள் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்திருந்தாள். உடனே வைத்தியனை அழைப்பித்துக் காண்பிக்க, அவர் வியாதி முற்றிலும் குணமாய்ப்போனதென்றும், இது ஒரு பெரிய புதுமையென்றும் தீர்மானித்தார். கூரேதார்ஸ் இதற்கு முந்தின தினம் சொன்னதாவது: "அர்ச். பிலோமினம்மாளைக் கோபிக்கலாமாவென்று எனக்கு எண்ணம் வந்தது. அந்த அர்ச்சியசிஷ்டவள் பேரால் நீர் தேவாலயம் கட்டியிருக்கிறோம். நம்முடைய தர்மசாலை உபகாரிக்கு ஆரோக்கியம் கொடுக்காமலிருப்பது எப்படி?" இப்பேர்ப்பட்ட பிள்ளைக்குரிய மன்றாட்டை அர்ச். பிலோமினம்மாள் பிறக்கணிப்பது கூடாத காரியம்.



2. ஓர் ஏழைப் பெண் பிள்ளையுடைய கைக்குழந்தைக்குத் தலையில் ஓர் பெரிய காயமிருந்தது. தாயானவள், சங். வியான்னியுடைய பழைய தொப்பி ஒன்றை எங்களிடம் வாங்கிக்கொண்டு போய், பிள்ளையின் தலைமேல் போட்டுத் தனக்குள்ளே சொல்லுவாள்: "கூரேதார்ஸ் பெரிய அர்ச்சியசிஷ்டவர். என்னிடத்தில் மெய்யான விசுவாசமிருந்தால் என் பிள்ளை குணமாகும்."

அன்று சாயங்காலம் இரணத்தைச் சுத்தஞ்செய்து மருந்து கட்டப்போகும்போது, அவளுடைய ஆச்சரியத்தை என்னென்று சொல்ல? காலையில், பார்க்க அருவருப்பாயிருந்த இரணம் சாயங்காலம் பூரணமாய்ச் சுகப்பட்டிருந்தால் அவள் ஆச்சரியப்படுவதற்குக் கேட்பானேன்?

3. கின்னாரம் வாசிக்கிற ஒரு எளிய மனிதனுக்குக் கால் வழங்காத சப்பாணிப் பிள்ளை ஒன்றிருந்தது. இவன் கூரேதார்ஸிடம் வந்து பிள்ளையைக் குணப்படுத்த வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டான். அதற்கு அவர், முதல் முதல் அவனைப் பாவசங்கீர்த்தனஞ் செய்யவேண்டுமென்று சொன்னார். இது அவனுக்கு இஷ்டமில்லை. ஏனெனில் பாவசங்கீர்த்தனம் பண்ணினால், கூரேதார்ஸ் அவனை இனிமேல் நடனங்

கள் நடக்கிற இடங்களில் கின்னாரம் வாசிக்கப் போகாதபடி தடை செய்வாரென்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் பிள்ளையைக் குணமாக்க வேணுமென்கிற பேராவல் அவனிடத்திலிருந்தபடியால் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து, வீட்டுக்குப் போனவுடனே கின்னாரத்தைத் துண்டு துண்டாய் உடைத்து நெருப்பில் எறிந்துபோட்டான். அச்சமயத்தில் சப்பாணியாயிருந்த பிள்ளை சரேலென்று எழுந்து, குதித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டு "நான் சௌக்கியமானேன்" என்று கூவிச் சொன்னது. இந்த அற்புதத்தினால் தாய்க்கும் தகப்பனுக்கும் உண்டான சந்தோஷம் இம்மாத்திரமென்று விவரித்துச் சொல்லத் தேவையில்லை.

4. தாயிழந்துபோன ஓர் போர்ச் சேவகனுக்கு ஆறு வயசுக் குழந்தை ஒன்றிருந்தது. ஐயோ! பாவம்! அந்தக் குழந்தையோ இருகால் நொண்டி. தகப்பன் தன் பிள்ளையோடு ஆர்ஸ் ஊருக்குத் திருயாத்திரை செய்ய யோசித்து, மூன்று நாள் ரஜா பெற்றுக்கொண்டு லயன்ஸ் பட்டணத்திலிருந்து வண்டி யேறும்படியாக அங்கே வந்தான். நொண்டிப் பையனைத் தூக்கிக்கொண்டு வண்டிக்காகக் காத்துக் கொண்டிருந்த போர்ச்சேவகனைக், கண்ணுற்ற



வர்கள் அவனை நோக்கி பிள்ளையை எங்கே கொண்டுபோகிறாயென்று கேட்க, அவன் கூரோதார்விடம் கொண்டுபோகிறதாகச் சொன்னான். இதைக்கேட்டு அவர்கள் அவனை ஏளனம் பண்ணி, "என்ன பைத்தியக்காரா, கூரோதார்ஸ் பெரிய வைத்தியனென்று எண்ணிக்கொண்டாயா? பிள்ளையை வைத்தியசாலைக்குக் கொண்டு போகிறதற்குப் பதிலாய் ஆர்ஸ் ஊருக்குப் போகிறது என்ன மதியீனம்" என்று சொன்னார்கள்.

ஆயினும் இந்த நல்ல சேவகன் விசுவாசம் தளராமல், பிள்ளையோடு கூரோதார்ஸ் பாதத்தில் வந்து விழுந்து, எப்படியாகிலும் தன் பிள்ளையைச் சௌக்கியப்படுத்த வேண்டுமென்று பஞ்சரித்துக் கேட்டான். அதற்குப் பிரத்தியுத்தாரமாக கூரோதார்ஸ்: "மித்திரனே! உன் பிள்ளை குணமடையும்" என்று சொன்னார். இந்த வார்த்தைகள் அவருடைய வாயினின்று புறப்பட்ட மாத்திரத்தில், இதுவரையில் நொண்டியாயிருந்த பையன் நட்டமே நின்றான். பிறகு யாதொரு பிரயாசையின்றி நன்றாய் நடக்கத் துவக்கினான்.

5. 1857-௵ பெப்ரவரி-௴ மேலே சொன்ன புதுமையைப்போல வேறொரு பிரபலியமான புதுமை நடந்தது.

ஓர் ஏழைப் பெண்பிள்ளை, எட்டு வயசுப் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு ஆர்ஸ் ஊருக்கு வந்தாள். இந்தப் பிள்ளைக்குச் சற்றேனும்



நடக்க சக்தியில்லை. கூரேதார்ஸ் தாயையும் பிள்ளையையும், பலதடவை கண்டு அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொன்னபோதிலும், பிள்ளை குணமடையவில்லை. இப்படியிருக்கும்போது ஒரு நாள் சாயரட்சை பிள்ளை தாயைப்பார்த்து சொன்னதாவது: "அம்மா, அம்மா, எனக்கு ஒரு ஜோடி சப்பாத்து வாங்கிக் கொடுங்கள். நாளைக்கு நான் நடப்பேனென்று பங்குசுவாமி எனக்குச் சொன்னார்."

கூரேதார்ஸ் இந்தப் பிள்ளைக்கு இப்படி சொன்னாரோ, அல்லது அவருடைய கிருபா நோக்கத்



தைக்கொண்டு யூகித்துக்கொண்டதோ, தெரியாது.

என்னமாயிருந்தபோதிலும் பிள்ளை கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிரகாரம் ஒரு ஜோடி சப்பாத்து வாங்கிக்கொண்டு, மறுநாள் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு கோவிலுக்குப் போனாள்.

கோவிலில் நுழைந்தவுடனே, இதுமட்டும் கால் வழங்காத பையன், முசல்குட்டிபோல் துள்ளிக்குதித்து, "நான் சௌக்கியமானேன், நான் சௌக்கியமானேன்" என்று சொல்லிக்கொண்டு குடுகுடுவென்று ஓடினான். இதைக் கண்ணுற்ற தாயானவள், இருதயம் பாரித்து, பூரித்து, அகமகிழ்ந்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். இச்சமயத்தில் கூரேதார்ஸ் திவ்விய பலிப்பூசை செய்யத்தக்கதாக பூசை ஆயத்தம் போட்டுக்கொண்டிருந்தார். தாயானவள் தன் நன்றியறிதலைக் காண்பிக்கும்படி தட்சணமே அவர் பாதத்தில் போய் விழலாமென்றால், அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. பூசை முடிந்ததும் கோவிலிலிருந்த ஜனங்களெல்லாம் அவரண்டை குணமடைந்த பையனோடு போனபோது, அவர் தாயையும், பிள்ளையையும் ஆசீர்வதித்தார். அதன் பின்னர் அர்ச். பிலோமி

னம்மாளைப்பார்த்து: "என்ன! அர்ச். பிலோமினம்மாளே! இந்தப் பையனை நீங்கள் வீட்டிலல்லோ குணமாக்கி யிருக்கவேண்டும்" என்று தாழ்ச்சியினால் சொன்னார்.

அர்ச். தோமாஸ் என்னும் வேதவிற்பன்னர் சொல்லும் வண்ணம் "ஓர் பாவி மனந்திரும்பி நீதிமானாவது சர்வேசுரன் செய்கிற கிரியைகளுக்குள் உத்தமமான கிரிகை." செத்துக்கிடக்கிற பிணத்துக்கு உயிர் வருத்துவிக்கிறதைக் காட்டிலும், தேவ இஷ்டப்பிரசாதத்தை யிழந்து உயிரில்லாமல் கிடக்கிற ஆத்துமத்துக்கு, தேவஇஷ்டப்பிரசாதத்தை மீண்டும் கொடுத்து உயிர்ப்பிப்பது அதிகப் பெரிய புதுமையென்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு தடவை கூரோதார்ஸ் சொன்னதாவது: ஆர்ஸ் ஊரில் வந்து இரட்சண்யம் அடைந்த பாவிகளின் தொகை இம்மாத்திரமென்று இவ்வுலகத்தில் அறிவது கூடாத காரியம். மறுஉலகத்தில் மாத்திரம் இது தெரியவரும். கல்வி சாஸ்திரம் அறியாத ஏழைக்குருவாகிய என்னை, நல்ல ஆண்டவர் தமது எத்தனமாகத் தெரிந்துகொண்டு இது காரியத்தை நிறைவேற்றினார். என்னைப்பார்க்கிலும் மடமையுள்ள வேறொரு குருவானவரிருந்தால் சர்வேசுரன் அவரைத் தெரிந்துகொ



ண்டு, அவர் வழியாய், நான் செய்ததைக் காட்டிலும் நூறுமடங்கு மகத்தான காரியங்களைச் செய்திருப்பார் என்பது சகசம்."

பாவிகள் மனந்திரும்புவதற்குக் காரணம் அவர் செய்த புத்தி பிரசங்கங்கள் மாத்திரமல்ல. அவருடைய கண்ணீரினாலும் முகநோக்கத்தினாலும் மனந்திரும்பினவர்கள் அனந்தம் பேர்.

கல்நெஞ்சனான ஒரு பெரிய பாவி இவரிடம் கட்டாயத்தின்பேரில் பாவசங்கீர்த்தனம் பண்ணும்படி வந்து முழங்காலிலிருந்தபோது, இவருடைய இரு கண்களினின்று அருவிபெருகி ஓடியது. இதைக்கண்ட பாவி குருவானவரைப் பார்த்து: "சுவாமி, ஏன் இப்படி கைப்பான கண்ணீர் சிந்துகிறீர்" என்று வினவ, அவர் அவனை மனங்கனிய கண்ணோக்கிச் சொல்வார்: "என் அருமை மித்திரனே! நீ அழாமலிருக்கிறதைப் பார்த்து நான் அழுகிறேன்." இதைக் கேட்டவுடனே பாவியினுடைய கல்நெஞ்சு இளகவே, அவனும் கண்ணீர் மாலை மாலையாய்ச் சிந்தித் தன் பாவத்துக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணினான்.

முத். கூரோதார்ஸின் முகப்பார்வையினாலே அநேகர் மனந்திரும்பி இருக்கிறார்கள். பின்

வரும் சரித்திரம் இதை ஒப்பிப்பதற்கு உச்சித
மான அத்தாட்சி. மனந்திரும்பின பாவியே
தனக்கு நடந்ததைச் சொல்லுகிறான்: “நான்
கிறீஸ்துவ தாய் தகப்பனிடமாய்ப் பிறந்து
வளர்ந்தவன். என் பேர் மாய்வியா. எறக்கு
றைய எனக்குப் பன்னிரண்டு பிராயம் நடக்
கும்போது என் தாய் தந்தையர் பரலோக
பிராப்தியடைந்தார்கள். அவர்களுடைய மர
ணத்துக்குப் பிறகு என்னை ஆதரித்துக் காப்
பாற்ற ஒருவருமில்லாதபடியால் அங்குமிங்கும்
அலைந்து திரிந்து கடைசியாய் அநாதப் பிள்ளை
களைத் தாபரிக்கும் ஓர் மடத்தில் போய்ச் சேர்
ந்து ஞானோபதேசம் முதலிய வேத சத்தியங்
களைப் படித்துணர்ந்து புதுநன்மை வாங்கப்
பாக்கியம் பெற்றேன். சுமார் பதினைந்து வய
துப் பையனாயிருக்கும்போது, புத்திகெட்ட
தனமாய் மடத்தை விட்டுவிட்டு, ஓர் உத்தி
யோகஸ்தனோடு சேர்ந்துகொண்டு எஜிப்து தே
சத்திற்கு ஓடிப்போனேன். அத்தேசத்திலு
ள்ள மாட மாளிகைகளையும், கூட கோபுரங்க
ளையும், விஜித்திர விநோதங்களையும் கண்டவு
டனே, இளமையில் நான் சிறிது அப்பியாசஞ்
செய்திருந்த சித்திர வேலையின்மேல் ஆசை
கிளம்பினது. ஆசைக்கு இசைந்து சித்திரம்



எழுத ஆரம்பித்தேன். கொஞ்சத்துக்குள்
கைதேர்ந்த சித்திரக்காரனானேன். ஆனால் இந்
தப் பராக்குகள் நடுவிலே, அந்தி சந்தி ஜெபம்,
ஞாயிற்றுக்கிழமைப் பூசை, பாவசங்கீர்த்தனம்,
திவ்யநன்மை, இது போன்ற ஞானக்காரியங்க
ளெல்லாம் அறவே ஒழிந்தது. அக்காலத்தில்
கிறீஸ்துவன் என்கிற மணமும் என்னிடத்தில்
கிடையாது. பற்றுக்குறைக்கு கிறீஸ்து வேத
த்தை மறுதலித்து மகமதிய மதத்தில் உட்பட்
டேன். சில வருஷங்களுக்குப்பிறகு இம்மதம்
கசந்துபோகவே, யூத வேதத்தில் சேர்ந்தேன்.
நாளாவட்டத்தில் இதிலும் சலிப்படைந்து
கடைசியாய்ப் பதிதனானேன்.

இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியில் என் ஜென்ம
தேசமாகிய பிராஞ்சு தேசத்திற்குத் திரும்பி
வந்து, ஊர் ஊராய் நாடோடியாய்ச் சுற்றித்
திரிந்து, சித்திரங்கள் எழுதி, விற்றுக் காலட்
சேபஞ் செய்துகொண்டு வந்தேன். இப்படி
யிருக்குந்தருணத்தில் ஏதோ ஒருநாள் லயன்ஸ்
நகரை விட்டு வில்லவிரான்ஷ் என்கிற அயலூ
ருக்குப் புகைவண்டி மார்க்கமாய்ப் பிரயாணம்
போகும்போது, இளமைப் பருவத்தில் எனக்கு
அறிமுகமாயிருந்த ஓர் சிநேகிதனை நானிருந்த
அதே வண்டியில் தேவாதீனமாய்க் கண்ணுற்று

சந்தோஷப்பட்டு, இருவருமாக ஒருவர் ஒருவருக்கு சம்பவித்த பழைய கதைகளைப்பற்றிப் பேசிக்கொண்டு, வந்தபிறகு, இருவரும் அதே ஊரில் இறங்கினோம். அங்கிருந்து நான் போக வேண்டிய மார்க்கம் வேறு. என் சிநேகிதன் போகவேண்டிய மார்க்கம் வேறு. அப்போது என் சிநேகிதன் அருளப்பன் என் பரிதாப நிலைமையைக் கண்டுணர்ந்தவனாய், என்னைப் பார்த்துத் தந்திரமாய், "நான் ஆர்ஸ் ஊருக்குப் போகிறேன். என்கூட நீ வருவாயா? வந்தால் புதுமை செய்யும் குருவானவரைக் காட்டுகிறேன்" என்றான்.

இதைக் கேட்டவுடனே நான் குலுங்க குலுங்கச் சிரித்துக்கொண்டு: "ஓகோ! புதுமையா? புதுமைக்கும் நமக்கும் வெகுதூரம். இதை நம்பத்தக்க பேர்வழி நானல்ல" என்று சொல்ல, அருளப்பன்: "சும்மா வா, விசுவாசம் தன்னிலே உன்னிருதயத்தில் உண்டாகும்." அதற்கு நான் இணங்காமல்: இதெல்லாம் வீண் பேச்சு, நானாவது விசுவசிக்கவாவது, நான் விசுவசித்தால், இதுவே பெரிய புதுமையாகும். வேறே புதுமை வேண்டியதில்லை. ஆயினும் இறுதியில், நூதனப் பிரியத்தினாலும், என்னுடைய தொழிலுக்கு ஏதேனும் ஆதாயம் கிடைக்கு



மென்கிற நோக்கத்தினாலும், தூண்டப்பட்டு ஆர்ஸ் ஊருக்கு என் சிநேகிதனோடு போகச் சம்மதித்தேன்.

அப்படியே இருவருமாகப்புறப்பட்டு, ஆர்ஸ் ஊரில் வந்து, இரவில் ஓர் விடுதியில் தங்கி சாப்பிட்டுவிட்டு, நித்திரை போனோம். காலையில் எழுந்திருந்து முடிக்க வேண்டிய கருமங்களையெல்லாம் செய்து முடித்த பிறகு, அருளப்பன் என்னை நோக்கி: "ஒரு காரியம் கேட்கிறேன், அது செய்வாயா? செய்யும் பட்சத்தில் எனக்கு நிரம்பவும் சந்தோஷம், உண்டாகும்" என்றான்.

அதற்கு நான் பிரத்தியுத்தாரமாக: "ஏதப்பா, அருளப்பா, உன்னோடு வந்தது சங்கட்டமாயிருக்குதே" என்க, என் சிநேகிதன் சொல்லுவான்: "பிரமாதம் ஒன்றுமில்லை. என்னோடு பூசைக்கு வருகிறாயா?"

"பூசையும், கீசையும், புதுநன்மை வாங்கின நாளோடு, இதெல்லாம் காற்றாய்ப் பறந்து போச்சுது. இதை விட்டுவிட்டு வேறே காரியமிருந்தால் சொல்."

அருளப்பன்: "சிநேகிதா! ஏன் இவ்வளவு கனகோபம். யார் உன்னைத் தொந்தரவு பண்

னுகிறது? சும்மா, என்னோடே கோவிலுக்கு வாவென்று தானே சொல்லுகிறேன். இதனால் உனக்கென்ன நஷ்டம்? பீடத்தின் அருகாமையில் முதலாய் வரத் தேவையில்லை. நான் உனக்கு ஓர் மூலையைக் காட்டுகிறேன். அங்கே சொகுசாய் உட்கார்ந்துகொள். இடத்தை விட்டு அசையாதே. ஆனால் நீ செய்யவேண்டியது ஒரே ஒரு காரியம். கூரோதார்ஸ் பூசை ஆயத்தம் தரித்துக்கொண்டு பீடத்துக்கு வரும்போது அவருடைய முகத்தை நன்றாய் உற்றுப்பார். இதுதான் வேறொன்றுமில்லை."

இதைக் கேட்டதும், இதென்ன! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாப் போலிருக்கிறதே, என்று நினைத்துக்கொண்டு, சிநேகிதனுடைய அலட்டைப் பொறுக்கமாட்டாமல், சரி, அருளப்பா, உன் மனதுபோல் செய்கிறேன், என்று சொன்னேன்.

இதன்பிறகு இருவரும் கொஞ்சத் தூரத்துக்கப்பாலிருந்த கோவிலுக்குப் போனோம். கோவிலுக்குள் நுழைந்ததும், அருளப்பன் என்னை ஓர் மூலையில் சங்கீஸ்துக்கு சரி நேராயுள்ள ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டிச் சொல்வான்: "இதோ இதுதான் உன் இடம்; இதை



விட்டு அசையாதே. கூரோதார்ஸின் முகத்தைக் கட்டாயம் பார்க்கவேணும், மறக்காதே."

குறித்த நேரத்தில் குருவானவர் பூசை வஸ்திரம் அணிந்துகொண்டு, சங்கீஸ்தைவிட்டு, திவ்ய பலிப்பூசை செய்ய பீடத்தைநோக்கி வந்தார். நான் கொடுத்த வாக்குத் தவறாமல், இரண்டு கண்களையும் விரியத் திறந்துகொண்டு குருவானவரை உற்றுப்பார்த்தேன். தற்செயலாய், அவருடைய இரு நேத்திரங்களும் என் பக்கமாய்த் திரும்பின. ஒரே பார்வைதான்! ஓ! ஆச்சரியமே!

அருளும் தயையும் அன்பும் நிறைந்த அந்த அற்புதப் பார்வையானது, என் இருதயத்தை ஊடுருவிச் சென்று என்னை முற்றிலும் வேறு மனுஷனாக்கிவிட்டது. அந்நேரத்தில் என் உள்ளாந்தரத்தில் நடந்தவைகளை என்னென்றுரைக்க! என்னையறியாமல் என் தலை கவிழ்ந்தது. என் கண்களை இரு கரங்களால் மூடிக்கொண்டு பூசைநேரம் முழுவதும் பிரஞ்ஞையற்றுக் கிடந்தேன். பூசை முடிந்ததும் மூர்ச்சை தெளிந்து, தலையை நிமிர்த்திப்பார்த்தேன். அப்போது ஜனங்கள் கும்பல் கும்பலாய் சங்கீஸ்தைநோக்கிப் போனார்கள். இந்தக் கூட்டத்

தைவிட்டு வெளியேபோகப் பிரயாசப்படுகையில், "நீ வெளியே போகிறாயா? நீ வெளியே போகிறாயா?" என்ற ஓர் அசரீரி வாக்கு என் காதில் நாராசம்போல் பாய்ந்தது. எங்கே இருந்து இந்த சத்தம் வந்ததோ நானறியேன். அதே நேரத்தில் ஏதோ பாரமான கை ஒன்று என் தோளை அமிழ்த்தி, ஓர் பக்கமாய் என்னைத் தள்ளிக்கொண்டு போனது. அதன்பிறகு என்னையறியாமலே நான் கூரேதார்ஸ் சமுகத்தில் நிற்கக் கண்டேன். அவர் என்னைப் பார்த்தார். நான் அவரைப் பார்த்தேன். "சுவாமீ, ஏதோ ஒரு கனமான சுமை என்னைக் கீழே யிறுத்தி விழத்தாட்டும்போல் தோன்றுகிறது" என்று குளறினேன்.

அப்போது இதுவரையில் நான் கேட்டிராத ஓர் மதுர வசனம் என் காதில் விழுந்தது. "ஆ என் சிநேகிதனே, கூடிய சீக்கிரம் இந்தப் பாரத்தை இறக்கிவிட வேண்டும். முழந்தாளிலிருந்து உன் சீவிய வரலாற்றை எனக்குச் சொல். தயாளம் நிறைந்த நல்ல ஆண்டவர் உன் சுமையை இறக்கிவிடுவார். ஏனெனில் அவர் "வருந்தி சுமை சுமக்கிற சகலரும் நமது அண்டையில் வாருங்கள், நாம் உங்களைத் தேற்றுவோமென்று அழைக்கிறாரல்லோ."



இவ்வினிய மொழிகளைக்கேட்ட நான் தக்ஷணமே முழந்தாளிலிருந்தேன். நான் சீவிய காலபரியந்தம் கட்டிக்கொண்ட சகல அக்கிரமங்களும், துரோகங்களும், அச்சமயத்தில் எனக்குப் பட்டப்பகல்போல் வெட்டவெளியாய்ப் புலப்பட்டன. புதுநன்மை வாங்கின நாள் முதற்கொண்டு நான் கட்டிக்கொண்ட சகல பாவங்களையும் ஆதியோடந்தமாய் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தவே, இந்நாளீறாக என்னை இறுத்திக்கொண்டிருந்த பாரச்சுமை என்னைவிட்டு நீங்கியது. ஊதாரிப்பிள்ளையை ஏற்றுக்கொண்ட நல்ல தகப்பன் அகமகிழ்ந்ததுபோல இந்த அர்ச்சியசிஷ்டவரும் அகமகிழ்ந்து, "ஆ, சர்வேசுரன் எவ்வளவு நல்லவர். உன்னை எம்மாத்திரம் சிநேகிக்கிறார்" என்று பலமுறை சொல்லிக்கொண்டு கண்ணீர் சிந்தி அழுதார். அப்போது என் கண்ணில் ஒரு சொட்டுத் தண்ணீரும் ததும்பவில்லை. ஆனால் அவர் சொன்னபடி அர்ச். பிலோமினம்மாள் பாதத்தில் விழுந்து வேண்டிக்கொள்ளும்போது மாலைமாலையாய்க் கண்ணீர்விட்டு அழுதேன். மறுநாள் திவ்வியபூசை கண்டு சம்மனசுக்களின் அப்பத்தை அருந்தினேன். கூரேதாரின் ஒரோ பார்வை என்னை இரட்சித்தது.

இரக்கம் நிறைந்த சர்வேசுரனுக்கு நித்திய ஸ்தோத்திரமும் நமஸ்காரமு முண்டாகக்கடவது.

மர்ய்வியா என்கிற சித்திரக்காரன் இனி ஊர் ஊராய்ச் சுற்றவில்லை. ஆர்ஸ் ஊரிலேயே குடியிருந்து தன்னை முழுதும் சர்வேசுரனுடைய ஊழியத்துக்குக் கையளித்தான். இரண்டு வருஷத்துக்குப் பிறகு கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுப் பாக்கியமாய் மரித்துப் பரலோக பிராப்தியடைந்தான்.

1856-ம் ௵ மே-மாதம், கூரே தார்ஸ் ஒரு பெரிய பாவியை மனந்திருப்பினார். இடைவிடாமல் தேவ தூஷணம் கக்கிக்கொண்டிருந்த, 80 வயதுள்ள ஒரு படுகிழவன் ஆர்ஸ் ஊருக்கு வந்திருந்தான். சர்வேசுரனுடைய திரு நாமத்தை யென்கிலும், கூரே தார்ஸ் பெயரையானாலும் கேட்டால், அக்கிழவன் உடனே கோபாவேசங்கொண்டு, வாயில் வந்தபடி திட்டுவான். அவன் நமது அர்ச்சியசிஷ்டவரை கள்ளஞானி, பில்லிசூனியக்காரன், மந்திரவாதி, தந்திரக்காரன், என்று இப்பேர்க்கொத்த வசைச் சொற்களை அடுக்கிச் சொல்லிப் பழிப்பான். கூரே தார்ஸ் இவனுடைய நிர்ப்பாக்கிய நிலைமையை



அறிந்து, அவனை மனந்திருப்புவதற்கு எடுத்த உபாயத்தைக் கேளுங்கள். அவனைக் கோவிலுக்காகிலும், அறைவீட்டுக்காகிலும் கூட்டிக்கொண்டு வருவது கூடாத காரியமென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். பிடிவாதக் கிழவனோடு வாக்குவாதம் பண்ணுவது பிரயோஜனமில்லை யென்பதும் அவருக்குத் தெரியாத காரியமல்ல. ஆகையால் கூரே தார்ஸ் கிழவனிருந்த இல்லிடத்துக்கு திடீரெனப் போய் அவனிருந்த அறைக்குள் சென்று, அவன் காலடியில் முழங்காலிலிருந்து, கைப்பான கண்ணீர் சிந்தி, "என் சிநேகிதனே, உன் ஆத்துமத்தை இரட்சித்துக்கொள், உன் ஆத்துமத்தை இரட்சித்துக்கொள்" என்று பிரலாபித்தார். இதைக் கண்டவுடனே கிழவன் தனது நிர்ப்பாக்கிய ஸ்திதியை அறிந்து, மனதுருகி, கண்ணீர்விட்டழுது, பிரியதத்தமந்திரம் சொல்லத் துவக்கினான். பிறகு தேவதாயாருடைய உதவியினால் நல்ல பொதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்யசற்பிரசாதத்தை உட்கொள்ளப் பாக்கியம் பெற்றான்.

ஒரு நாள் கூரே தார்ஸ் சங்கிஸ்துக்குள்ளிருக்கும்போது, ஒருவன் வெகு மினுக்கான உடைதரித்துக்கொண்டு, ஜம்பமாய் நடந்துகொண்டு

உள்ளே பிரவேசித்தான். கூரோதார்ஸ் இவனைக் கண்டதும், பாவசங்கீர்த்தனத் தொட்டியைச் சுட்டிக் காண்பித்தார்.

இந்தச் சயிக்கினையின் அருத்தத்தை முற்றிலும் விளங்கிக்கொண்ட அந்த டம்பாச்சாரி: குருவே, நான் பாவசங்கீர்த்தனம்பண்ண வரவில்லை. உம்மோடு நியாயாதாரங்களை எடுத்தோதி தர்க்கம்செய்ய வந்திருக்கிறேன்.

"சிநேகிதா, அப்படியானால் என்னிடம் வந்தது பெரிய தப்பிதம், நான் தர்க்கசாஸ்திரியல்ல. ஆனால் உனக்கு ஆறுதல் வேண்டுமானால், இதோ பார் பாவசங்கீர்த்தனத் தொட்டி. அநேகம்பேர் இதற்கு முன்னால் அங்கே முழந்தாளிலிருந்து எழுந்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் கஸ்திப்பட்டதில்லை."

"சுவாமி, நான் பாவசங்கீர்த்தனத்துக்கு வரவில்லையென்று முன்னமே சொன்னேனல்லவா. என்னிடத்தில் விசுவாசமென்பது கிஞ்சித்துமில்லை. அப்பேர்ப்பட்ட நான் பாவசங்கீர்த்தனத்தையென்கிலும், வேறெந்த ஞானக் காரியத்தையென்கிலும் விசுவசிக்கிறதில்லையென்று வாய் திறந்து சொல்லவும் வேண்டுமா?"



"ஆ! என் மித்திரனே! உன்னிடத்தில் விசுவாசமில்லை! என்ன பரிதாபமான காரியம்! அப்படியானால் உன்னைச் சுற்றிக் கார்இருள் அடர்ந்திருக்கவேண்டும். ஞானோபதேசம் கற்றிருக்கிற குழந்தைக்கு உன்னைப்பார்க்கிலும் அதிக ஞானமிருக்கிறது. இதுவரையில் நான் தான் பெரிய மூடனென்று எண்ணியிருந்தேன். ஆனால் இப்போது, என்னைப் பார்க்கிலும் பெரிய மூடனிருக்கிறானென்று அறிந்துகொள்ளுகிறேன். ஏனெனில் சகலரும் அறியவேண்டிய மூல சத்தியங்கள் முதலாய் உனக்குத் தெரியாது. உன்னிடத்தில் விசுவாசமில்லை! இதற்காகவே நான் உன்னைத் தொந்தரவு செய்யப் போகிறேன். நான் செய்வதெல்லாம் உன் நன்மைக்காகவே. சரி, முழந்தாளிலிருந்து, பாவசங்கீர்த்தனஞ் செய். அப்பால் உனக்கு விளைந்த நன்மை எம்மாத்திரமென்று அறிந்துகொள்வாய்."

"இதென்ன கூத்து! நான் பாவசங்கீர்த்தனம்பண்ண வரவில்லையென்று பலதடவை சொல்லியும், நீர் கண்டுபிடிக்க வில்லையா? பாவசங்கீர்த்தனப் பேச்சைப் பேசாதேயும்."

அர்ச்சியசிஷ்டவர் தேவ உதவியை இரந்து மன்றாடினபிறகு, அன்புடனும், சர்வேசுரனு

டைய பிரதிநிதிக்குரிய அதிகாரத்துடனும் அவனை நோக்கிச் சொல்வார்: "நாம் சொல்வதைக் கேள். உடனே, தாமதமின்றி முழந்தாளிலிரு."

இந்த வார்த்தைகளும், அவருடைய குரற் சப்தமும், முகக்குறியும் இவனை எம்மாத்திரம் மாற்றினதென்றால், அட்சணமே தன்னையறியாமலே முழந்தாளிலிருந்து சிலுவை வரைந்து, தன் பாவங்களை அறிக்கையிடத் துவக்கினான்.

பாவசங்கீர்த்தனஞ் செய்து முடிந்ததும், இவனுடைய ஆத்துமத்திலிருந்த அந்தகார இருள் நீங்கிப்போக, வரப்பிரசாதத்தின் பிரகாசக்கதிர் புகுந்து, விசுவாசம் என்கிற தீபத்தையேற்றி, அவனை சர்வேசுரனுடைய உகந்த பிள்ளையாய் மாற்றிவிட்டது, ஒரு மணி நேரத்துக்குமுன் அவிசுவாசியாய், அந்தகாரப் பசாசின் வலையில் சிக்குண்டவனாய், மனக்கலக்கமுடையவனாய் வந்தவன், இப்போது விசுவாசியாய், பிரகாசத்தேவனின் புத்திரனாய், மனரஞ்சிதமுடையவனாய் வெளியே வந்தான். வந்தவுடனே சூழநின்றவர்களைப் பார்த்து: "ஆ! இந்தக் கூரோதார்ஸ் சாதாரண மனுஷனல்ல. இவர் பேசினதுபோல என்னிடம் வேறொருவ



ரும் பேசினதில்லை. இவர் செய்த பிரகாரம் செய்யாதிருந்தால் நான் ஜென்மா ஜென்மத்திலும் பாவசங்கீர்த்தனஞ் செய்திருக்க மாட்டேன், சர்வேசுரனுக்கு நித்திய ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது" என்று உள்ளங் குளிர்ந்து முகமலர்ந்து சொன்னான்.

இதுவரையில் நாம் விவரித்துக் காட்டினதைக்கொண்டு, கூரோதார்ஸின் இருதயத்தை முற்றிலும் கொள்ளைகொண்டது பாவிகளை இரட்சிக்க வேண்டுமென்கிற பேராவல் என்றும், அதற்காக அவர் கையாடின முக்கியமான எத்தனம் பாவசங்கீர்த்தனம் என்றும் வெள்ளிடை மலைபோல தெட்டத்தெளிய கண்டுகொள்ளுகிறோமல்லவா. சகல குருக்களும் கண்டு பாவிக்கவேண்டிய மாதிரிகையும் இதுவே.

கூரோதார்ஸ் மரிக்கிறதற்கு சில நாளைக்கு முன்னே அவருடைய சிநேகிதர்களில் ஒருவன் ஆத்தும ஈடேற்றத்துக்கடுத்த ஓர் பரோபகாரச் செயலைச் செய்வதைக்குறித்து ஆலோசனை கேட்டபோது, அவர் அதை மனப்பூர்வத்துடன் அங்கீகரித்து, அதற்கு அத்தாட்சியாக அவர் சொன்னதாவது: நான் இதைப்போன்ற

ஓர் விஷயத்தில் சிந்தையா யிருக்கும்போது அர்ச். பிலோமினா, அழகே உருவெடுத்து வந்தாப்போல தேஜோமயமாய்த் துலங்கி, மோட்சத்தினின்று இறங்கி, பிரகாச முகிலினால் மூடப்பட்டவளாய், எனக்குத் தோன்றி, "நீ செய்கிற அலுவல் நல்லது; ஏனெனில் ஆத்துமாக்களை இரட்சிக்கிற அலுவலைப் பார்க்கிலும் மேலான அலுவல் வேறொன்றுமில்லை" என்று திருவாய் மலர்ந்தருளினாள்.

"தவறின வழியினின்று பாவியை மனந்திரும்பச் செய்தவன் அவனுடைய ஆத்துமத்தை மரணத்தினின்று இரட்சித்துத் திரளான பாவங்களை மூடுவானென்பது" வேத வாக்கியமானபடியால், நாமும் கூரேதார்வின் முன்மாதிரிகையைக் கண்டுபாவித்து நம்மால் இயன்றமட்டும், நம்முடைய நன்னடக்கையினாலும், நற்கிருத்தியங்களினாலும், விசேஷமாய் நமது ஜெபதபத்தினாலும், தான தர்மத்தினாலும் அநேக ஆத்துமாக்களை இரட்சிக்கப் பிரயாசப்படக்கடவோமாக.

## 19-ம் அதிகாரம்.

### அவருடைய பாக்கியமான மரணமும், வெற்றிமுடியும்.

1859-ம்௵ மே மாதத்தில் ஒரு நாள் பிரசங்கம் பண்ணும்போது, தமக்கு மரணம் கிட்டியிருக்கிறதென்று பூரணமாய் அறிந்தவராய் பின்வருமாறு சொன்னார்: "மோசஸ் சாகுந் தருணத்தில் தேவப்பிரஜைகளை தமது சமுகம் வரச்செய்து, சர்வேசுரன் அவர்களுக்குச் செய்த சகல உபகாரங்களை நினைப்பூட்டி, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பூமியை சுட்டிக் காண்பித்து, கடைசிவரையில் பிரமாணிக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். என தருமை மைந்தர்களே! நல்ல ஆண்டவர் உங்களுக்கும் எத்தனையோ உபகாரங்களைச் செய்திருக்கிறார். உங்களைப்போல பாக்கியம் பெற்றவர்கள் மகா சொற்பப்பேர். உங்கள் பையன்களுக்குக் கற்றுக்கொடுக்கத் திருக்குடும்ப சகோதரர்களும், உங்கள் பெண் குழந்தைகளைப் படிப்பிக்க கன்னியாஸ்திரிகளும், உங்களுக்குப் புத்தி பிரசங்கம் செய்து மோட்ச வழியைக்காட்டக் குருக்

களுமிருக்கிறார்கள். பிள்ளைகளே! நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள். சர்வேசுரன் யாருக்கு அதிகம் கொடுத்தாரோ அவர்களிடத்தில் அதிகம் கேட்பாரல்லோ.

நான் உங்களிடத்தில் கோவிலுக்காக ஏதாகிலும் கேட்டால் நீங்கள் இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக நான் மிகவும் நன்றியறிந்திருக்கிறேன்.

"எனக்குச் செய்ததுபோலவே என்னுடைய துணைக் குருவானவருக்கும் செய்வீர்களாக."

அந்த வருஷம் ஜூன் மாதம் வேனிற்காலம் மகா உஷ்ணமாயிருந்தபடியாலும், சரீரம் மிகவும் தளர்ந்து மெலிந்துபோயிருந்தபடியாலும், முன்போலவே சுமார் 15-மணி நேரம் நாடோறும் பாவசங்கீர்த்தனத் தொட்டியில் செலவழித்துவந்தபடியினாலும், பலமுறை சோர்ந்து மூர்ச்சையாய் விழுந்தது ஆச்சரியமல்ல.

இச்சமயத்தில் அவரோடுகூட இருந்த சங். மொனேன் அவரைப் பார்த்து சற்று இளைப்பாறுங்கள் என்று சொன்னபோதெல்லாம் அவர் எப்போதும் சொன்ன மறுமொழியாவது: "மோட்சத்தில் நித்திய காலம் இளைப்பாறலாம்." ஜூலை மாதம் 29-ம் தேதி வழக்கம்போல, திவ்ய



பூசை செய்து, ஞானோபதேசம் கற்றுக்கொடுத்து, 15-மணி நேரம் பாவசங்கீர்த்தனத்தொட்டியிலிருந்துவிட்டு, அறைவீட்டுக்கு வந்து சேர்ந்ததும், களைப்பினால் சோர்ந்துபோய், "இனிமேல் என்னால் கூடாது" என்று சொல்லிக்கொண்டு, நாற்காலியில் சாய்ந்தார். நடுச்சாமத்துக்குப்பிறகு ஒரு மணிக்கு நாடோறும்போல எழுந்திருந்து கோவிலுக்குப்போக எத்தனித்தபோது ஒருவித மயக்கமுண்டானபடியால் உதவிக்குப் பக்கத்திலிருந்த குருவானவரைக் கூப்பிட்டார்.

"சுவாமி மிகவும் களைப்பாயிருக்கிறீர்களல்லவா?"

"ஆம். முடிவு நெருங்கிவிட்டது.

"மற்றவர்களைக் கூப்பிடட்டுமா?

"வேண்டாம். அவசரமில்லை."

விடிந்தவுடனே பூசை செய்வதைப்பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லை. ஏனெனில் எழுந்திருக்கமுதலாய் அவருக்குச் சக்தியில்லை.

அன்றையத்தினம் கூரேதார்ஸ் பாவசங்கீர்த்தனத்தொட்டிக்கு வராமலிருந்ததைக் கண்ட ஜனங்களின் ஆச்சரிய பிரமிப்பு மெத்த. அவர் கடின வியாதியாயிருக்கிறாரென்று கேள்விப்

பட்டவுடனே அவர்களுடைய துக்கத்துக்கு மட்டில்லை. பெற்ற தகப்பன் வியாதியாயிருந்தால் பிள்ளைகள் எடுத்துக்கொள்ளும் சிரமத்தைப் பார்க்கிலும், ஆர்ஸ் ஊர் ஜனங்கள் தங்கள் ஞானத்தந்தைக்காக எடுத்துக்கொண்ட சிரமம் மீசுரம்.

கூரேதார்ஸ் படுத்திருந்த அறையில் உஷ்ணம் தணிந்து குளிர்ச்சியாயிருக்கும்படியாக, சிலர் ஓயாமல் முகட்டின்மேல் தண்ணீர் ஊற்றிக்கொண்டேயிருந்தார்கள். முப்பது வருஷக் காலமாய் இவருடைய மனமொத்த நேசராகிய கோந்தே கரே என்பவர் இராப்பகலாய் இவருடைய படுக்கையைவிட்டு அசையவில்லை. நாலாபக்கமும் அவருக்காக ஜெபங்கள் செய்தார்கள். திருஸ்தலங்களைச் சந்தித்தார்கள். அவர்கள் வேண்டிக்கொள்ளாத அர்ச்சியசிஷ்டவர்கள் ஒருவருமில்லை.

அவரைச் சூழநின்றவர்கள் அவரைப் பார்த்து: "எட்டுவருஷத்துக்கு முன்னே, சுவாமி, நீங்கள் சாகிறதருவாயிலிருக்கும்போது உங்களைப் புதுமையாய்க் குணப்படுத்தின அர்ச். பிலோமினம்மாளை நோக்கி எங்கள் சத்துவமெல்லாங்கூட்டி வேண்டிக்கொள்ளப் போகி




றோம். கன்னியும் வேத சாட்சியுமான அப்பேருபகாரி மீண்டும் இந்த விசை உங்களுக்கு ஆரோக்கியம் கொடுப்பாளென்று நம்பியிருக்கிறோம்" என்று சொல்ல, அதற்கு அவர் பிரத்தியுத்தரமாக "ஆ! இந்த விசை அர்ச். பிலோமினை ஒன்றுஞ் செய்யப்போகிறதில்லை" என்றார்.

ஆகஸ்டு மாதம் 3-ம்தேதி செவ்வாய்க்கிழமை சாயங்காலம் அர்ச்சியசிஷ்டவர் தமக்குக் கடைசித் தேவதிரவிய அநுமானங்களை அட்டியின்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்மேல், அப்படியே குருக்களும், ஏராளமான ஜனங்களும் படுக்கையைச் சுற்றி முழங்காலிலிருக்க, மகா பக்திவிநயத்துடன் வழித்துணை ஆகாரமாகிய திவ்ய சற்பிரசாதநாதரைக் கடைசிவிசை உட்கொண்டார்.

கொஞ்சநேரத்துக்குப் பிறகு அவருடைய இரு திருபாநேத்திரங்களினின்று ஆனந்தக்கண்ணீர் வழிந்தோடியது. இக்கண்ணீர்க் கணவாயில் அவர் சிந்தின கடைசிக் கண்ணீர் இதுவே. இந்தவேளையில் கூரேதார்ஸின் அந்நியோந்நிய நண்பரான அவருடைய மேற்றிராணியார் மகா சங். லாங்கலரி ஆண்டவர் தமது உற்ற நேசரைப் பார்க்கும்படி விரைந்து தீவிரித்து வந்தார். இரு சிநேகிதரும் கடைசிவிசை இவ்வுலகத்தில்

ஒருவர் ஒருவரை மனங்கனிய உற்றுநோக்கி
பரலோக இராச்சியத்தைப்பற்றிப் பேசினார்
கள். புதன்கிழமை அதிகாலை இரண்டுமணி வே
ளையில் அர்ச்சியசிஷ்டவரின் இணைபிரியாத நே
சர் சங். மொனேன் அவருடைய தலைமாட்டின
ருகில் முழங்காலிலிருந்து, "சர்வேசுரனுடைய
அர்ச்சியசிஷ்ட சம்மனசுக்கள் அவரை எதிர்
கொண்டுவந்து, பரலோக ஜெருசலேமா நகரு
க்கு இட்டுக்கொண்டு போகிறார்கள்" என்று



ஜெபிக்கும்போது ஜான்மரி பாப்திஸ் வியான்னி
தமது தூய ஆத்துமத்தை சிருஷ்டி கர்த்தரிட
த்தில் ஒப்படைத்தார். சாகும்போது அவருக்கு
வயசு 73. குருப்பட்டம் பெற்று 44 வருஷம்.



நாற்பத்தொரு வருஷகாலமாய் பொன்மலை
உச்சியின் மேல் செஞ்சுடர் வீசும் தீபம்போல
ஆர்ஸ் ஊரில் துலங்கி, கணக்கற்ற பாவிகளின்
பாவ அந்தகாரத்தை நீக்கி, பாவசங்கீர்த்தனத்
தின் வழியாய் வரப்பிரசாதமென்னும் தெள்
ளிய கிரணங்களை ஆத்துமங்களில் புகுத்தி,
ஞான ஆதித்தனாகிய சர்வேசுரனுடைய பிள்ளை
களாக மாற்றி மோட்ச பாதையைக் காண்பிக்
கும் வழிகாட்டியாயிருந்தபின், குறிக்கப்பட்ட
நேரம் வந்தவுடனே பரலோக இராச்சியத்திலே
நித்தியகாலம் மங்கா ஒளியுடன் சதா ஒளிரும்
தாரகைகளுக்குள் ஒன்றாய் இலங்கி ஒளிரும்படி
மோட்சத்துக்கு ஏகினார்.

அர்ச்சியசிஷ்டவர் இறந்துபோனார் என்கிற
துக்க செய்தி மனோவேகமாய் ஊரெங்கும் பர
வினது. உடனே சகலரும் நீர்ததும்பிய கண்
களுடன், "ஐயோ எங்கள் நல்ல தகப்பன் மரி
த்தாரா, எங்கள் நல்ல மேய்ப்பன் போய்விட்
டாரோ, எங்கள் அர்ச்சியசிஷ்டவர் இறந்துபோ
னாரோ" என்று சொல்லிக்கொண்டு, அவரு
டைய பரிசுத்த திருமேனியைப் பார்க்கும்படி
கூட்டங்கூட்டமாய் ஓடிவந்தார்கள்.


திருக்குடும்பச் சபை சகோதரர்கள் இருவர்
விசுவாசிகள் கொண்டுவந்து கொடுத்த சுரூபம்

ஜெபமாலைகளை அர்ச்சியசிஷ்டவரின் சரீரத்தில் தொட்டு எடுத்துக்கொடுத்துக்கொண்டேயிருந்தார்கள்.

சனிக்கிழமைக் காலையில், அறைவீட்டிலிருந்து சரீரத்தை யெடுத்துக்கொண்டு கோவிலுக்குக் கொண்டுபோனார்கள். அடக்கத்துக்காக வந்திருந்த குருக்கள் 300 பேரும், பற்பல சபையைச் சேர்ந்த கன்னியர்களும், சகோதரர்களும், பல்லாயிரம் ஸ்திரீ பூமான்களும், அடக்கவொடுக்கத்துடன் ஜெபஞ்செய்துகொண்டு கோவில் வட்டாரத்துக்குள் வந்தவுடனே பவனி நின்றது. அப்போது எங்கும் நிர்சப்தமாயிருக்க, மகா சங். லாங்கலரி ஆண்டவர் அர்ச்சியசிஷ்டவரின் சடலத்துக்கு முன்பாக வந்து: "சவ்வாஸ், நம்பிக்கையுள்ள நல்ல ஊழியனே! உன் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி" (மத். 25-21) என்கிற வாக்கியத்தைப் பீடிகையாகக்கொண்டு, சூழநின்றவர்கள் மனங்கனிந்து உருகிக் கண்ணீர் சிந்தும்படியான விதமாய் கூரேதார்ஸின் பரிசுத்த ஜீவிய வரலாற்றையும், அவருடைய உச்சித புண்ணியங்களையும், அவர் செய்த புதுமைகளையும், பாவிகளுக்காக அவர் பட்ட வருத்தங்களையும், மோட்ச இராச்சியத்தில் அவர் அடையப்போகிற நித்



திய சம்பாவனையையும், அவருடைய வல்லபமுள்ள சலுகையையும் விளக்கிக்காண்பித்து ஓர் அமிர்த பிரசங்கஞ் செய்தார். இதன்பிறகு



பெரிய பாட்டுப்பூசை நடந்தது. பூசைக்குப் பின், அர்ச். ஸ்நாபக அருளப்பர் கோவிலிலிருந்த பாவசங்கிர்த்தனத் தொட்டிக்கருகாமையில் அவருடைய சரீரத்தை நல்லடக்கஞ் செய்தார்கள். ஜீவந்தராயிருக்கும்போது தினமானம் ஏறக்குறைய 15-மணி நேரம் செலவழித்து, கணக்கற்ற பாவிகளை சர்வேசுரனோடு சமாதானப்படுத்திய இவ்விடத்தில் அவருடைய திருமேனியை அடக்கஞ்செய்தது சரியே.

சங். மொனேன் சொல்லுமாப்போலே அர்ச்சியசிஷ்டவர்கள் மரித்தவுடனே அவர்களுடைய அப்போஸ்தல அலுவல் முடிந்துபோகிறதில்லை. அவர்களுடைய அர்ச்சியசிஷ்ட பண்டங்கள் அவர்கள் செய்துவந்த அலுவலைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகின்றன. கூரோதார்வின் கல்லறையில் மனந்திரும்பின பாவிகளின் தொகையும், நடந்தேறி வருகிற பிரபலியமான புதுமைகளும் இதற்குத் திறம்பாத அத்தாட்சியாமே.

ஒன்பதாம் பத்திநாதர் கூரோதார்வின் ஜீவிய நடபடிக்கைகளையும், அவர் செய்த அற்புதங்களையும் கேள்வியுற்று முத்திப்பேறு பெற்ற பட்டம் கொடுக்கிறதற்குமுன் திருச்சபை முறைமைப்பிரகாரம் செய்யவேண்டிய பரிசோதனையைத் துவக்கலாமென்று 1872-ம் ஆடு அக்டோபர் மாதம் 3-ம் தேதி உத்தாரமளித்தார்.

13-ம் சிங்கராயருடைய அரசாட்சியில் பரிசோதனையெல்லாம் முடிவுபெற்றது. ஆனால் கடைசியாய் வெற்றிமுடி சூட்டியவர் நமது பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதர். 1905-ம் ஆடு ஜனவரி மாதம் 8-ம் தேதி பிரான்சு தேசத்திலிருந்து வந்த மூன்று கர்தினால்மார்களும், அநேக மேற்றிராணிமார்களும், நூற்றுக்கணக்கான



குருக்களும், ஆயிரக்கணக்கான ஜனங்களும், உரோமைமா நகரிலுள்ள அர்ச். இராயப்பருடைய பிரமாண்டமான தேவாலயத்தில் கூடியிருக்க, முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்கும் கொண்டாட்டம் சிறப்பாலங்காரத்துடன் நடைபெற்றது.

தமது ஜீவியகால முழுவதும் தாழ்ச்சியை அணிகலமாகப் பூண்டவர் மரித்து 46 வருஷம் ஆகிறதற்கு முன்னே, நமது பீடங்களில் அவருடைய சுரூபத்தை ஸ்தாபித்து முத்திப்பேறு பெற்றவராகக் கொண்டாடி அவருடைய சலுகையை வேண்டிக்கொள்ளும்போது, "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்கிற வேதவாக்கியம் நமது ஞாபகத்தில் வருகிறதல்லோ.

முத்திப்பேறு பெற்ற பட்டம் அடைந்தது மாத்திரமல்ல, நமது பரிசுத்த பிதா 10-ம் பத்திநாதர் இவரைப் பங்குசுவாமிமார்களுக்கு விசேஷ பாதுகாவலாக நியமித்திருக்கிறார்.

(இவருடைய திருநாள் ஆகஸ்டு மாசம் 14-ம் தேதி என்றறிக).

# பொருள் அட்டவணை.


| அதிகாரம். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1 | பிறப்பும் குழந்தைப் பருவமும். ... | 1 |
| 2 | வாலிபப் பிராயத்தில் அவருக்கு நேரிட்ட இடைஞ்சல்கள் ... | 11 |
| 3 | கஷ்டப்பட்டுப் படித்துக் குருப்பட்டம் பெறுகிறார் ... | 20 |
| 4 | ஆர்ஸ் ஊர்ப் பங்கு சுவாமியாக நியமிக்கப் படுகிறார் ... | 30 |
| 5 | ஞாயிறுவாரம் அநுசரித்தல் ... ... | 42 |
| 6 | ஆர்ஸ் ஊர்த் தேவாலயம் ... ... | 47 |
| 7 | தர்மசாலை ஸ்தாபகம் ... ... | 58 |
| 8 | அவர் பசாசினால் அனுபவித்த துன்பங்கள் ... ... ... ... | 70 |
| 9 | அவர் புறத்தியாரால் அனுபவித்த துன்பங்கள் ... ... ... ... | 81 |
| 10 | சர்வேசுரன் அவருக்கு அனுப்பின துன்பங்கள் ... ... ... ... | 92 |
| 11 | அவருடைய அன்றாட அலுவல்.. ... | 101 |
| 12 | அவர் கடின வியாதிப்பட்டுப் புதுமையாய்க் குணப்பட்ட வர்த்தமானம் ... | 120 |
| 13 | அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்துக்குச் செய்யப்பட்ட மகிமை ... ... | 130 |
| 14 | அவருடைய சுபாவ இலட்சணங்கள் ... | 137 |
| 15 | அவருடைய புண்ணியங்கள் ... ... | 143 |
| 16 | அவருடைய புத்தி பிரசங்கங்கள் ... | 157 |
| 17 | ஷை (தொடர்ச்சி)... | 177 |
| 18 | அவர்செய்த பற்பல புதுமைகள் ... | 213 |
| 19 | அவருடைய பாக்கியமான மரணமும், வெற்றி முடியும் ... ... ... | 237 |